கோகுலம்

Gokulam

ஜுன் '91 ரூ. 3/-



In a class of its own

Exclusive pencils for one and all,



LION PREMIER® HB PENCILS


Sleek, Elegant, meant for executives and others, who like style A consistent dark tone for effortless writing - micronized lead for unbreakable points are what adds to its superiority.





LION PINKY® PENCILS


Lion 'PINKY' Pencils Pretty Perfect, Ideal for children because of its pretty designs & colours. Strongly bonded lead for unbreakable points and super smooth writing add to its attraction.





LION Geematic DRAWING PENCILS

Lion Geematic Drawing Pencils. A unit for all Professionals like artists, architects, designers & engineers. Give expertise an edge. Available in 14 grades from H to 6H and B to 6B HB and F



LION PENCILS LTD
95, Parijat, Marine Drive
BOMBAY 400 002

National-356

கோகுலம்

1991 ஜூன் மாத இதழ்
மலர் : 9 இதழ் : 5



அருமைச் சிறுவர் சிறுமியரே,

இந்த இதழ் உங்கள் கைகளில் தவழும் போது எல்லோரும் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருப்பீர்கள்.

கேளுங்கள் பகுதிக்கு மட்டும் தினந்தோறும் ஐம்பது கடிதங்களுக்குக் குறையாமல் வருகின்றன. பள்ளி ஆசிரியர்கள் பலர் கேளுங்கள் பகுதிக்குத் தாங்களும் கேட்கலாமா என்று எழுதிக் கேட்டுள்ளார்கள். இந்தப் பகுதிக்கு யார் வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம். அவர்களுடைய முழு முகவரியும் இருக்க வேண்டும் என்பதுதான் ஒரே நிபந்தனை. சிலர் தங்கள் பெயர் கோகுலத்தில் வர வேண்டும் என்பதற்காக, ஏற்கெனவே நன்கு தெரிந்த அதிலும் தங்கள் பாடப் புத்தகங்களிலேயே வந்துள்ள பகுதிகளுக்குக் கேள்விகள் கேட்கிறார்கள். இது மிகவும் பயனுள்ள பகுதி. இதற்கு அனுப்பப்படும் கேள்விகள் உங்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு இதற்கான கேள்விகளைக் கேளுங்கள்.

இந்த இதழில் நீங்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த புதிய தொடர்கதை ஆரம்பமாகிறது. இதை எழுதிய வி. ர. வசந்தன் ஏற்கெனவே உங்களுக்கெல்லாம் அறிமுகமானவர். பல பரிசுகளைப் பெற்றவர். 'மலைக்கோட்டை மர்மம்' உங்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளப் போவது உறுதி.

கோகுலத்தில் தாங்களும் ஏதாவது எழுத வேண்டும், தங்கள் பெயரும் வெளியாக வேண்டும் என்ற ஆர்வம் பலருக்கும் வளர்ந்து வருகிறது. கதைகள் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இதற்கான விளக்கத்தை எழுதினால் இதுவே ஒரு பெரிய புத்தகமாகிவிடும். ஆனாலும் ஒரு குறிப்பு. கதையில் வரும் நிகழ்ச்சி ஆசிரியர் அல்லது பெற்றோர்களை ஏளனம் செய்வது போல் இருக்கக் கூடாது. கதை ஏதாவது ஒரு நல்ல செய்தியை அல்லது நன்னெறியை மறைமுகமாகவாவது கூறும்படி இருக்க வேண்டும்.

எல்லோருக்கும் விடுமுறை வாழ்த்துக்கள். விடுமுறையைப் பயனளிக்கும்படி கழியுங்கள்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

சீதா கல்யாணம்



படக்கதை: வினு

16 பக்க வண்ணப் படக்கதை

கோகுலம்

ஜூலை இதழில்

இந்த இதழில்

அட்டை வண்ணப்படம்: யோகா.

...ளாசக்கில்தான் வேண்டும்!



மாலை நேரம்.

வீட்டுக் கூடத்தில் சோபாவில் ஒய்வாக அமர்ந்திருந்தார், சுந்தரம். சுந்தரத்தின் மனைவி சுமதி வேலைகளை முடித்துவிட்டு மற்றொரு சோபாவில் உட்கார்ந்து காலையில் வந்த செய்தித் தாளை இப்போது புரட்டிக் கொண்டிருந்தாள்.

கூடத்தின் ஒரு மூலையில் சிறிய மேசை முன்னே உட்கார்ந்து தன் புதிய புத்தகங்களுக்கு அட்டை போட்டுக் கொண்டிருந்தாள் மல்லிகா. மல்லிகா சுமதியின் மூத்த மகள். அந்த ஆண்டு தான் பத்தாம் வகுப்புக்குத் தேர்ச்சி பெற்றிருந்தாள்.

மல்லிகாவுக்கு அடுத்தவள் சரசு. அவள் எட்டாம் வகுப்புப் படிக்கிறாள். அவளுக்கு அடுத்தவன் செந்தில். அவன் ஆறாம் வகுப்புப் படிக்கிறான். சரசுவும் செந்திலும் கூடத்தை ஒட்டிய அறையில் இருந்தார்கள். இருவரும் ஒன்றாக வெளியே வந்து, அப்பா முன்னே நின்றார்கள்.

இருவரும் நின்ற தோரணையைப் பார்த்த சுந்தரம், ''என்ன ரெண்டு பேரும் ஒன்னா வந்திருக்கிறீங்க ? என்ன வேணும் ? சொல்லுங்க,'' என்று கேட்டார்.

''அப்பா, என் யூனிபார்ம் ரொம்பப் பழசாயிடுச்சு. போன வருஷம் தைச்சது. இப்போ இறுக்கமா இருக்கப்பா. அதனாலே புதுசா ரெண்டு செட் யூனிபார்ம் தைச்சுக் கொடுங்க.''

சரசு நிறுத்தியதும் செந்தில் ஆரம்பித்தான்.

''என் யூனிபார்மும் நிறம் மங்கி வெளுத்துடுச்சி. எனக்கும் ரெண்டு புது யூனிபார்ம வேணும்.''

அவ்வளவுதானா ? வேறே ஏதாவது வேணுமா ?'' என்று கேட்டார், சுந்தரம்.

''வேணும்பா. என் பேக் ரெண்டு தரம் கிழிஞ்சு தைச்சது. எட்டாம் வகுப்பிலே நெறைய புக்ஸ். அவ்வளவையும் திணிச்சா 'நான் கிழிஞ்சுடுவேன்'னு பயமுறுத்துது. எனக்குப் புது பேக் வேணும்மா.''

''எனக்குப் புது பேக் வேணாம். அலுமினியப் பெட்டி வாங்கிக் கொடுங்க. அதோட என் ஷூ பாலீஷ் போட்டாலும் பளபளக்காத அளவு பழசாயிடுச்சு. வேறே புது ஷூ வாங்கிக் கொடுத்திடுங்க.''

சரசுவும் செந்திலும் வேண்டுகோள் பட்டியலை விரிவாக்கிக் கொண்டிருக்க, மல்லிகா அவர்கள் பக்கம் திரும்பாமல் அட்டை போடுவதிலேயே கருத்தைச் செலுத்தினாள்.

மல்லிகா நல்ல பெண். 'எனக்கு அது வேணும் இது வேணும்' என்று எப்போதும் நச்சரிக்க மாட்டாள். ''உனக்கு என்ன வேணுமோ, வாங்கிக்கோ'' என்று அப்பா - அம்மா சொன்னாலும், ''எனக்கு எதுவும் வேணாம்'' என்று சொல்லி விடுவாள். அப்படியே அவளை வற்புறுத்தி, உனக்கு எந்த டிரஸ் வேணுமோ எடுத்துக்கோ' என்று சொன்னால், விலை குறைந்த டிரஸ்ஸாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து, ''ஹையா ! இது ரொம்ப நல்லாயிருக்கு. இதையே எடுத்துக்கறேன்'' என்பாள். சுருக்கமாகச் சொன்னால், மல்லிகாவால் பெற்றோருக்குத் தொல்லையே இல்லை.

மல்லிகா படிப்பில் கெட்டிக்காரி. மற்றவர்களுடன் பழகும் போது இனிமையானவள். எவருக்கும் உதவி செய்ய எப்போதும் முன்வருவாள்.

டாக்டர் பூவண்ணன்

சுந்தரமும் சுமதியும் மல்லிகாவை மகளாக அடைந்ததை நினைத்துப் பெருமை அடைவார்கள்.

சரசுவும் செந்திலும் புது யூனிபார்ம் வேண்டும் - ஷூ வேண்டும் என்று கேட்ட போது, மல்லிகாவின் காது அதைக் கேட்டதே தவிர, வாய் தனக்காக எதையும் கேட்கவில்லை.

''சரி! சரி! நீங்க கேட்டதை வாங்கித் தர்றேன். ஆனாக் கொஞ்சம் பொறுமையாயிருங்க. முதல் தேதி வந்ததும் வாங்கித் தர்றேன்!''

சுந்தரம் சொன்னதும், சரசுவும் செந்திலும் மகிழ்ச்சியால் துள்ளினார்கள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சுமதி, ''ஏங்க, இவங்க கேட்டதை வாங்கித் தர்றதாச் சொல்றீங்க. அதே நேரத்திலே வாய்மூடி மௌனியாய் இருக்கிற மல்லிகாவுக்கு ஏதாவது வேணுமான்னு கேக்கக் கூடாதா ?'' என்று கேட்டாள்.

''கேட்டா என்ன சொல்லுவா ? எனக்கு இந்த யூனிபார்ம் போதும். இந்த பேக் ஏழேழு ஜென்மத்துக்கும் போதும்னு சொல்லுவா,'' - சரசு கிண்டல் செய்தாள்.

''அக்கா ஒரு துறவி! அவளுக்கு எதுவும் வேணாம். அம்மா, இப்பவே சொல்றேன் கேட்டுக்கோங்க. திடீர்னு ஒருநாள் அக்கா ராமகிருஷ்ண மடத்திலேயோ, வேறே மடத்திலேயோ சேர்ந்துடுவா'' - செந்தில் ஜோஸ்யம் சொன்னான்.

சுந்தரம் மல்லிகா பக்கம் திரும்பினார். ''மல்லிகா, பத்தாம் வகுப்புக்குப் போயிருக்கே. உனக்கு ஏதாவது வேணும்னா கேளும்மா. வாங்கித் தர்றேன்,'' என்று சொன்னார்.

மல்லிகா அட்டை போடுவதை நிறுத்திவிட்டு அப்பாவையும் அம்மாவையும் மாறி மாறிப் பார்த்தாள்.

பெற்றோருக்கு அதுவே பெரிய அதிசயமாக இருந்தது.

''ஏதாவது வேணம்னா கேளும்மா'' என்று சொன்னதும், ஒரு நொடியும் தயங்காமல், ''எனக்கு எதுவும் வேணாம் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிடும் மல்லிகா இன்று மௌனமாக இருப்பது அதிசயந் தானே ?

அவள் தயக்கத்துக்குக் காரணம் என்ன ?

அவளுக்கு எதுவோ வேண்டும் ?

'அதைக் கேட்கலாமா வேண்டாமா' என்று யோசிக்கிறாள்.

இதைப் புரிந்து கொண்ட அம்மா, ''மல்லிகா! உனக்கு எதுவோ தேவைன்னு நினைக்கிறேன். என்ன வேணும் ? தயங்காமச் சொல்லும்மா ?'' என்று வற்புறுத்தினாள்.

''ஆமாம்! எது வேணுமானாலும் கேளு. வாங்கித் தர்றேன்,'' என்று உறுதியளித்தார், அப்பா.

மல்லிகா என்ன கேட்கப் போகிறாள் ?

சரசு, செந்தில், சுந்தரம், சுமதி - நால்வரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

மல்லிகா கேட்டதும் நால்வரும் அதிர்ந்து போனார்கள்.

அப்படி அவள் என்ன கேட்பாள் ?

''எனக்கு ஒரு சைக்கிள் வேணும்.''

இதுதான் மல்லிகா கேட்டது.

''அடிச்சக்கை! அஞ்சு ரூபா பத்து ரூபா பொருளெல்லாம் 'எனக்கு வேணாம் - எனக்கு வேணாம்'னு சொல்ற நல்ல பொண்ணு, ஆயிரம் ரூபாப் பொருளாக் கேக்கறா'' அபிநயத்தோடு சொன்னாள் சரசு.



''புலி பதுங்கறது பாயறதுக்குன்னு சொல்லுவாங்க. மல்லிகாக்கா அதை நிரூபிச்சுட்டா. ஏங்க்கா, கேட்டதும் கேட்டீங்க. ஒரு மொபெட்டே கேட்டிருக்கலாமே?'' - செந்தில் கிண்டல் செய்தான்.

அப்பாவும் அம்மாவும் ஒன்றும் சொல்லவில்லை. அவர்களுக்கு மல்லிகாவின் வேண்டுகோள் ஆச்சரியம் தந்தது.

மல்லிகா சூழ்நிலையை உணர்ந்தாள். ''அப்பா, எனக்கு என்ன வேணும்னு சொன்னேன். சைக்கிள் விலை அதிகம்தான். உங்களாலே வாங்கித் தர முடியலைன்னா விட்டுடுங்க. அதுக்காக நான் வருத்தப்பட மாட்டேன்'' என்று கூறிய மல்லிகா, திரும்பவும் அட்டை போடும் வேலையில் கவனத்தைச் செலுத்தினாள்.

அப்பா, 'வாங்கித் தர்றேன்' என்றும் சொல்லவில்லை. 'வாங்கித் தர முடியாது' என்றும் சொல்லவில்லை.

அன்றிரவு.

குழந்தைகள் தூங்கிய பிறகு, அப்பா வெகுநேரம் விழித்துக் கொண்டிருந்தார்.

''என்னங்க யோசிக்கிறீங்க?''

அம்மா கேட்டாள்.

''சரசுவும் செந்திலும் பக்கத்துத் தெருவிலே இருக்கிற ஸ்கூல்ல படிக்கிறாங்க. மல்லிகாவின் பள்ளிக் கூடம் கொஞ்சம் தூரம்தான். பஸ்ஸிலே போய் வர்றா. ஆனா அதைப் பத்தி எப்பவும் குறை சொன்னதில்லை. இப்போ திடீர்னு சைக்கிள் கேக்க றாளே!''

''ஆமாம். கேக்கறா. நீங்க வாங்கித் தரலைன்னாலும் வருத்தப்பட மாட்டேன்னு சொல்லிட்டா. நீங்க என்ன செய்யப் போறீங்க?''

''இதுவரைக்கும் எதுக்கும் ஆசைப் படாத மல்லிகா, திடீர்னு எப்படி மாறிட்டாள்னு புரியலே ? சைக்கிள் விலை அதிகம்தான். ஆனாலும் மல்லிகா முதல் முதலாக் கேட்டதாலே வாங்கிக் கொடுத்துடப் போறேன். தவணை முறையிலே ஒரு சைக்கிள் வாங்கறது கஷ்டமில்லே,'' என்றார் அப்பா.

அம்மாவும் அதை ஏற்றுக் கொண்டாள். என்றாலும், ''சாக்லேட்டுக்குக் கூட ஆசைப்படாத மல்லிகாவுக்குச் சைக்கிள் ஆசை ஏன் வந்தது ?'' என்று வெகுநேரம் யோசித்தாள். விடை கிடைக்கவில்லை.

ஒரு வாரத்தில் மல்லிகாவுக்குச் சைக்கிள் கிடைத்து விட்டது. தினமும் சைக்கிளில் ஏறி, 'டிரிங், டிரிங்' என்று மணி ஒலிக்கப் பள்ளிக்கூடம் சென்று





மூக்கிலே பளு தூக்கி!

★ பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த மிகப் பெரிய பயில்வான் புருமில் ஸ்டீபன் என்பவர். மற்ற பளு தூக்கும் வீரர்கள் கைகளால் தூக்கும் பளுவை மூக்குக்கும் மேல் உதட்டுக்கும் இடையே கவ்விப் பிடித்துத் தூக்கி விடுவார். இதற்கேற்ற வாகான மூக்கும், தன் பத்து வயது முதல் மேற்கொண்ட முயற்சி யுமே இவரை மூக்கிலே பளு தூக்கும் சாம்பியன் ஸ்டீபனாக்கி விட்டது. மூக்கிலே பளு ஒரு மரக் குச்சியைப் போல நிற்கும்.

--வா. க. குமரேசன், ஸ்ரீவில்லிபுத்தூர்.

வந்தாள்.

ஒருநாள் உறவினரின் திருமணத்துக்குச் சுந்தரமும் சுமதியும் போக வேண்டியதிருந்தது. காலை ஏழு மணிக்கே இருவரும் புறப்பட்டு விட்டார்கள். குழந்தைகள் ஒன்பது மணிக்கு வீட்டைப் பூட்டிச் சாவியைப் பக்கத்து வீட்டில் கொடுத்து விட்டுப் போவார்கள். அதனால் பெற்றோர் கவலை இல்லாமல் ஒரு ஆட்டோவில் ஏறித் திருமணத்துக்குச் சென்றனர்.

திருமணம் முடிந்தது. டிபன் சாப்பிட்டு முடித்துவிட்டுச் சுந்தரமும் சுமதியும் புறப்பட்டனர்.

''வரும் போதுதான் நேரத்தோடு வரணும். ஆட்டோவில் வந்தோம். இப்போ பஸ்ஸிலே போகலாமே!''

சுமதி சொன்னதை ஏற்றுக் கொண்ட சுந்தரம் பேருந்து எங்கே நிற்கும் என்று விசாரித்தார். அடுத்த தெருவில், பள்ளிக்கூடத்தருகே பேருந்து நிற்கும் என அறிந்து இருவரும் நடந்தனர். பேருந்து நிற்குமிடத்துக்கு வந்த பின்புதான், அருகே இருக்கும் பள்ளி, மல்லிகா படிக்கும் பள்ளி என்பதை உணர்ந்தனர்.

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எதிர்த் திசையில் மல்லிகா தன் புத்தம் புதிய சைக்கிளில் வந்து கொண்டிருந்தாள்.

மல்லிகாவின் சைக்கிள் பள்ளியை நெருங்கி, அதன் அகன்ற வாயிலுள் நுழைந்த போதுதான், சைக்கிள் கேரியரில் ஒரு பெண் உட்கார்ந்திருப்பதைச் சுந்தரமும் சுமதியும் பார்த்துப் பிரமித்தார்கள்.

அதே பேருந்து நிலையத்தில் கோணியைப் பரப்பி, வேர்க்கடலை, நெல்லிக்காய், கொய்யாப் பழம் விற்றுக் கொண்டிருந்த ஒருவன், இவர்களின் ஆச்சர்யத்தைக் கவனித்தான்.

''என்னங்க அப்படிப் பார்க்கிறீங்க ? சைக்கிள் மிதிச்சுட்டுப் போற பெண்ணையா ? அதுதான் மல்லிகா. இந்த ஸ்கூல்லேயே ரொம்ப நல்ல பொண்ணு. மல்லிகாவின் சைக்கிள்ளே பின்னாடி உட்கார்ந்து போறது தரணி. தரணியை நல்லாக் கவனிச்சீங்களா ? அதுக்கு ஒரு கால் ஊனம். தத்தித் தத்தித்தான் நடக்கும். புதுசா இந்த வருஷந்தான் ஸ்கூல்லே சேர்ந்துது. ரொம்ப ஏழைப் பொண்ணாம். தரணி பஸ்ஸிலே ஏர்றதுக்கும் இறங்கறதுக்கும் படாத பாடுபடும். அதைக் கவனிச்ச மல்லிகா தரணிக்கு உதவி செய்யணும்னு நினைச்சே தனக்குச் சைக்கிள் வேணும்னு வாங்கினாளாம். தரணி வீடு மல்லிகா வீட்டுக்குப் பக்கத்துத் தெருவிலேதான் இருக்காம். தினமும் மல்லிகா தரணி வீட்டுக்குப் போயி அவளைச் சைக்கிள்ளே அழைச்சுக்கிட்டு வருது. சாயந்தரம் அழைச்சுக்கிட்டுப் போய் விடுது.''

சுந்தரமும் சுமதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஏம்பா, இதெல்லாம் உனக்கெப்படி தெரியும்!'' சுந்தரம் கேட்டார்.

''இந்த ஸ்கூல் முழுக்க இது தெரியும். எனக்குத் தெரியாம போகுமா,ஏன் சார், இந்த மல்லிகா மாதிரி நல்ல பொண்ணு இருக்கறதாலேதான் மத்றாஸ்லே கொஞ்சமாவது மழை பெய்யுது. நான் சொல்றது சரியா சார்?''

மல்லிகா சைக்கிள் கேட்ட மர்மம் புரிந்து போனதால் பெருமிதம் கொண்டிருந்த சுந்தரம், ''சரிப்பா! நல்ல பொண்ணு இருக்கறதாலும் மழை பெய்யுது! அவநல்ல குணத்தை மனசாரப் பாராட்டுற உன்னை மாதிரி ஆளுங்க இருக்கிறதாலும் மழை பெய்யுது'' என்று கூறினார். அவர் கூறியதை ஆமோதிப்பது போல, சுமதியும் கண்களில் கண்ணீர் துளிக்கத் தலையசைத்தாள்.

கதையை முடியுங்கள் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை



அறிவே வெல்லும்!

பொன்னப்பர் சிந்தித்தார். ''நான் தெய்வ பக்தி உடையவன். எனவே, நான் இறப்பதற்குமுன் தெய்வத்தை வணங்க அனுமதி. அதுவரை பொறுமையாக இருக்க வேண்டும்'' என்று சிங்கத்தைக் கேட்டார். சிங்கம் சம்மதித்தது.

பொன்னப்பர் தரையில் அமர்ந்து கண்ணை மூடினார். 'என்ன செய்யலாம்' என யோசித்தார். ஒரு யோசனை தோன்றியது. கண்களைத் திறந்து, ''கடவுளே, வணக்கம்!'' எனக் கூறி வணங்கினார்.

சிங்கம், ''என்ன உளறுகிறாய்! எங்கே கடவுள்?'' எனக் கேட்டது. ''இதோ என் எதிரே நிற்கிறாரே, உன் கண்களுக்குத் தெரியவில்லையா?'' எனக் கேட்டார்.

சிங்கம் குழப்பமடைந்தது. ''கடவுளே, இந்தச் சிங்கம் என்னைத் தின்னப் போகிறதாம். நான் அதைக் காப்பாற்றிய நன்றியை மறந்து விட்டது. நான் என்ன செய்ய?'' எனக் கேட்டவர், ''அப்படியா? நான் அப்படியே செய்வேன். ஆனால், அதனை எதிர்த்துப் போராடும் வலிமை எனக்கு இல்லையே...? என்ன! எனக்கு வலிமை பிறந்து விட்டதா? ஆமாம்! என் உடல் என்னவோ போல் உள்ளது. சரி, சரி, நீங்கள் கூறுவது போலவே அதை எதிர்க்கிறேன்'' எனத் தமக்குத் தாமே கூறினார். கீழே இருந்து ஒரு கல்லை எடுத்து ''என்ன? இதைச் சிங்கத்தின் மீது வீசினால் சிங்கம் சுக்கு நூறாகி விடுமா? அப்படியே செய்கிறேன்'' எனக் கூறிச் சங்கத்தை நோக்கிக் கல்லை வீச முற்பட்டார்.

உண்மையிலேயே பொன்னப்பர் தெய்வத்திடம்தான் பேசியிருக்கிறார் என்று நம்பிய சிங்கம், ''ஐயோ, வேண்டாம். இனி நான் இந்தப் பக்கமே வர மாட்டேன்'' எனக் கூறிக் கொண்டு தலைதெறிக்க ஓடி மறைந்தது. பொன்னப்பர் ''அப்பாடி, தப்பித்தோம்'' என நினைத்து, கடவுளுக்கு நன்றி கூறினார். ஆனால், சிங்கம் இருக்கும் பொழுது நடித்தது போல் அல்ல. உண்மையான மனத்துடன் நன்றி தெரிவித்தார். பின், தமது மகள் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

-- கே. யுவராஜ்.



பாராட்டுகிறோம்!

இந்திய அரசின் புகழ்பெற்ற நேஷனல் கௌன்சில் ஆஃப் எஜுகேஷனல் ரிசர்ச் அண்டு டிரெயினிங், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை சிறுவர் இலக்கியத்திற்கான போட்டியை நடத்தி, பத்தாயிரம் ரூபாய் பரிசும் வழங்கி வருகிறது. 1990 - 91 ஆண்டுக்கான பரிசு, டெல்லியைச் சேர்ந்த திருமதி இந்திரா அனந்தகிருஷ்ணனுக்குக் கிடைத்துள்ளது. நூலின் பெயர் 'டென்சிங்'. (வானதி பதிப்பகம் வெளியிட்டது) கோகுலம் வாசகர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமான இவர், ஆங்கிலத்திலும் குழந்தைகளுக்காக எழுதிப் பல பரிசுகளும் பெற்றுள்ளவர். கோகுலம் வாசகர் சார்பில் இவரைப் பாராட்டுகிறோம்.

GOKULAM

THE MAGAZINE FOR CHILDREN

JUNE '91

THE SPIDER STORY
- a feature

THE SECRET OF THE POND
- the second part of the serial

THE STONE
- a picture story

THE HALF CHICK
- a fairy tale

THE LETTER BOX

DID YOU KNOW?

POEMS

PUZZLES

RIDDLES


RECIPES!

STORIES

BUY YOURSELF A COPY TODAY!

96 PAGES FOR JUST Rs. 3/-

GOKULAM, GUINDY, MADRAS - 600 032



பிரிட்டிஷ் இந்தியாவின் வைஸ்ராய் பேரன் மார்க்வஸ் கர்ஸான் பிரபு கலங்கிப் போயிருந்தார். காரணம், லண்டனிலிருந்த அதிகாரிகளிடமிருந்து வந்திருந்த கடிதமே.

உதவியாளர் செஸ்னே கவலையோடு வைஸ்ராயைப் பார்த்தார்.

ஏலம் போக இருந்த தாஜ்மஹல்!

''இன்னும் ஒரு முறை அந்தக் கடைசி வரிகளைப் படியுங்கள் செஸ்னே.''

''இந்தியாவின் கலைச் சிறப்பு மிக்க செல்வங்களைப் பற்றிய உங்கள் அறிக்கை விரிவாகச் சுவை க்கப் பட்டது. இதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், இப்பொழுது இந்திய மக்கள் பெருங்காயம் வைத்த பாண்டம். கலைச்சிறப்பு மிக்க அரண்மனை, கட்டிடங்களின் சிறப்பை அவர்கள் போற்றுவதாகத் தெரியவில்லை. இல்லையேல் டெல்லி செங்கோட் டைப் பகுதிகளில் பலகாரக் கடை களையும், ஆக்ராவின் தாஜ்மஹல் மேடையை நாட்டியமாடவும் அவர்கள் அனுமதித்திருப்பார்களா?

கலையழகு மிளிரும் அற்புதப் படைப்புகள் பார்வையற்றோரிடம் இருப்பதால் யாருக்கு என்ன பயன்? டெல்லி செங்கோட்டையின் சிவப்புச் சலவைக் கற்களுக்கும், தாஜ்மஹலின் நிலவொளி உமிழும் வெண் சலவைக் கற்களுக்கும் இங்குள்ள பிரபுக்கள் என்ன விலை வேண்டுமானாலும் கொடுத்து வாங்கத் தயாராக இருக்கிறார்கள். எனவே, பணம் கொழிக்க இது எளிய வழி. ஷாஜஹானை மகிழ்வித்த செங்கோட்டையின் சில அழகுப் பகுதிகள் ஏற்கெனவே இங்கு கப்பலில் வந்துவிட்டன. இதைக் காணப் பார்வையாளர் கூட்டம் அலைமோதுகிறது. அரச குடும்பத்தினருக்குக் கூட இதில் ஆர்வமுள்ளதாகத் தோன்றுகிறது. எனவே, கொழுத்த தொகைக்கு இவை ஏலம் போகும் என்று நம்புகிறோம். அடுத்ததாக, கப்பலில் அனுப்ப வேண்டியது தாஜ்மஹல்தான்.

எனவே, அதைப் பகுதி பகுதிகளாகப் பிரித்துக் கப்பலில் எடுத்துவரக் கை தேர்ந்தவர்கள் அங்கு வருகிறார்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, ஒத்துழைத்து, கீழ்ப் படியவும்'' -- செஸ்னே படித்து முடித் தார்.


அடிமை இந்தியாவை ஆள இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட வைஸ்ராய் பிரபுக்களின் வரிசையில் கர்ஸான் பிரபு வந்திருந்தார். இந்தியாவுக்கு வருவதற்கு முன்பே கலை உள்ளம் கொண்ட அவர் இந்த நாட்டின் செல்

ஹரிசிங்

வச் சிறப்புகளைப் பற்றி நிறைய அறிந்து வைத்திருந்தார். தனது கனவு உலகமான இந்தியாவுக்கு வைஸ்ராயாகப் போவது பற்றி அவர் பெரிதும் மகிழ்ந்தார். சொல்ல முடியாத கலைத் தாகத்தோடு அவர் இந்தியாவில் காலடி வைத்தார். இந்திய மக்களாலேயே இந்த நாட்டின் புராதனக் கலைச் செல்வங்கள் புறக்கணிக்கப்பட்டு அலட்சியம் செய்யப்படுவதைக் கண்டு அவர் அதிர்ந்து போனார். குறிப்பாகத் தாஜ்மஹாலின் நிலை அவரைக் கண்கலங்க வைத்தது.

ஆக்ராவில் வசித்த வெள்ளை மக்களாலும், இந்தியர்களிலேயே மிக உயர்ந்த நிலைகளில் இருந்த சிற்றரசர்களாலும் ஷாஜஹானின் கனவு மாளிகையான தாஜ்மஹால் ஒரு சிற்றுண்டி விடுதியாகவும், நடனமாடும் மண்டபமாகவும் சூதாட்டங்களுக்கு இடமளிக்கும் மறைவிடமாகவும் பயன்படுத்தப்பட்ட அவலக் காட்சி அவரை அழ வைத்தது. போதாக் குறைக்குத் தாஜ்மஹாலின் நான்கு புறமும் இருந்த கோபுர மினார்களின் உச்சியிலிருந்து பலர் தற்கொலை செய்து கொண்டு தாஜ்மஹாலுக்கே 'பலி வாங்கும் இடம்' என்ற ஒரு அவப்பெயரைக் கொண்டு வந்திருந்தனர்!

இந்த நிலையை மாற்றி, கலையுள்ளம் கொண்டவர்கள் தாஜ்மஹாலுக்கு வந்து அதன் எழிலைக் கண்டு களிக்க வசதி செய்து தர வேண்டும் என்று எண்ணினார் கர்ஸான். அப்பொழுது ஐக்கிய மாகாணத்தின் கவர்னராக இருந்த சர் ஜேம்ஸ் லாடக்கக்கும் இதுபற்றி விரிவான உத்தரவு அனுப்பியிருந்தார். ஆனால், அவர் எதிர்பாராத ஒரு சூழ்நிலை அவர் இந்தியாவுக்கு வருவதற்கு





முன்பே உருவாகி இருந்தது.

கர்ஸான் பிரபுவுக்கு முன்னதாக இருந்த வைஸ்ராய்கள் இந்த நாட்டில் உள்ள கலைச் செல்வங்களை அப்படியே பெயர்த்து இங்கிலாந்துக்கு அனுப்பி நல்ல தொகைக்கு ஏலம் விட ஒரு திட்டம் வகுத்திருந்தனர். அதன் முதல் நடவடிக்கையாக டெல்லி செங்கோட்டையின் சில இதயப் பகுதிகள் கப்பல் ஏறி லண்டன் சென்று விட்டிருந்தன.

இரண்டாவது நடவடிக்கையாக ஆக்ராவில் உள்ள அழகு கொஞ்சும் தாஜ்மஹலைப் பெயர்த்தனுப்ப ஏற்பாடு செய்யக் கர்ஸான் பிரபுவுக்கு உத்தரவு வந்தது. இது நியாயமல்ல என்பதைப் பல கோணங்களில் விளக்கிக் கர்ஸான் பிரபு ஒரு கடிதம் எழுதி இந்த முயற்சியைக் கைவிட வேண்டும் என்று கேட்டிருந்தார். அதற்குப் பதில் தான் இப்பொழுது வந்திருந்தது.

தாஜ்மஹலின் நிலவொளி உமிழும் வெண் சலவைக் கற்களால் உருவான கலையழகு மிக்க பகுதிகளில் பிரித்தெடுக்க வசதியாகக் கோடுகள் போடப் பட்டன. அவற்றைப் பெயர்த்துக் கொண்டு போகக் கல்கத்தா துறை முகத்திற்குக் கப்பல்கள் கூட வந்து விட்டன. ''என் மனசாட்சியைக் கொன்றுவிட்டு மனிதாபிமானம் இல்லாத இந்த அநியாயச் செயலுக்கு உடன்படு கிறேன்'' என்று மனம் கலங்கி பதில் எழுதினார் கர்ஸான் பிரபு.

இந்தியாவில் காலடி வைத்ததிலிருந்தே அவர் பல முறை தாஜ்மஹலைப் பார்த்து மனத்தைப் பறி கொடுத்திருந்தார். இந்திய மக்களாலேயே கலையழகு மிக்க பகுதிகள் திருடப்பட்டு விற்கப்படு வதை அவர் கண்டு கலங்கியிருக்கிறார். தாஜ்மஹலின் இதயப் பகுதி என்பது அந்தக் கலை மாளிகை உருவாகக் காரணமாயிருந்த மும்தாஜ் - ஷாஜஹான் ஆகியோரது சமாதிகள் இருந்த அழகு உறையும் மையப் பகுதியே. இப்பகுதியில் நண்பகல் நேரத்தில் கூட மிக மங்கிய வெளிச்சமே இருந்தது. மேலேயிருந்து தொங்கிய ஒரு லஸ்தர் விளக்கு உயிர் போகும் நிலையில் கண் சிமிட்டியதே தவிர ஒளி கொடுக்க வில்லை. மாறாகப் புகையைக் கக்கி அந்த இதயப் பகுதியைக் கரிபடிய வைத்துக் கொண்டிருந்தது.

முதல் முறை வருகை தந்த போதே இதைக் கவனித்துவிட்ட கர்ஸான் பிரபு அந்தக் கரி விளக்கை எடுத்துவிட்டுத் தாஜ்மஹலின் கலையழகுக்குப் பொருத்தமான அழகு கொஞ்சும் தொங்கு விளக்கு ஒன்றை மாட்ட எண்ணினார். ஆனால் எல்லாம் ஏமாற்றமாகி விட்டது.

தாஜ்மஹலைப் பெயர்க்கும் முன்னால் கடைசியாக ஒரு முறை அதைக் கண்ணாரக் கண்டு களிக்கக் கர்ஸான் ஆக்ராவுக்கு வந்தார். சொல்லிலே வடிக்க முடியாத அதன் அழகைக் கண்டு கண்டு களித்தார். கனத்த மனத்தோடு அவர் வெளியே வரவும், அவரைத் தேடிக் கொண்டு உதவியாளர் செஸ்னே அங்கு வரவும் சரியாக இருந்தது.

''லண்டனில் இருந்து அவசரக் கடிதம்,'' என்று கடித்தைக் கொடுத்தார் செஸ்னே. அவரையே பிரித்துப் படிக்கச் சொன்னார் கர்ஸான்.

'பெரும் எதிர்பார்ப்புகளோடு கப்பலேற்றிக் கொண்டு வரப்பட்ட செங்கோட்டைப் பகுதிகள் சுமாரான தொகைக்கே ஏலம் போயின. முயற்சிகளுக்கு ஏற்ற அளவில் லாபம் இல்லை என்று டைரக்டர்கள் கருது கிறார்கள். எனவே, அடுத்த முயற்சி எதுவும் தேவை இல்லை.'

கர்ஸான் பிரபு மகிழ்ச்சிக் கூத்தாடினார். அவருக்கு ஆனந்தம் தாங்க வில்லை. 'நல்ல வேளை நான் வைஸ்ராயாக இருக்கும்போது இந்த அநியாயம் நடக்காமல் நின்று போனது' என்று அவர் அகமகிழ்ந்தார். தாஜ்மஹல் போன்ற கலைச் சிறப்புமிக்க சின்னங்கள் பாழ்படுத்தப்படுவதைத் தடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுத்தார். 50,000 பவுன் செலவில் தாஜ்மஹலும், டல்லி செங்கோட்டைப் பகுதிகளும் உடனே புதுப்பிக்கப் பட்டன.

மும்தாஜ் - ஷாஜஹான் சமாதிகளுக்கு மேல் தொங்கவிடப் பொருத்தமான அழகு விளக்கு ஒன்றை வாங்க அவர் தாமே ஆக்ரா, டெல்லி, ஸ்ரீநகர், நாகபுரி கடை வீதிகளுக்கு முன்னறிவிப்பு

இல்லாமல் வந்தார். ஆயிரக்கணக்கான மாதிரிகளைப் பார்வையிட்டார். எதுவுமே அவருக்கு மனநிறைவு தரவில்லை. வேறு பணி காரணமாக லண்டனுக்குச் செல்லும் வழியில் இதற்காகவே எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் அவர் இறங்கினார். அங்கே, அவரது நண்பர் கிரோமோ பிரபு கவர்னராக இருந்தார். அவரையும் அழைத்துக் கொண்டு எகிப்தின் புராதனச் சின்னங்களை அழகு செய்த நூற்றுக்கணக்கான தொங்கு விளக்குகளை அவர் பார்வையிட்டார். கடைசியில் எகிப்தை ஆண்ட சுல்தான் பேபாரின் சமாதியில் தொங்கிய ஒரு அழகு விளக்கு அவரது கருத்தைக் கவர்ந்தது. ஆனால், இதை அவர் பார்த்துவிட்டு வந்த அடுத்த நாளே அந்த அற்புத விளக்குத் திருட்டுப் போய்விட்டது!

கர்ஸான் பிரபு மனம் தளரவில்லை. எகிப்தின் தலைசிறந்த கலைஞரான 'டோட்ராஸ் பாதிர்' என்பவருக்கு நல்ல காலமாக அந்த விளக்கைப் பற்றிய கலை நுணுக்கங்கள் யாவும் தெரிந்திருந்தன. அவரைக் கொண்டு கலையழகு சொட்டும் தொங்கு விளக்கு ஒன்று தாஜ்மஹாலுக்காகத் தயாரானது. இதை முடிக்க அந்தக் கலைஞன் எடுத்துக் கொண்ட காலம் இரண்டு ஆண்டுகள்!

அற்புத அழகு கொஞ்சும் இந்த வெண்கல விளக்கில் ''ஒப்பற்ற மும்தாஜ் மஹாலின் சமாதிக்கு இந்திய வைஸ்ராய் கர்ஸான் பிரபுவின் எளிய காணிக்கை - 1906'' என்ற வரிகள் பாரசீக மொழியில் பொறிக்கப்பட்டன. இந்த விளக்கைத் தொங்க விடும் விழா 1908 - ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16 - ஆம் நாள் நடைபெற்றது.

கர்ஸான் பிரபு அளித்த கலையழகு சொட்டும் அற்புத வெண்கல விளக்கு இன்றைக்கும் மும்தாஜ் - ஷாஜஹான் சமாதியில் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. கப்பலேறி ஏலம் போக இருந்த தாஜ்மஹாலின் கதையும் அந்த அழகு கொஞ்சும் விளக்குக்காகக் கர்ஸான் பிரபு பட்ட பாடும் தாஜ் மஹாலைக் காண வருவோர்களில் எத்தனை பேருக்குத் தெரியும்?



12 Months Postal Course in COMMERCIAL ART is also available Prospectus Rs.10/- by M.O.

உங்கள் நூலகம்

எங்கிருந்தோ வந்தான் - துறைவன் - பக். 103 - ரூ. 10/- வானதி பதிப்பகம், சென்னை - 17.

கிராமத்தில் விவசாயம் செய்து வரும் ஏழை செல்லையா. மீனாட்சி தம்பதியரைத் தேடி தேவலோகத்துக் கிளி ஒன்று வருகிறது. குழந்தைகளில்லாத குறை தீர்ந்தது என்று அவர்கள் அன்போடு வளர்க்கின்றனர். கிளி பேசுகிறது, பாடு கிறது, படிக்கப் பள்ளி செல்கிறது! கல்வி பயிலப் பிள்ளைகள் வராது மூட வேண்டிய நிலையில் இருக்கும் கிராமத்துப் பள்ளி, கிளியின் வரவால் புத்துயிர் பெறுகிறது பள்ளி. பள்ளிக்குப் படிக்க வராத பிள்ளைகள் வருகின்றனர். பள்ளிக்குப் போக விரும்பாத ஒரு சிறுவன், தனக்குத் தோழர்கள் இல்லாது எல்லோரையும் மாற்றி விட்டதே கிளி என்று கிளியைக் கொல்லத் திட்டமிடுகிறான். கிளியின் அக்கா வந்து தங்கைக் கிளியைக் காப்பாற்றி, சிறுவனைத் தண்டித்து அவனையும் மாற்றி, தங்கைக் கிளியைத் தேவலோகத்திற்கு அழைத்துச் செல்கிறது.

கல்வியின் அவசியத்தை மறைமுகமாக; அருமையாக உணர வைக்கும் நாவல். கிளி உத்தி புதியது. குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் சுவை யளிக்கும் நாவல். முதிர்ந்த இலக்கிய அனுபவம் மிக்க ஆசிரியர் தந்துள்ள முன்னுரை, குழந்தைகளுக்காக எழுதுவோரும், குழந்தை இலக்கியத்தை ஆராய்ச்சி செய்வோரும் படித்துப் பயன்பெற வேண்டிய ஒன்றாகும்.

பறவைகள் பலவிதம் (இரு தொகுதிகள்) மலையமான் - பக். 120, 112, ஒவ்வொன்றும் ரூ. 13/-, ஒளிப் பதிப்பகம், 63, ரங்காச்சாரி சாலை, சென்னை - 18.

குழந்தைகளுக்காக அறிவியல் எழுதும் விரல் விட்டு எண்ணக் கூடிய எழுத்தாளர்களில் மலையமான் முன்னணியில் இருப்பவர். கோகுலம் வாசகர்களுக்கு ஏற்கெனவே நன்கு அறிமுகமானவர். முதல் தொகுதியில் பதினொரு பறவைகளையும், இரண்டாவது தொகுதியில் பதினான்கு பறவைகளையும் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு பறவையைப் பற்றிய ஆத்திச் சூடியிலிருந்து தொடங்கி 'மினி' கலைக்களஞ்சியமாக உள்ளது என்றால் மிகையாகாது. குழந்தை களுக்கு மட்டுமின்றி பறவை அன்பர்களுக்கும் பயன்படும் தரமான படைப்பு.

சிற்றெறும்பின் தீரச் செயல்கள் - தமிழில் - சந்தானலட்சுமி - பக். 46 - ரூ. 5.90. பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

காட்டு விலங்குகளுக்குத் தொல்லை தரும் யானையை அடக்கிப் பெருமை பெறும் ஒரு சிற்றெறும்பு, தனது அணில் நண்பனுக்குத் துரோகம் செய்யும் வஞ்ச நரிக்குப் புத்தி வரும்படி செய்கிறது. எறும்பை ஒழித்துக் கட்ட நரியும் யானையும் திட்டமிடுகின்றன. இறுதியில் வெற்றி எறும்புக்குத்தான்.

மிகச் சிறிய குழந்தைகளுக்கு ஏற்ற புத்தகங்கள் இல்லை என்ற குறையை இந்த நூல் போக்குகிறது. 14 பாயிண்ட் குண்டெழுத்தில், குழந்தைகள் தாங்களே எழுத்துக் கூட்டிப் படிக்கும்படி புத்தகம் அமைந்துள்ளது. இடையிடையே நல்ல படங்களும் உள்ளன. மொழி பெயர்ப்பு நூலாகவே தெரியவில்லை. அவ்வளவு எளிமையான நடை.

புகழ் முத்திரை - எஸ் திருமலை, பக். 96, ரூ. 10/-, நவபாரதி பிரசுரம், 14, தெற்கு மாட வீதி, திருநின்றவூர் - 602 024.

'தீபம்' திருமலை, குழந்தைகளுக்காகச் சிறுகதைகள் எழுதுவதிலும் திறமையானவர் என்பதை இந்தச் சிறுகதைத் தொகுப்பு உணர்த்துகிறது. கதைகள் பல பத்திரிகைகளிலும் வெளியானவை. வரலாறு (புகழ் முத்திரை), நகைச்சுவை (காட்டில் ஒலிம்பிக்ஸ்), பழங்கதை (விதியை வென்ற மதி), அறிவுக்கதை (பந்தயம்) என்று ஒவ்வொரு கதையும் ஒரு வித்தியாசமான கதைக் களமாக அமைத்து எழுதப்பட்டுள்ளது. குழந்தைகள் நன்கு சுவைப்பார்கள். ஒவ்வொரு கதைக்கும் ஒவ்வொரு ஓவியர் படம் வரைந்துள்ளது புது முயற்சி.

மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். முகவரி - ஆசிரியர் கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, சென்னை - 32.

ஜோசப் மாஜினி

சிறுவன் ஜோசப் தன் தாயோடு சென்று கொண்டிருந்தான்.

வழியில் ஒரு மரம். அதனடியில் ஒரு கிழவன். எலும்பும் தோலுமாய் அமர்ந் திருந் தான்.

அவன் ஒரு பிச்சைக்காரன். அவ னுக்கு எதிரில் தரையில் ஒரு கிழிசல் துணி விரிக்கப்பட்டிருந்தது. அவன், போவோர் வருவோரிடம் கையை நீட்டி, ''ஐயா... முடியாத கிழவன் ஐயா... பிச்சை போடுங்க...!'' எனக் கெஞ்சிக் கொண்டிருந் தான்.

வேகமாக ஓடிச் சென்ற ஜோசப் அந்தப் பிச்சைக்காரக் கிழவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டான். தாடியும் மீசையு மாக இருந்த அவனது குழி விழுந்த கன்னங்களில் மாறி மாறி முத்தம் இட்டான்!

''அம்மா... தாத்தா பாவம் ஏதா வது காசு கொடுங்கள்...'' என்று கெஞ்சினான்.

தன் மகன் இப்படி ஏழைகளிடம் அன்பும் இரக்கமும் காட்டுவதைக் கண்டு, தாய் பூரித்தாள். காசு எடுத்துப் போட்டாள்

கிழவன் அதையெல்லாம் கவனிக்க வில்லை. அவனது கண்கள், ஆனந்தக் கண்ணீரால் குளமாயின. ஜோசப்பை வாரியெடுத்து முத்தமாரி பொழிந்தான். ''அம்மா...! குழந்தை நூறு வயது வாழ வேண்டும்... இந்த வயதிலேயே இப்படி ஏழைகளிடம் இரக்கம் காட்டும் இவன், பெரியவன் ஆனதும் நாட்டு மக்கள் அனைவரது அன்பையும் பெறுவான்; பெரிய தலைவன் ஆவான்...'' என்று வாழ்த்தினான்.

ஏழைப் பிச்சைக்காரக் கிழவன் கூறியது முற்றிலுமாகப் பலித்தது.

பிற்காலத்தில், இத்தாலி நாட்டின் விடுதலைக்காகப் போராடி இத்தாலி மட்டுமின்றி உலக மக்கள் அனைவரின் அன்பையும் பெற்று, அவர்களின் நெஞ் சில் இன்றும் குடிகொண்டிருக்கும் மாபெரும் புரட்சி வீரரான 'மாஜினி' தான் அந்த ஜோசப் என்ற சிறுவன.

நம் நாட்டில், மிகப் பழங்காலத்தில், சித்தார்த்தன் என்று ஒரு அரசகுமாரன் இருந்தான். அவன் ஒரு நாள் சாலை வழியே போகும் போது ஒரு நோயாளி, ஒரு கிழவன், ஒரு பிணம் ஆகியவற்றைக் கண்டான். அதன் பிறகுதான் அவனுக்குப் பிணி மூப்பு - சாக்காடு பற்றித் தெரிய வந்தது. மனித சமுதாயத்தின் அத் துன்பங் களைப் போக்கத் தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளத் துறவு பூண்டு, காடு சென்று, தவம் இயற்றி ஞானோதயம் பெற்றுக் கௌதம புத்தரான கதையைப் படித்தி ருப்பீர்கள்.

அதே போன்று, அந்தப் பிச்சைக் காரனின் துன்பங்களைப் பார்த்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான், ஜோசப் இத்தாலி மக்களின் துயர் துடைக்கத் தன்னையே அர்ப்பணித்துக் கொள்ள முடிவு செய்தான். அதற்குப் பிறகு அவனது வாழ்க்கைப் பாதையே மாறியது. அது புரட்சிப் பாதையாக அமைய மேலும் சில நிகழ்ச்சிகள் துணை நின்றன.

ஒரு நாள், ஜோசப் கையில் ஏதோ ஒரு காகிதத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தான். அவன் தந்தை ஜியாக்கோமோ மாஜினி அதை வாங்கிப் பார்த்தார்.

''உனக்குப் பொழுது போக்காகப் படிக்க ஏதாவது வேண்டும் என்றால் நானே நல்ல புத்தக்ங்களாகத் தேர்ந் தெடுத்துத் தருகிறேன்...'' என்று தனது புத்தக ஷெல்ப்பி லிருந்து இரண்டு புத்தகங்களை எடுத்துக் கொடுத்து, ''இவற்றைப் படி... நல்ல இலக்கிய

ஞானிமணாளன்



நூல்கள் இவை...'' என்றார்.

ஜோசப்பின் அப்பா சிறு வயதில் அவனைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைக்க வில்லை. வீட்டிற்கே ஒரு ஆசிரியரை வரவழைத்துத் தினமும் பாடம் புகட்ட ஏற்பாடு செய்தார். அவரிடம் அவன் லத்தீன் மொழியை நன்கு கற்றுக் கொண்டான். பத்து வயதுக்குள்ளேயே பல கிரேக்க - ரோமானிய இதிகாசங்களையும் வேறு பலவற்றையும் படித்து முடித்து விட்டான். ஆசிரியரிடம் கற்பதோடு மட்டும் அவனது அறிவுப் பசி அடங்கி விடவில்லை. மேலும் பல நூல்களை வாங்கிப் படித்தான். எங்கு என்ன காகிதம் கிடைத்தாலும் சரி... உடனே அதை எடுத்துப் படிப்பான். அந்தப் பழக்கத்தில் தான், அன்று அவன் அந்தக் குப்பைக் காகிதத்தை எடுத்துப் படித்தது.

அவனுடைய அப்பா ஒரு மருத்துவர். இருந்தாலும் அரசியலில் ஆர்வம் உள்ளவர். ஆஸ்திரியா என்ற நாடு இத்தாலியை அப்பொழுது அடக்கி ஆண்டு வந்தது. இத்தாலிய மக்கள் விடுதலை பெற விரும்பினர். பிரான்சு அவர்களுடைய அண்டை நாடு. அங்குதான் மன்னரின் யதேச்சாதிகாரத்தை எதிர்த்து முதன் முதல் மாபெரும் புரட்சி நடந்தது. அந்நாட்டில் குடியரசுக் கட்சி ஒரு பத்திரிகையை நடத்தியது. ஜோசப்பின் அப்பா அதற்குச் சந்தா செலுத்தி வரவழைத்தார். இத்தாலியில் அதற்குத் தடை. அரசாங்கத்துக்குத் தெரிந்தால் உடனே சிறைதான். எனவே தான் அவர் அதைத் தனது மருத்துவ நூல்களுக்கு இடையே வைத்து ரகசியமாகப் படித்து விட்டுக் கசக்கிக் குப்பைக் கூடையில் போட்டு வந்தார். அதைத்தான் அன்று ஜோசப் எடுத்துப் படித்தது. அவனுக்கு அப் பத்திரிகையில் வந்த குடியரசுக் கருத்துக்கள் மிகவும் பிடித்துப் போயின. அதன் பிறகு ஜோசப்

தன் தந்தைக்குத் தெரியாமல், அந்தப் பத்திரிகைகளை எடுத்துப் படித்து விட்டுத்திரும்ப அதே இடத்தில் வைத்து விடத் தொடங்கினான். அவற்றைப் படிக்கப் படிக்க அவன் மனத்தில் குடியரசுக் கருத்துக்கள் வேரூன்றின.

பத்து வயதுக்கு மேல், ஜோசப் ஜெனோவா பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்பட்டான். பதினான்கு வயதில் மெட்ரிகுலேஷன் தேர்ச்சி பெற்றான். பதினாறாம் வயதில் ஒரு நிகழ்ச்சி.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. ஜோசப் வழக்கம் போல் தன் தாயாருடன் சந்தைக்குப் போய்க் கொண்டிருந்தான். அப்போது வாட்டசாட்டமாக; மிகவும் கண்ணியமாகக் காணப்பட்ட ஒருவன் ஜோசப்பின் தாயாரிடம் வந்து, உள்ளங் கைகளைச் சேர்த்து, அதில் ஒரு கைக் குட்டையை விரித்துக் கொண்டு, என்னவோ சொன்னான். ஜோசப் அதை உற்றுக் கேட்டான். அவன் சொன்னான் ''சட்ட விரோத இத்தாலியருக்கு உதவுங்கள்...''

அவன் தாய் சில நாணயங்களை எடுத்து அந்த ஆளின் கைக் கர்ச்சீப்பில் போட்டாள். இன்னும் சிலரும் வந்து உதவி கேட்டனர். அவர்களுக்கும் காசு போட்டாள்.

அவர்கள் போன பிறகு, 'என்ன இதெல்லாம்..? இவர்கள் யார்...?' என்ற வினாக்குறியுடன் தாயாரின் முகத்தைப் பார்த்தான் ஜோசப்.

தாய் சொன்னாள், ''இவர்கள் கார்பொனரி என்ற ரகசியக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். ஆஸ்திரிய அரசின் யதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்துப் புரட்சி செய்து தோல்வியுற்றவர்கள். தலைமறைவாகி ஸ்பெயின் போன்ற நாடுகளுக்கு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். வழியில் இங்கு ஜெனோவா வந்து, கொஞ்சம் பணம் சேர்த்துக் கொண்டு வெளிநாடுகளுக்கு இங்கிருந்து கப்பல் ஏறப் போகிறார்கள்...'' என்று விளக்கினாள்.

அதைக் கேட்ட ஜோசப்பின் மனம் மிகுந்த வேதனைப்பட்டது. ஏற்கெனவே ஏழை எளியவரிடம் அன்பும் இரக்கமும் கொண்டவன் ஜோசப். தந்தை வாங்கிய பத்திரிகைகள் அவரது சுதந்திர உணர்வை வளர்த்திருந்தன. இப்போது, அந்த கார்பொனரி கழகத்தினரின் தியாகத்தை நேரில் கண்டதும் புரட்சியில் அவர் மனம் ஈடுபட்டது. தாய் நாட்டின் அடிமை நிலையைக் கண்டு அவர் வேதனைப்பட்டார். அந்தந்தத் துக்கத்தின் அடையாளமாக கறுப்பு உடையை அணியத் தொடங்கினார். இறுதி வரை கறுஞ்சட்டையே அணிந்தார். தன்னைப் பின்பற்றுபவர்களையும் கருஞ்சட்டைக் காரர்களாக ஆக்கினார்.


நாளடைவில், ஜோசப் கார்பொனரி கழகத்திலேயே உறுப்பினரானார். அவருக்கு உயர்ந்த கட்சிப் பதவி தரப்படவில்லை. எனினும், உண்மையாக உழைத்தார். கட்சியை வளர்த்தார். புதிய உறுப்பினர்களைச் சேர்த்தார். எல்லோரும் கூடி 'இளம் இத்தாலி' என்ற அமைப்பாக உருவெடுத்தனர். அவர்கள் புரட்சியில் ஈடுபட்டனர். போலீசாரின் கண்காணிப்பு அதிகமாயிற்று. கடைசியில் அவர் கைதானார். அப்போது அவருக்கு வயது இருபத்தைந்து.

அடுத்த ஆண்டே அவர் விடுதலை செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார். பிரான்சில் இருந்து கொண்டே இத்தாலி மக்களைத் தட்டி எழுப்பினார். தலைமறைவாகவே பல ஆண்டுகள் கழித்தார். அவர் இத்தாலியில் இல்லா விட்டாலும் அவருடைய சக்தி அங்கு வேலை செய்தது.

அந்த 19 ஆம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் மூவர். அவர்களில் முதலிடம் மாஜினியுடையது. அவர் அந்த நாட்டின் ஆன்மா; அடுத்தவர் கரிபால்டி. அவர் அந் நாட்டின் ஆயுதம்; மூன்றாமவர் கௌண்ட் கவூர். அவர் இத்தாலியின் அறிவு.

மாஜினியின் குடியரசுக் கனவு நனவாகவில்லை. என்றாலும் இத்தாலியின் விடுதலைக்கு அவர் நடத்திய புரட்சி பெரும் துணையாக நின்றது. அவர் அந் நாட்டு மக்களின் நெஞ்சில் நீங்காத இடம்பெற்று விட்டார்.

இத்தாலியின் ஜெனோவா நகரில் 1805 ஆம் ஆண்டில் ஜூன் 22 ஆம் நாளன்று பிறந்த ஜோசப் மாஜினி, பைசா நகரில் 1872 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் நாளன்று மறைந்தார். இத்தாலி என்ற பெயர் இருக்கும் வரை மாஜினியின் பெயரும் நிலைத்திருக்கும்.



எட்டுக்கால் பூச்சி

பட்டுப் போன்ற நூல் கோர்த்து
தட்டுப் போன்ற கூடு கட்ட
எட்டுக்கால் பூச்சி யொன்று
எம்பி யெம்பிக் குதிக்குது பார்

அற்றுப் போன நூலைக் கோர்க்க
ஆன மட்டும் முயலுது பார்
உற்று அதனை நீயும் பார்த்தால்
ஓர் உண்மை புரியும் பார்

மீண்டும் மீண்டும் முயற்சி செய்து
மேலே தாவிப் பிடிக்குது பார்
வேண்டும் இந்த முயற்சி உனக்கும்
வெற்றிக்கு அதுவே வழியாகும்.

— பி. ஏ. ஜவஹர்லால்,
திருநெல்வேலி.



தோட்டம்



சின்னச் சின்ன தோட்டம்
சிங்காரத் தோட்டம்
பட்டுப் பூச்சி பறக்கும்
பூக்கள் எல்லாம் மணக்கும்
குருவி வந்து அமரும்
கொய்யாப் பழம் தின்னும்
அணில்கள் ஆடி ஓடும்
அற்புதங்கள் நிகழ்த்தும்
தூரி ஆடும் தோட்டம்
தூய்மையான தோட்டம்.

— ஆர். ரத்தினசாமி, பி. புளியம்பட்டி.





கடிகாரம்



காலம் காட்டும் கடிகாரம்
கடமை தவறாக் கடிகாரம்
வேலை செய்யச் செல்வோரை
விரைந்த னுப்பும் கடிகாரம்

பள்ளி செல்லும் பாலர்க்கு
பக்கத் துணைவன் கடிகாரம்
கள்ள மின்றி யாவர்க்கும்
காலம் காட்டும் கடிகாரம்

அயரா துழைக்கும் கடிகாரம்
அனைவருக் குதவும் கடிகாரம்
உயர்ந்த நண்பன் கடிகாரம்
உலகோர் போற்றும் கடிகாரம்

— எம். எஸ். இரவிச்சந்திரன்,
சங்கமங்கலம்.





குதிரை பாருங்க...

குதிரை குட்டை தானுங்க
குதிச்சு ஓடும் பாருங்க
எதிரே வந்தால் போச்சுங்க
எங்கே போகணும் சொல்லுங்க.

கொள்ளைக் கொஞ்சம் காட்டுங்க
கணத்தில் பணியும் பாருங்க
மெள்ள மெள்ள நெருங்குங்க
மெதுவாக் கொள்ளைத் தின்னுங்க

சவுக்கைக் கொஞ்சம் சொடுக்குங்க
சண்டித் தனமும் ஓடுங்க
பாவம் பார்த்தால் போச்சுங்க
பறந்து ஓடும் பாருங்க.'

— ஓ. ஜெயசந்திரன்,
தெ. ஆ. மாவட்டம்.

கிணற்று முனி

அன்று காமன் பண்டிகை. போரூர் கிராமத்தில் இந்தத் திருவிழா விசேஷம். வேடிக்கை பார்க்கவும் பொங்கலிடவும் பக்கத்துக் கிராமங்களிலிருந்து நல்ல கூட்டம் வரும். பண்டிகைக்காகப் புதூர் கிராமத்திலிருந்து போரூருக்குப் புறப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மூவர் - பால்காரர், புல்காரர், பூக்காரர்.

போரூர் போகும் வழியில் ஒரு கிணறு இருந்தது. பொதுவாக அந்தக் கிணற்றுப் பக்கம் மக்கள் போவதில்லை. அதில் ஒரு முனி வசிப்பதாக அவர்கள் நம்பினர். கிராமக் கிணறாகையால் கைப்பிடிச்சுவர் கிடையாது. எப்பொழுதாவது ஆடோ, கன்றோ விழுந்து விட்டால் அவை பயங்கரமாக மூச்சுத் திணறி உடல் விகாரமடைந்து இறப்பதை அறிந்து மக்கள் நடுக்கத்துடன் ''கிணற்றில இருக்கிற முனிதான் அடிச்சிடுத்து'' என்று பேசிக் கொள்வார்கள். தண்ணீர் மூன்றடி அளவுதான் இருந்தபோதிலும் உள்ளே விழும் பிராணி துடிதுடிப்பது அவர்களது பயத்தை அதிகரித்தது. இதே ஆழமுள்ள மற்ற கிணறுகளில் விழும் பிராணிகள் இவ்வளவு பயங்கரமாகத் தவிப்பதில்லை, இறப்பதில்லை என்று அவர்களுக்குத் தெரியும்.

பால்காரர், பூக்காரர், புல்காரர் ஆகிய மூவரும் கிணற்றை அடைந்தனர். அவர்கள் மனத்தில் துளிக்கூடப் பயமில்லை. பட்டப்பகலில், சூரிய ஒளி வெள்ளமெனக் கொட்டிக் கிடக்கையில் முனியைப் பற்றி எப்படிப் பயம் உண்டாகும்?

கிணற்றை அடைந்ததும் பால்காரர் சைக்கிள் பின்சீட்டில் வைத்திருந்த பால்டிரம்மையும், கைப்பிடியில் மாட்டியிருந்த குவளைகளையும் இறக்கி வைத்தார். டிரம்மைக் கட்டியிருந்த தாம்புக் கயிற்றில் பெரிய அளவுக் குவளைகளையும் கட்டிக் கிணற்றில் இறக்கினார். தண்ணீர் எடுத்துக் கொண்ட பிறகு மூவரும் சேர்ந்து போகலாமென முடிவெடுத்தனர்.

குவளை தண்ணீரால் நிரம்பியது. அதை மேலே இழுப்பது ஒன்றும் கஷ்டமில்லை. ஆனால், பால்காரர் இலாபக் கணக்குப் போட்டபடி கயிற்றை இழுக்கையில், கவனம் சிதறி விட்டது. கிணற்றின் மேல்பகுதி பாசியாக இருந்ததால் கால் வழுக்கி அவர் கிணற்றில் விழுந்து விட்டார்.

மற்ற இருவரும் திடுக்கிட்டனர். கிணற்றின் உள்ளே இறங்கக் குறுகலான படிக்கட்டு இருந்தது. அதன் வழியாகப் பால்காரர் மேலே ஏறி வந்து விடுவாரென நினைத்தனர். ஐந்து நிமிடங்கள் ஆகியும் பால்காரர் மேலே வரவில்லை. ஆகவே, அவரைக் காப்பாற்றுவதற்காகப் புல்காரர் சிதைந்திருந்த அந்தப் படிகள் வழியே இறங்கினார். அவர் நீர்மட்டத்தை அடைந்து, தத்தளித்துக் கொண்டிருந்த பால்காரரின் கையைப் பிடித்த போது அவரது முகத்தைக் கவனித்தார். பால்காரரின் முகம் வீங்கிப் பயங்கரமாகத் தெரிந்தது. கண்கள் ரத்தச் சிவப்பாக இருந்தன. அதோடு வேகமாக ''புஸ்-புஸ்ஸென்று மூச்சு விட்டுக் கொண்டிருந்தார். புல்காரருக்கு முனியின் ஞாபகம் வந்தது. உடல் நடுங்கி, கால் வழுக்கி அவரும் தண்ணீரில் விழுந்து விட்டார்.

பூக்காரருக்கு ஒன்றும் புரியவில்லை. மூன்றடி ஆழம்தானே தண்ணீர் இருக்கும்! அதில் விழுந்தவர்கள் ஏன் படியேறி வரமுடியவில்லை? ஏன் கத்தக் கூட முடியவில்லை என்று அவர் திகைத்தார். அவருக்கும் முனியின் ஞாபகம் ஏற்பட்டு உடம்பு பதற ஆரம்பித்தது. உடனே அவர் பால்காரரின் சைக்கிளில் கிராமத்திற்குத் திரும்பி ''ஐயையோ, கிணத்து முனி நம்ம பால்காரரையும் புல்காரரையும் அடிச்சிடுத்து'' என்று கூக்குரலிட்டார். அதைக் கேட்டு மக்கள் கிணற்றை நோக்கி ஓடினர்.

டாக்டர் என். ஸ்ரீதரன்



பலிகொடுத்தால்தான் முனி சாந்தமாகும் என்று ஒருவர் கோழியுடன் விரைந்தார். பலர் சாம்பிராணி, கற்பூரப் பாக்கெட்டுகள், தட்டுகள் எடுத்துச் சென்றனர். உடல்களை மேலே இழுக்கச் சிலர் தாம்புக் கயிறுகள் கொண்டு வந்தனர். எல்லோரும் கிணற்றைச் சுற்றி நின்றார்களே தவிர என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தனர்.

அந்தச் சமயம் கிராமத்தில் ஜீவன் தன் வீட்டில் படித்துக் கொண்டிருந்தான். அவன் ப்ளஸ் டூ மாணவன். எதையும் ஆராய்ந்து பார்க்கும் கூர்மையான அறிவுள்ளவன். அபார சுறுசுறுப்பு. கடவுள் நம்பிக்கை உடையவன். ஆனால் பேய், பிசாசு, முனி ஆகியவை உண்டெனநம்புவதில்லை. அவன் படித்திருந்த சில விஷயங்களின் அடிப்படையில் கிணற்றில் முனி இருப்பது உண்மையா என்று கண்டுபிடிக்க வாய்ப்பை எதிர்பார்த்திருந்தான்.

அந்த அருமையான வாய்ப்பு அன்று வந்தது. பூக்காரர் கத்தியதைக் கேட்டு அவனும் கிணற்றை நோக்கி ஓடினான். கூட்டத்தை விலக்கி முன்வரிசையை அடைந்தான். ஒருவர் கையில் கோழியைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு யோசனை உதித்தது. அதைத் தன்னிடம் தருமாறு கேட்டான்.

''இது முனிக்காக வச்சிருக்கேன்'' என்றார் அவர்.

''நானும் முனிக்காகத்தான் கேட்கிறேன்.''

''கோழியை வெட்டணுமே.''

''வேண்டாம், அப்படியே கொடுங்க. மனுஷனையே அடிச்சுக் சாப்பிடற முனிக்குக் கோழியைக் கொல்றதில என்ன சிரமம் இருக்கப் போகிறது?''


அவர் கோழியைக் கொடுத்து விட்டார்.

ஜீவன் கோழியை ஒரு கயிற்றில் கட்டிக் கிணற்றில் இறக்கினான். நீர் மட்டத்தைத் தொட இன்னும் இரண்டடி இருக்கும்போதே கோழி பயங்கரமாகக் கத்தித் துடித்தது. காரணம் எதுவும் கண்ணுக்குப் புலப்படவில்லை. முனி பிடித்து விட்டது என்று கூறி மக்கள் கன்னத்தில் போட்டுக் கொண்டிருக்கும்போதே ஜீவன் கோழியை எடுத்து விட்டான். அது சில விநாடிகள் துடித்தபின் பழைய நிலைமைக்கு வந்தது.

''ஐயையோ, முனி கோழியை நெருங்கற சமயம் பார்த்து அதை வெளில எடுத்திட்டியே! அதன் சாப்பாட்டைப் பாதியில பறிச்சிட்டியே

பாவி! முனிக்குக் கோபம் வந்தால் ஊரையே அழிச்சுடுமே!'' என்று மக்கள் ஜீவனைத் திட்டி, அடிக்கக் கை ஓங்கினர்.

அவர்களைச் சற்றுப் பொறுமையாக இருக்குமாறு கூறி ஜீவன் சுற்றிலும் பார்த்தான். அருகில் ஒரு மேட்டில், முனியின் அடையாளமாக சூலாயுதம்



நடப்பட்டிருந்தது. பக்கத்தில் ஒரு கம்பில் அரிக்கேன் விளக்கு கட்டப் பட்டிருந்தது. அதில் எண்ணெய் மிஞ்சியிருந்தது. ஜீவன் விளக்கேற்றி, அதைக் கயிற்றில் கட்டி, கிணற்றில் இறக்கினான்.

பாதி தூரம் இறங்கியதும் விளக்கு அணைந்து விட்டது. ''இதையுமா முனி பிடித்துக் கொண்டது?'' என்று கேட்ட வாறு ஜீவன் விளக்கை மேலே எடுத்து விட்டான். மக்கள் வாய டைத்து நின்றனர். ஜீவனுக்குப் புரிந்து போன விஷயம் அவர்களுக் குப் புரியவில்லை.

''உங்க முனியை நான் சாந்தப் படுத்தறேன் பாருங்க'' என்று கூறி ஜீவன் எல்லோரையும் அருகிலிருந்த பம்ப் செட்டுகளுக்கு ஓடிச் சென்று அங்குள்ள பாத்திரங்கள் குடங்கள் மூலம் முடிந்த அளவு தண்ணீர் கொண்டு வந்து கிணற்றில் கொட்டுமாறு கேட்டுக் கொண்டான். ஏற்கெனவே மூன்றடிக்



மனிதர்களைப் போன்று நாய்களுக்கும் பற்பசை ரெடி! என்ன, ஆச்சரியமாக இருக்கிறதா?

லண்டனில் உள்ள 'ஹார்ட்ஸ்' என்ற டிப்பார்ட்மெண்ட் ஸ்டோர் இந்த நவீன பற்பசையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனால் நாயின் பல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகிறதாம்!

— நாகை. கே. ரவி. கோவை — 18.

குத் தான் தண்ணீர் இருந்ததால் புதிதாகத் தண்ணீர் கொட்டினாலும் உள்ளே விழுந்திருப்பவர்கள் மூழ்கிவிட மாட்டார்கள் என்று உறுதியளித்தான்.

பிறகு, பால்காரரின் சிறிய குவளையை எடுத்து அதில் மக்கள் கொண்டு வந்திருந்த ஏராளமான சூடவில்லைகளையும் சாம்பிராணியையும் கொட்டிப் பற்றவைத்துக் கிணற்றில் இறக்கினான். கிணற்றின் உள்ளே சூடம், சாம்பிராணியின் நறுமணப் புகை வேகமாகப் பரவியது. புதிய தண்ணீரும் ஒருபுறம் கொட்டப்பட்டது.

பதினைந்து நிமிடங்கள் கழிந்தன. ஜீவன் மீண்டும் கோழியையும் விளக்கையும் கிணற்றினுள் இறக்கினான். கோழி சாந்தமாக இருந்தது. விளக்கு அணையவில்லை.

''உங்க முனி இப்போ சாந்தமாயிட்டார். இனிமே யாராவது ஒரு ஆள் படி வழியா இறங்கி, உள்ளே கிடக்கிற ரெண்டு பேரையும் தனித்தனிக் கயிற்றால் கட்டிட்டு மேலே வந்திடுங்க. மேலேயிருந்து மெதுவா இழுத்திடுவோம். ஆனா முக்கியமா ஒரு விஷயம். தண்ணீர் மட்டத்தை நெருங்கும்போது, மூச்சுத் திணறினா மேற்கொண்டு கீழே இறங்காம உடனே மேலே வந்திடணும்'' - என்று கேட்டுக் கொண்டான் ஜீவன்.

அதன்படியே ஒருவர் கிணற்றில் இறங்கினார். பால்காரரும் புல்காரரும் கிணற்று உள்சுவரில் நின்ற நிலையில் மேலே சாய்ந்து கிடந்தனர். அவர்களைக் கயிற்றால் கட்டியதும் மேலே இருந்தவர்கள் இழுத்து வெளியே போட்டனர். இருவரும் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தனர். ஜீவன் எல்லோரையும் விலகியிருக்கச் சொல்லி விசிறினான். சில நிமிடங்களில் இருவரும் கண் விழித்தனர்.

''இப்போ இவங்களை ஊருக்குக் கொண்டு போங்க. இவங்க ஓய்வு எடுத்துக்கட்டும். சாயந்திரமாக கோவிலுக்கு வாங்க, எல்லா விவரமும் சொல்றேன்'' என்று கூறி ஜீவன் கிளம்பிவிட்டான். மக்கள் அவனைப் பாராட்டியபடியே கலைந்து சென்றனர்.

மாலை நேரம். ஊர்க் கோவிலில் மக்கள் திரண்டு வந்திருந்தனர். பூஜை முடிந்தது. மண்டப மேடையில் பஞ்சாயத்துத் தலைவர் வந்து அமர்ந்தார். அவர் ஜீவனை மேடைக்கு அழைத்து, மாலை போட்டு, பஞ்சாயத்தின் பரிசாக நூறு ரூபாய் கொடுத்தார். பால்காரரும், புல்காரரும் ஜீவனுக்கு மாலை போட்டு ஆளுக்கு நூறு ரூபாய் பரிசளித்தனர். ஜீவன் இருவரையும் காப்பாற்றிய விதத்தை விளக்கும்படி பஞ்சாயத்துத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

ஜீவன் அனைவரையும் வணங்கிவிட்டுத் தொடங்கினான். ''பெரியோர்களே, கடவுள் நிச்சயம் உண்டுங்கறதை நான் நம்பறவன். அந்தக் கிணற்றில முனி வசிப்பதாக நீங்க கூறி வந்ததை என்னால நம்ப முடியலை. இன்னிக்கு நடந்த சம்பவம் என்னோட கருத்து சரிதான்னு உறுதி செஞ்சிடுச்சு. கொஞ்ச மாத்தான் தண்ணி இருக்கிற கிணற்றில விழுந்தவங்க ஏன் படியேறி வர முடியலைன்னு எனக்கும் முதல்ல புரியலை. அப்போ திடீர்னு நான் படிச்ச ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்திச்சு. அதனாலதான் கோழியையும் விளக்கையும் வச்சு சோதனை செஞ்சேன். என் சந்தேகம் உறுதியாச்சு. விஷயம் புரிஞ்சு போச்சு.''

என்ன சோதனை தம்பி?'' என்று கூட்டத்திலிருந்து ஒருவர் கேட்டார். ''என்ன புரிஞ்சுக்கிட்டே தம்பி?'' என்று கேட்டார் இன்னொருவர்.

''பூமிக்குக் கீழே உள்ள சுரங்கங்கள் போன்றவைகளில் சில சமயம்

விஷக்காற்று பரவியிருக்கும். அதில ஒரு பிராணியை இறக்கினா அலைஞ்சு போகும். ஆனா மனுஷன் இறங்கினா உடனே சாக மாட்டான். மூச்சுத் திணறும். நேரம் ஆக ஆக மயக்கம் வந்திடும். அப்போ தண்ணிக்குள்ள விழுந்து மூழ்கிடுவான். மூழ்காம ரொம்ப நேரம் அந்தக் காற்றைச் சுவாசிச்சாலும் ஆபத்துத்தான். இந்த விஷக்காற்றாலதான் விழுந்தவங்க முகம் விகாரமாப் போகுது. இது தெரியாம முனி அடிச்சிடுச்சுன்னு நினைக்கிறீங்க.''

''சுரங்கத் தொழிலாளிகள் விளக்கோட இறங்கிப் போவாங்க. விளக்கு அணைஞ்சா இறங்க மாட்டாங்க. வெளியிலேர்ந்து புதுசாக் காற்றைச் செலுத்துவாங்க. அப்புறமும் விளக்கு அணையலேன்னாதான் சுரங்கத்துக்குள்ளே இறங்குவாங்க. கிணற்றுக் காற்றில பரவியிருந்த விஷத் தன்மையைக் குறைக்கறதுக்காகத்தான் புதுத் தண்ணி கொட்டவும், சூடம் சாம்பிராணி கொளுத்தவும் நான் ஏற்பாடு செஞ்சேன்.''

- ஜீவன் விளக்கினான்.


''நாங்க ரெண்டு பேரும் எப்படிச் சாகாம இருந்தோம் தம்பி?''என்று பால்காரரும் புல் காரரும் ஒரே சமயம் கேட்டனர்.

''கிணற்றில் தண்ணீர் மட்டத்துக்கு மேல ஒரு வேளை ரெண்டடி வரைதான் காற்று கெட்டுப் போயிருக்கும். அதுக்கு மேல காற்று சுத்தமா இருந்திருக்கும். தண்ணீர் ஆழத்தையும் சேர்த்தா மொத்தம் அஞ்சடி ஆகுது. அதனால அஞ்சடிக்குக் குறைவான உயரமுள்ள பிராணி விழுந்தா விஷக் காற்றுக்கு நடுவே மாட்டிக்கிட்டு செத்துப் போகுது. அஞ்சடி உயர மனுஷனுக்கு முழுப் பாதிப்பு ஏற்படாது. மூச்சு விடத் திணறிக்கிட்டிருப்பான். தலை சுற்றும். கண் எரியும். ஆகவே, தெளிவா சிந்திச்சு தப்பிக்க வழி கண்டுபிடிக்க முடியாது. மயக்கம் அதிகமாகித் தண்ணீல மூழ்கிட்டா மரணந்தான். உங்க அதிர்ஷ்டம், உள்ளே சுவரோரமா சாஞ்சு கிடந்தீங்க. இன்னும் கொஞ்ச நேரம் விஷக் காற்றை சுவாசித்திருந்தாலும் உயிர் போயிருக்கும்.''

ஒருவர் கேட்டார்: ''கிணற்றில காற்றுக் கெட்டுப் போன மாதிரி வீட்டிலேயும் ஆபத்து ஏற்படுமா?''

தலையசைத்தபடி ஜீவன் கூறினான், ''வீட்டிலேயும் விஷக்காற்று உண்டாக முடியும். இதைத் தடுக்க வீட்டிலே நிறைய ஜன்னல் வைக்கணும். ஒரே அறையிலே எல்லாரும் படுத்துக்கிட்டு, கதவு ஜன்னலையும் மூடிட்டா, நல்ல காற்று உள்ளே வர முடியாது. ஏற்கெனவே வெளியில விட்ட காற்றையே மறுபடியும் மறுபடியும் சுவாசித்து வெளியே விடும்படி ஆயிடும். அப்போ அந்த அறையிலே பரவியிருக்கிற காற்று விஷக்காற்றாயிடும். அங்கே படுத்திருக்கிறவங்க உயிருக்கு அபாயம் ஏற்படும். சினிமா, கோவில்ல ரொம்பக் கூட்டமிருந்து அதில மாட்டிக்கிட்டாலும் ஆபத்துத்தான்.''

''உனக்கு இந்த விஷயம் எப்படித்



சில மாணவர்கள் அறிஞர் செக்ஸ்டனிடம், ''நாங்கள் பிற்காலத்தில் அரசனாக வாழ என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டனர்.

செக்ஸ்டன் கூறினார்: ''முதல் இருபது ஆண்டுகள் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் அடிமை போல நடக்க வேண்டும். அப்படி நடந்து கொண்டால், அடுத்து வரும் எண்பது ஆண்டுகளில் ஓர் அரசனைப் போல வாழலாம். மாறாக முதல் இருபது ஆண்டுகளிலேயே ஓர் அரசனைப் போல நீங்கள் தருக்குடன் திரிவீர்களானால், அடுத்து வரும் எண்பது ஆண்டுகளில் ஓர் அடிமையைப் போல வருந்தி வாழ நேரிடும்.''

— தக்கோலம் முஸ்தபா.

தெரியும் தம்பி?'' என்று கேட்டார் ஒரு பெரியவர்.


''ஐயா, எங்க சரித்திரப் புத்தகத்தில் இதுபற்றி ஒரு பாடமே இருக்குங்க. இதோ கொஞ்சம் படிக்கிறேன் கேளுங்க''

'1756 ஆம் வருஷம் ஜூன் மாதம் 20 ஆம் தேதி நவாப் சிராஜ் உத்தௌலா கல்கத்தாவைத் தாக்கினார். நகரத்தைப் பாதுகாத்த ஆங்கிலப் படைச் சிப்பாய்கள் 146 பேர்களைப் படைத் தலைவராகிய ஹோல்வெல் என்பவருடன் சேர்த்துக் கைது செய்தார். திருடர்கள் விசாரணைக்காகக் காத்திருக்கும் சிறிய அறையில் அவர்களை அடைத்தார். அறையின் நீளம் 18 அடி, அகலம் 14 அடி 10 அங்குலம். அதில் இரண்டு சிறு ஜன்னல்கள் மட்டுமே இருந்தன. சில மணி நேரத்தில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆனால், 23 பேர்தான் உயிருடன் வெளியே வந்தனர். அவர்களும் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தார்கள்.'

மக்கள் ஜீவன் படிப்பதைக் கவனமாகக் கேட்டனர். படிப்பதை நிறுத்திவிட்டு ஜீவன் விளக்கினான். ''ஆரம்பத்தில அந்த அறையில காற்று அவ்வளவு மோசமில்லை. ஆனா, கைதிகள் சுவாசிக்கும் போது நல்ல காற்றையெல்லாம் உறிஞ்சிட்டாங்க. அவங்க வெளியில விட்ட காற்றில கரியமிலவாயு அதிகமாப் போயி அறையில விஷக்காற்று நிரம்பிடுச்சு. ஆகவே, ஒவ்வொருத்தரா சாக ஆரம்பிச்சிட்டாங்க. நம்ம ஊர்க் கிணற்றில காற்றுக் கெட்டதுக்குக் காரணம் வேறாயிருந்தாலும் விளைவு அதேதான்.''

கூட்டம் முடிந்தது. பஞ்சாயத்துத் தலைவர் கடைசியாகக் கூறினார்: ''இத்தனை நாளா கிணத்தில முனி இருந்திச்சுன்னு நடுங்கிக்கிட்டிருந்தோம். எங்க பயத்தைப் போக்கி வைச்சே தம்பி! உன்னை எப்படிப் பாராட்டறதுன்னே தெரியலே!

''இதோ நாங்க பாராட்டறோம்'' என்று சில இளைஞர்கள் முன்னே வந்தனர். எவ்வளவு மறுத்தும் விடாது ஜீவனை அலாக்காகத் தூக்கித் தங்கள் தோளில் அமர வைத்துக் கொண்டு கிராமம் முழுவதும் ஒரு தெரு விடாமல் ஊர்வலம் வந்தனர்!



உலகிலேயே பெரிய ஸ்டிரைக் நீண்ட காலம் நடைபெற்ற ஸ்டிரைக் — போராட்டம் ஒன்று உண்டு. கோபன் ஹாகனில் நடைபெற்ற சவரத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டந்தான் — ஸ்டிரைக்தான் அது! இந்த ஸ்டிரைக் — வேலை நிறுத்தம், 1927 ஆம் ஆண்டிலிருந்து 1961 ஆம் ஆண்டு வரை நடைபெற்று. அதாவது 34 ஆண்டு காலம் தொடர்ந்து தொய்வின்றி நடைபெற்றது!

— ஆ. திலகா, திண்டிவனம்.

நியூயார்க் நகரத்தில் அழுகைப் போட்டி நடந்தது. இதில் மிகவும் ஆர்வமாக நிறையப் பேர் கலந்து கொண்டனர். அவர்களில் ஒருவரான ''வெண்சான்டஸ்கி'' என்பவர் சுமார் 3½ மணி நேரம் விடாமல் அழுதார். அவர் வடித்த கண்ணீரின் அளவு ½ லிட்டர். இப்போட்டியில் வெண்சான்டஸ்கியே முதல் பரிசைத் தட்டிச் சென்றார்.

— ஜ. சலீம், வந்தவாசி.





எங்கப்பாவா கஞ்சன்!

காட்சி - 1

(காலை நேரம், தெருவில் சுரேஷ், சரவணன்)

சுரேஷ் : சரவணா... 'பேன்ட்' ஷர்ட் அழகாயிருக்கே புதுசா?

சரவணன் : ஆமா. சுரேஷ் இன்னிக்கு எனக்கு 'பர்த்டே' ஆச்சே! இந்தா.. சாக்லேட் எடுத்துக்கோ.

சுரேஷ் : அப்படியா. ரொம்ப சந்தோஷம். பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

சரவணன் : தாங்க்ஸ். இன்னும் ரெண்டு சாக்லேட் எடுத்துக்கோ.

சுரேஷ் : அடேடே... இது என்ன புதுப்பேனாவா?

சரவணன் : இது எங்க அம்மா என் பிறந்த நாளுக்கு வாங்கிக் கொடுத்த பேனா. விலை இருபத்தி அஞ்சு ரூபாய்.

சுரேஷ் : நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரன். ஒரே பையன். அதனால உங்க அம்மா நீ கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்திடறாங்க.

சரவணன் : சுரேஷ் நீயும் உங்க அம்மா... அப்பாவுக்கு ஒரே பையன் தானே!

சுரேஷ் : ஆமா. ஆனா.. என்ன பிரயோசனம்? நீ எங்களுக்கு 'ஒரே பையன்', அதனால ஒழுங்கா படிக்கணும். கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கணும்னு சொல்றாங்க.

சரவணன் : உங்க அப்பா சரியான கஞ்சனாயிருப்பார் போலயிருக்கு. அதனால அப்படி ஒரு சாக்கு சொல்றாருடா.

சுரேஷ் : ஆமாண்டா சரவணா. ஸ்கூலுக்குப் போறதுக்கு சைக்கிள் கூட வாங்கித்தர மாட்டேன்னு சொல்லிட்டார்டா. தினம் மூணு கிலோ மீட்டர் நடந்தே வர வேண்டியிருக்கு.

-சரவணன் : எங்க அப்பா... நா

கமலவேலன்

என்னிக்காவது ஒருநாள் நடந்து போனாக்கூட உயிரையே விட்டுடுவார். இத்தனைக்கும் ஸ்கூலுக்குப் பக்கத்துல தான் வீடு. புது சைக்கிள் ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்தி ருக்காரு.

சுரேஷ் : டியூஷனுக்குக் கூட ஏற்பாடு பண்ண மாட்டேன்னுட்டார் எங்க அப்பா. நீயா.... பள்ளிக்கூடத்துல ஆசிரியர்கள் நடத்தறதை கவனமாக் கேட்டுப்படி.... அப்படின்னு கறாரா சொல்லிட்டாரு. நல்ல வேளையா எங்க வீட்டுக்குப் பக்கத்துல விஜயான்னு ஒரு அக்காஇருக்காங்க. எம். ஏ., படிச்சவங்க. அவங்களைக் கேட்டுப் படிச்சுக் கறேன்.


சரவணன் : சரி சுரேஷ். எனக்கு நேரமாச்சு. இன்னும் நிறைய நண்பர்களைப் பார்க்கணும். அதோட என்னோட டியூஷன் சார் வீட்டுக்கு வேற போகணும். நீ.... வேணா.. என் சைக்கிள் கேரியர்ல உட்காரு. உன்னை வீட்டுல கொண்டு விட்டுட்டுப் போறேன்.

சுரேஷ் : எங்க அப்பா பார்த்தால் திட்டுவார்டா. அடுத்தவங்களுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாதுன்னு சொல்லுவாரு. பரவாயில்லே. நான் நடந்தே போயிடறேன்.

காட்சி 2

(விஜயா அக்கா வீடு)

சுரேஷ் :(வந்து கொண்டே) அக்கா... விஜயா அக்கா.



விஜயா : வா... சுரேஷ்... இன்னிக்கு டென்த்ரிசல்ட் வரப்போகுது. நீ... என்ன டான்னா 'டல்லாயிருக்கிறியே? பாஸ் பண்ணுவோமாங்கற சந்தேகமா?

சுரேஷ் : பாஸ் பண்றதுல சந்தேகமே கிடையாது. அதுவும் உங்ககிட்ட அப்பப்போ... சந்தேகங்களைக் கேட்டுப் படிச்சிருக்கிறேன். நான் பாஸாகமலா?

விஜயா : அப்புறம் என்ன கவலை?

சுரேஷ் : நீங்களே சொல்லுங்க அக்கா. எங்க அப்பாவுக்கு நான் ஒரே பையன். ஆனால், எனக்கு எந்த வசதியையும் செய்து தர மாட்டேங்கறாரு.

விஜயா : அடேடே...! அப்பா மேல கோபமா?

சுரேஷ் : சரவணன் அவங்க அப்பாவுக்கு ஒரே பையன். அவங்க அப்பா.. அவனுக்கு அவன் கேட்டதெல்லாம் வாங்கித் தர்றார்.

விஜயா : நீ... சிட்டுக் குருவி பார்த்திருக்கியா?

சுரேஷ் : என்னக்கா... இது! சிட்டுக் குருவி பார்க்காமலா? எங்க வீட்டு முற்றத்துல... தினம் அரிசி பொறுக்க வருமே!

விஜயா: ஒவ்வொரு குருவியும் தனக்கு வேண்டிய உணவைத் தானே தேடிக் குது. தனக்கு உரிய வீட்டைத் தானே கட்டிக்குது. கவனிச்சிருக்கியா?

சுரேஷ் : ஆமா...! அதுக்கு என்ன இப்போ?

விஜயா : ஆனா... மனுஷன் மட்டும் தான் காலம் காலமா பெரியவங்களையே சார்ந்து வாழ்றான். அவங்க உழைப்பிலேயே வளர்றான். நீ அப்படி இருக்கக் கூடாதுன்னுதான் உங்க அப்பா... இப்படிக் கண்டிப்பா இருந்து உன்னை வளர்க்கிறார்! பொறுப்பா நடந்துக்கணும்னு பயிற்சி தர்றாரு.

சுரேஷ் : என்னதான் சொல்லுங்க அக்கா. சரவணன் கொடுத்து வச்சவன். சரி... நேரமாகுது. நா... வர்றேன் அக்கா.

காட்சி - 3


(காலை நேரம். தெருவில் சரவணன், சுரேஷ்)

சரவணன் : அச்சச்சோ...! என் நம்பர் பேப்பர்ல வரலையே... நான் ஃபெயில் ஆனது தெரிஞ்சா... எங்க அப்பா ரொம்பக் கோபிச்சுப்பாரே! ஐய்யய்யோ. இப்ப நான் என்ன செய்வேன்.

பேசாம ஊரை விட்டே ஓடிட வேண்டியதுதான். அதைத் தவிர வேற வழியே இடையாது.

சுரேஷ் : சரவணா... என்ன இது! முட்டாள்தனமான முடிவு. பத்தாம் வகுப்புத் தேர்வுல ''பெயிலாயிட்டா'' வாழ்க்கையே தோல்வின்னு அர்த்தமாடா? சரி அப்படியே நீ ஊரை விட்டு ஓடிட்டா, பெயிலானது பாஸ்"ன்னு மாறிடுமா.?

சரவணன் : இல்லேடா... சுரேஷ். எப்படிடா... நான் எங்க அப்பா முகத்துல முழிக்கிறது? ரொம்ப அவமான



மாயிருக்குடா.

சுரேஷ் : தோல்வியே வெற்றிக்கு அறிகுறின்னு நம்ம ஆசிரியர் அடிக்கடி சொல்லுவாரே, அதை மறந்துட்டியா? சரி.. சரி.. வா. உங்க அப்பாவை நான் சமாதானப்படுத்தறேன்.

(சரவணனை அவன் வீட்டில் சேர்த்துவிட்டு, விஜயா அக்காவைக் காணச் செல்கிறான் சுரேஷ்.)

காட்சி - 4

(விஜயா அக்கா வீடு. சுரேஷ் வருகிறான்)

சுரேஷ் : அக்கா... நான் பாஸ் பண்ணிட்டேன்.

விஜயா : காலையிலேயே பேப்பர்ல பார்த்தேன். அக்காவின் பாராட்டுக்கள்.

சுரேஷ் : இன்னொரு 'குட்நியூஸ்'. எங்க பள்ளியிலேயே நான்தான்... டென்த்ல பர்ஸ்ட் மார்க்.

விஜயா : அப்படியா..!ரொம்ப சந்தோஷம். ஆனால், இது நான் எதிர்பார்த்ததுதான் சுரேஷ்.

சுரேஷ் : எல்லாம் உங்களுடைய ஆசீர்வாதம்தான் காரணம். ஆனா... சரவணன்தான் பாவம். ஃபெயிலாயிட்டான் அக்கா...

விஜயா : அடேடே! அப்படியா? சரவணன் பெயில் ஆனதுக்கு யார் காரணம் தெரியுமா சுரேஷ்? அவனோட பெற்றோர்தான்.

சுரேஷ் : எப்படி அக்கா?

விஜயா : ஒரே பையன்னு கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தாங்க. ரொம்பச் செல்லமா வளர்த்துட்டாங்க. படிப்பிலே கவனம் குறைஞ்சு போச்சு. அதனால, அவன் படிப்பைக் கோட்டை விட்டான். கண்டிச்சு வளர்க்கலேன்னா... பின்னால் கவலைப்பட வேண்டியதுதான்.

சுரேஷ் : உண்மைதான் அக்கா. இதை இப்போ... நான் நல்லாவே உணர்றேன்.

விஜயா : முதியோர் வாக்கும் முது நெல்லிக்கனியும் முன்னால் புளிக்கும் பின்னால் இனிக்கும்னு ஒரு பழமொழியே சொல்லுவாங்க.

ஆனால் உங்க அம்மா, அப்பா 'ஒரே பையன்'னு செல்லம் கொடுக்காம கட்டுப் பாடோட... உன்னை வளர்த்தாங்க. அதனால இப்போ நீ உங்க பள்ளிக் கூடத்துலயே 'பர்ஸ்ட்' மார்க் எடுத்த 'ஒரே பையனாக' புகழ் பெற்றுட்டே.. இல்லையா?

சுரேஷ் : அக்கா, எங்க அப்பா, அம்மா பெருமை இப்படித்தான் எனக்குத் தெரியுது. இனிமே அவங்களை நான் தூற்றமாட்டேன்; போற்றுவேன்.

திருட்டு மாங்காய்!



சேதுராமன் காலனியில் உள்ள பூங்காவிற்கு வலதுபுறமாகத் திரும்பிப் பார்த்தால் ஒரு மஞ்சள் வீடு தென்படும். அதுதான் இன்ஸ்பெக்டர் விக்ரம் வீடு. இந்த வீட்டில்தான் அந்த மாமரம் இருந்தது. கொத்துக் கொத்தாய் மாங்காய்கள்.

தங்கள் வீட்டு மரத்தில் காய்கள் கொத்துக் கொத்தாகக் காய்த்திருப்பதைக் கண்டு இன்ஸ்பெக்டர் மனைவி சாந்திக்கு கர்வம் அதிகம்.

ஒருநாள் சாந்தி பின்புறம் சென்று திரும்பிய போது, மாமரத்தில் திடீரென்று காய்கள் குறைந்து இருப்பது தெரிந்தது. 'திக்'கென்றது அவளுக்கு. உடனே கணவனை அழைத்தாள்.

''நம்ம மாமரத்தில் காய்கள் குறைஞ்சு இருக்குதுங்க. யாரோ திருடியிருக்காங்க. யாருன்னு தெரியலைங்க?'' என்று கண்கலங்கினாள் சாந்தி.

இன்ஸ்பெக்டர் வந்து பார்த்தார். சாந்தி கூறியது உண்மைதான். யாரோ திருடி யிருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் வீட்டிலேயே திருட்டா? வெளியே தெரிந்தால் எவ்வளவு அவமானம்!

விக்ரம் யோசனையில் ஆழ்ந்தார். ஒரு முடிவுக்கு வந்து எழுந்தார்.

அடுத்த நாளே இன்ஸ்பெக்டர் விக்ரம் திருடனைப் பிடித்து விட்டார்.

''எப்படிங்க முடிந்தது!'' - இன்ஸ்பெக்டர் மனைவி சாந்தி வியப்புடன் கேட்டாள்.

''எல்லாத்துக்கும் உன் கர்வம்தான் காரணம். நம்ம மார்க்கெட்டில் காய்கறிக்கடை வைச்சிருக்கானில்லே முருகன், அவன்தான் திருடியது.''

''எப்படிங்க கண்டுபிடிச்சீங்க?''

''வழக்கம் போல் இன்றும் மார்க்கெட்டுக்குக் காய்கறி வாங்கப் போனேன். ஒவ்வொரு கடையிலும் மாங்காயை அநியாய விலைக்கு விற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்த முருகன் கடையில் மட்டும் மாங்காய் விலை ரொம்பக் குறைஞ்சு இருந்தது.

''எனக்கு உடனே தெரிஞ்சு போச்சு அதெல்லாம் திருட்டு மாங்காய்கள். இவன் உண்மையில் காசு போட்டு வாங்கி வந்திருந்தால், எல்லாக் கடைக்காரர்கள் விற்கிற விலைக்கேதான் வித்திருப்பான் இல்லையா என்று எனக்குச் சந்தேகம் வந்தது.

''உடனே அவனை ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் இரண்டு தட்டு தட்டினவுடன் உண்மையை ஒப்புக் கொண்டான்.''

இதைச் சொல்லும் போது இன்ஸ்பெக்டர் விக்ரம் முகத்தில்தான் எத்தனை பெருமிதம்.

- ஐ. சமியுல்லா, திருச்சி.

மூன்று கேள்விகள்

நர்மதை நதிக் கரையில் ஒரு காடு. வெகு காலத்திற்கு முன்னால் அங்கே விஜயன் என்ற விறகு வெட்டி இருந்தான். அவன் இளைஞன்; அனாதை; ஏழை. வறுமை அவனை வாட்டியது. இலை தழைகளைத் தைத்து ஆடையாக உடுத்தியிருந்தான். புற்களைச் சேர்த்துக் கட்டி, அதைக் குல்லாவாக அணிந்திருந்தான். காய், கனி, கிழங்குகளை உணவாக உண்டான். தனியாகக் காட்டில் வசித்தான்.

அந்தக் காட்டில் மாதங்கர் என்ற ஒரு முனிவர் இருந்தார். பெரும்பாலும் அவர் தியானத்தில் இருப்பார். அல்லது ஓலைச் சுவடிகளை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருப்பார் அல்லது எழுதிக் கொண்டிருப்பார். விஜயன் அடிக்கடி முனிவரின் ஆசிரமத்திற்குப் போவான். பேசி வணங்கி விட்டு வருவான். அவனுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தது கூட முனிவர் தான். அவரிடம் பழகியது முதல் விஜயன் அச்சம் இல்லாமல் அந்தக் காட்டில் வாழக் கற்றுக் கொண்டான்.

அவன் எதைக் கண்டும் பயப்படவில்லை. யாரைக் கண்டும் பயப்படவில்லை.

ஒரு நாள் விஜயனுக்குத் திடீரென்று தன் வறிய வாழ்க்கையில் சலிப்புத் தட்டியது. செல்வந்தனாக வேண்டும் என்ற ஆசை வந்தது. வழக்கப்படி அவன் மாதங்கரைத் தரிசிப்பதற்காகப் போனான். அவன் போன போது வழக்கம் போலவே அவர் ஒரு பழைய ஓலைச் சுவடியைப் படித்துக் கொண்டிருந்தார்.

''விஜயா, வாப்பா! இந்தக் காட்டின் எளிய வாழ்க்கை உனக்குச் சலித்து விட்டதா? என்று முனிவர் கேட்டார்.

''அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''— ஆச்சரியத்தோடு விஜயன் கேட்டான்.

''இந்தச் சுவடி சொல்லுகிறது, பார்!'' என்றார் முனிவர். விஜயன் அந்தச் சுவடியை எட்டிப் பார்த்தான்.

''...அந்த விறகு வெட்டிக்குக் காட்டின் எளிய வாழ்க்கையில் சலிப்புத் தட்டியது. அவன் தனக்குத் தெரிந்த முனிவரைப் பார்க்கப் போனான். அப்போது அவர் மந்திரச் சுவடியைப் படித்துக் கொண்டிருந்தார்...'' என்ற எழுத்துக்கள் முத்து முத்தாக ஓலையில் எழுதப்பட்டிருந்தன.

''விஜயா, இந்த ஓலையைப் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன். உலகில் நடக்கின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் முன்கூட்டியே இதில் சொல்லப்பட்டுள்ளன. இதில் இல்லாத ஒன்றுமே உலகில் நடக்காது. இப்போது நாம் பேசிக் கொள்வது பற்றிக் கூட இதில் இருக்கிறது. அதனால், 'செல்வந்தனாவது எப்படி?' என்பதை நீ தெரிந்து கொள்ள விரும்பினால் சீக்கிரமாக ஓர் ஏட்டைத் தள்ளிப் பார். உன் எதிர்காலத்தை

ஜெர்மனிக் கதை | தமிழில்: வாமனன்

அங்கே காணலாம்!'' என்றார் முனிவர்.

அவசரமும், ஆவலும் உந்த விஜயன் மூன்று, நான்கு ஓலை களைத் தள்ளி விட்டுப் படித்தான்.

''....ஆற்றங்கரையின் அமைதிச் சூழ்நிலை. மாதங்க முனிவர் ஒரு புதிய ஆச்ரமத்தில் வாழ்ந்தார். முதிர்ந்த வயது. பழுத்த பழமாக அவர் காட்சி அளித்தார். கண் பார்வை குறைந்திருந்தது. சுவடி களைப் படிக்க முடியவில்லை. எனி னும், தான் எப்படி வாழப் போகி றோம், மற்றவர்கள் எப்படி வாழப் போகிறார்கள் என்ற விஷயங்களை எல்லாம் அவர் ஞானக் கண்ணால் கண்டு ரசித்துக் கொண்டிருந்தார். சுவடிகளின் எல்லையைக் கடந்த ஓர் ஆனந்த நிலையில் அவர் இருந்தார்....'' என்று விஜயன் படித் தான்.

''நீ படித்ததைக் கேட்பதற்கு நன்றாகத்தான் உள்ளது. ஆனால், அதிக ஏடுகளைப் புரட்டி விட்டாயே! உன்னை ஓர் ஏட்டைத்தானே புரட் டச் சொன்னேன்?'' என்றார் முனிவர்.

ஒரே ஒரு ஓலையை மட்டும் தள்ளி விட்டு, அடுத்த ஏட்டில் இருந்த எழுத் துக்களை விஜயன் படித்தான்:

''.....விறகு வெட்டி விஜயன் சந்தோஷத்தில் மிதந்தான். வேகமாக அந்த பிரம்மாண்டமான மரத்தின் மேல் ஏறினான். உச்சியில் ஒரு பொந்து. இருண்ட குகையின் வாச லைப் போல அது அவனை வரவேற் றது......''

அந்த ஓலையில் அவ்வளவுதான் எழுதப்பட்டிருந்தது.

''நான் அடுத்த ஏட்டைப் பார்க்க லாமா?'' என்று விஜயன் ஆவலுடன் முனிவரைக் கேட்டான்.

''கூடாது; கூடாது! எதிர்காலத் தைப் பற்றி நீ ரொம்பவும் ஆழமாகத் தெரிந்து கொள்ள ஆசைப்படு கிறாய். அது ஒரு மனிதனுக்கு நல்ல தல்ல. எனினும், நீ என் உதவியை நாடி வந்திருக்கிறாய். உனக்குக் கொஞ்சமாவது நான் உதவி செய்ய விரும்புகிறேன். அந்த மரம் ஓர் ஆல மரம். அதில் ஓர் அடையாளம் இருக்





கும். இதற்கு மேல் நான் பேசுவது உசிதமில்லை. தைரியமாகப் போ, விஜயா! என் ஆசிகள்!'' என்று சொல்லி முனிவர் அவனை ஆசீர்வதித்தார்.

விஜயன் முனிவரை வணங்கி எழுந்தான். அந்த அபூர்வ ஆலமரத்தைத் தேடிப் புறப்பட்டான். முதல் நாளன்று அவன் சுமார் நூறு ஆலமரங்களைப் பார்த்தான். ஆனால், அவற்றில் எந்தவிதமான அடையாளமும் இருக்கவில்லை. இரண்டாம் நாளும் அவன் ஆயிரம் ஆலமரங்களைப் பார்த்தான். அவற்றிலும் எவ்வித அடையாளமும் காணப்படவில்லை. மூன்றாம் நாளும் அவன் தன் முயற்சியைத் தொடர்ந்தான். பகல் முழுவதும் தேடினான். சோதனையாக ஓர் ஆலமரம் கூடத் தென்படவில்லை.

பொழுது சாயும் நேரம். மேற்குப் பகுதியில் ஒரு குன்று. அதன் பின்னால் சூரியன் மறைந்து கொண்டிருந்தான். சூரியனின் கதிர்கள் பட்டு அந்தக் குன்றின் சில பகுதிகள் பளிச்செனமின்னின. தீட்டப்பட்ட ஓவியத்தைப் போல அந்தக் குன்றின் மேல் நின்று கொண்டிருந்த மிகப் பெரிய ஓர் ஆலமரம் விஜயனின் பார்வையை ஈர்த்தது.

''இந்த ஆலமரத்தையும் பார்த்து விடலாமே. இதுவும் பயனளிக்காவிட்டால், இரவு நேரத்தை இங்கேயே கழித்து விட்டு அதிகாலையில் மறுபடி முயற்சியைத் தொடரலாம்,'' என்று விஜயன் முடிவு செய்தான்.

விஜயன் மரத்தை நெருங்கினான். தான் தேடி வந்தது இதுதான் என்பதை அவன் நொடிப் பொழுதில் உணர்ந்தான். அடி மரத்தில் '6' என்ற இலக்கம் அழகாக அடையாளமாகச் செதுக்கப்பட்டிருந்தது.

விஜயன் பசி, தாகம், களைப்பு, தூக்கம் யாவற்றையும் மறந்தான். வேகமாக மரத்தில் ஏறினான். உயரே கிளைகள் பிரியும் இடத்தில் ஒரு பொந்து இருந்தது. மரத்தின் உட்பாகம் வெறுமையாகவும், ஓர் இருண்ட குகையைப் போலக் காணப்பட்டது.

''முனிவர் சொன்னதெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. நான் தைரியமாக உள்ளே போவேன்,'' என்று நினைத்துக் கொண்டே விஜயன் அந்தப் பொந்தின் உள்ளே குதித்தான். உள்ளே பயங்கர இருள். முடிவே இல்லாதது போல அந்தப் பாதை நீண்டு சென்றது. விஜயன் நடந்தான். எதைக் கண்டும் பயப்படாமல், யாருக்கும் பயப்படாமல் நடந்தான்.

பொழுது புலரும் நேரம். இருள் கரையத் தொடங்கியது. அவன் முன்னால் பிரகாசமான ஏதோ ஒன்று சிறகடித்துக் கொண்டு பறந்தது. அது ஒரு பெரிய வண்ணத்துப்பூச்சி. ''வண்ணத்துப்பூச்சி இருந்தால், நிச்சயமாக வெளியே போக வழி இருக்கும்,'' என்ற நினைப்பு அவனுக்கு உற்சாகத்தை ஊட்டியது. திடீரென அவன் எதிரே ஒரு படிக்கட்டும், அதன் உச்சியில் நல்ல வெளிச்சமும் தெரிந்தன. செல்வந்தனாக வேண்டும் என்ற ஆர்வம் உந்த அவன் 'மளமள'வென அந்தப் படிக்கட்டுகளின் மேல் ஏறினான். இமைப் பொழுதில் அவன் ஒரு பெரிய முற்றத்தை அடைந்து நின்று கொண்டிருந்தான்! அதிசயம் பொங்கும் விழிகளால் விஜயன் அந்த முற்றத்தைச் சுற்றி நோக்கினான்.

முற்றத்தின் தரையில் சலவைக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. நாலா புறங்களிலும் புல்வெளிகளும், பூச்செடிகளும், பல வகை மரங்களும் காட்சியளித்தன. சற்றுத் தொலைவில் ஓர் அழகிய அரண்மனையின் வெளிச் சுவர்கள் தெரிந்தன. சுவர் அருகில் சமாதியைப் போல குவியல் குவியல்களாக மண் குவிக்கப்பட்டிருந்தது. விஜயன் அவற்றை

எண்ணிப் பார்த்தான். பதினைந்து குவியல்கள் இருந்தன. ஒவ்வொரு குவியலின் மேலும் கூழாங்கற்களைக் கொண்டு ஏதோ ஒரு பெயர் எழுதப் பட்டிருந்தது. பக்கத்தில் ஓர் ஆலமரம். அதன் நிழலில் தங்க சிம்மாசனத்தில் ஓர் அரசன் வீற்றிருந் தான்.

''இளைஞனே, வாழ்த்துக்கள்! முயற்சி செய்யலாமென நீ வந்திருக் கிறாயா?'' அரசன் விஜயனைப் பார்த்துக் கேட்டான்.

''ஆமாம், நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று விஜயன் திருப் பிக் கேட்டான்.

''மூன்று கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். சரியான பதிலைச் சொன்னால், என் பெண்ணை உனக்குக் கல்யாணம் செய்து வைப்பேன்,'' என்றான் அரசன்.

''பேஷ், பேஷ், நன்றி அரசே. நாம் இப்போதே தொடங்கலாமா?'' என்று விஜயன் அவசரப்பட்டான்.

''அது சரி. உனக்குப் பயமாக இல்லையா?'' என்று அரசன் கேட் டான்.

''இல்லை. நான் எதற்காக பயப் பட வேண்டும்? மேலும் நான் எதைக் கண்டும் பயப்பட மாட்டேன். யாரைக் கண்டும் பயப்பட மாட் டேன். ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?'' விஜயன் கேட்டான்.

''ஏனென்றால் உனக்கு முன் னால் ஏற்கெனவே பதினைந்து பேர் கள் இங்கு வந்து முயற்சி செய்தார் கள். அவர்கள் எல்லாம் தோற்றுப் போய், அதோ அந்த மரங்களின் அடியில் புதையுண்டு கிடக்கின்றனர். நீ சரியான பதில் தராவிட்டால், உனக்கும் அதே கதிதான். மரண தண்டனைதான் கிடைக்கும்.. நன்றாக நினைவில் கொள்!'' என் றான் அரசன்.

''நீங்கள் ஒரு துணிவான அரசர். உங்களை எனக்கு ரொம்பப் பிடித் திருக்கிறது,'' என்று அரசரைப் பார்த் துச் சொன்னான் விஜயன்.

அரசன் முகத்தைச் சுளித்தான்.

''நீ துடுக்குத்தனமாகப் பேசு கிறாய். இதுவரை யாருமே என்னி டம் இம்மாதிரிப் பேசியதில்லை. கொஞ்சம் பொறு. வெகு விரைவில் நீ வேறுவிதமாகப் பேசப் போகி றாய்!'' என்று எச்சரித்தான் அரசன்.

அரசன் விஜயனைச் சபைக்கு வரச் சொன்னான். அந்த நாட்டு அறிஞர்களும், வீரர்களும் அங்கே குழுமியிருந்தனர். அரசன் அரியா சனத்தில் அமர்ந்தான். செங்கோ லைக் கையில் எடுத்து ஜாடை காட்டி னான்.

உடனே வாத்தியக்காரர்கள் ஊது கொம்பை எடுத்து எக்காளமிட்ட னர். பிறகு நிசப்தம் நிலவியது. அரச குமாரி சபையில் பிரவேசித்தாள். அவள் பேரழகியாகத் திகழ்ந்தாள்.

இளவரசி விஜயனின் முன்னால் வந்து நின்றாள்.

''முன்னாலே அதைத் தலை
கீழாக்கு.
பின்னாலே அதை நீ கூட்டு
அறிவே இல்லா மனிதர்கள்,
அந்தோ, அனைத்தையும் இழந்
தனரே!''

என்று இனிய குரலில் இளவரசி பாடினாள். பிறகு, 'என் பாட்டுக்கு என்ன பொருள்?' என்று விஜயனி டம் கேட்டாள்.

விஜயனின் முகத்தில் புன்னகை அரும்பியது. ஆலமரத்தில் அடையாள மிடப்பட்டிருந்த எண்ணை அவன் நினைவுகூர்ந்தான்.

''அது '6' என்னும் எண். அதைத் தலைகீழாக மாற்றினால் '9' ஆகும். இரண்டையும் கூட்டினால் '15' வரும். '15' என்பது அறியாமையால் இங்கு வந்து உயிரிழந்த 15 மனிதர் களைக் குறிக்கிறது,'' என்றான் விஜயன்.

இளவரசியின் முகம் நாணத்தால் சிவந்தது. ''உங்கள் யூகம் சரிதான்,'' என்று அவள் விஜயனைப் பாராட்டி னாள். அரசன் ஆச்சரியத்தில் மூழ்கி னான்.

''அடுத்த கேள்வி என்ன?'' விஜயன் கேட்டான்.

''அடுத்த கேள்வி என்னுடையது. உன்னால் அதற்குப் பதில் சொல்ல முடியுமா என்று பார்ப்போமா?'' என்று கேட்டு விட்டு, அரசன் பாடத் தொடங்கினான்.





"பறவை என்றால் பொய்யாகும்;
பறக்கும் ஆனால் பாடாது!
சிலந்திப் பூச்சி அதுவல்ல
சிறப்பாய்,மெலிதாய்நூல்நூற்கும்!
அரசன் அணியும் ஆடைக்கும்
அதுவே காரணம் அறிவாயே!
அரசன் செய்த விடுகதையின்
அரிய பதிலை உரைப்பாயே!"

பாடி முடித்து விட்டு அரசன் பெருமையோடு விஜயனைப் பார்த்தான்.

விஜயன் புன்னகைத்தான். சுரங்கப் பாதையில் தனக்கு வழிகாட்டிய வண்ணத்துப் பூச்சி அவனுடைய மனத் திரையில் தோன்றியது.

"பறவை அல்லாத ஒன்று பறக்கிறது என்றால், அது ஒரு பூச்சியாகத்தான் இருக்க வேண்டும். சிலந்தி அல்லாத ஒன்று நூற்கிறது என்றால், அது ஒரு வண்ணத்துப் பூச்சியாகத்தான் இருக்க வேண்டும். அரசே நீங்கள் அணிந்துள்ள பட்டாடை அந்தப் பூச்சியின் பட்டு நூலிலிருந்து வந்ததுதான்!"—பளிச்சென்று பதில் அளித்தான் விஜயன்.

அரசன் ஆச்சரியத்தால் வாயடைத்துப் போனான். விஜயனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். காட்டிலிருந்து வந்த ஒரு மனிதன் சரியான விடை சொல்லி விட்டான் என்பதை அரசனால் எளிதில் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"இப்போது இளவரசியை எனக்குத் தருவீர்களா?"—விஜயன் கேட்டான்.

"ஓ, அதற்குள் அவசரமா? இரண்டு கேள்விகளைத்தானே நாம் முடித்துள்ளோம். இன்னும் மூன்றாவது பாக்கியிருக்கிறதே!"—அரசன் கேலி செய்தான்.

"இல்லை, இல்லை. ஏற்கெனவே நாம் அதை முடித்து விட்டோம். வெளியே நான் முற்றத்தில் இருக்கும் போதே நீங்கள், 'பயமாக இல்லையா?' என்று என்னிடம் கேட்டீர்கள். நான், 'இல்லை!' என்றேன். அதுதான் சரியான பதில். ஏனென்றால் நான் எதைக் கண்டும் பயப்படுவதில்லை. யாரைக் கண்டும் பயப்படுவதில்லை." என்று துணிவோடு உறுதியாகப் பேசினான் விஜயன்.

சந்தோஷ மிகுதியால் இளவரசி கையைத் தட்டினாள். விஜயனின் அச்சமின்மையையும், அறிவுக் கூர்மையையும் பாராட்டினாள்.

விஜயனுக்கும், இளவரசிக்கும் திருமணம் நடந்தது. தன் அறிவாலும், துணிவாலும் விஜயன் உயர்ந்து நல்ல அரசனாக விளங்கினான்.


மறைந்திருப்பது யார்?



புள்ளிகள் உள்ள கட்டங்களுக்கு வண்ணம் தீட்டிப்பாருங்கள்!



வண்ணந் தீட்டுங்கள்


மந்திரப் பொம்மை
கதை: ஆனந்தி
படம்: வினு
விந்திய மலைச்சாரல் அருகே ஒரு சிறு நகரம்.
அந்நகரில் ஒரு வீட்டில்...
மாணிக்கம்! உன்னைத் தனியா விட்டுட்டுப் போறேன். பயப்படாதே...
ஏம்மா, இப்படிப் பேசறே?
இல்லே கண்ணு, என் முடிவு நெருங்குது.... இந்த பொம்மையை வெச்சுக்க... இதை உன் அம்மான்னே நினைச்சுக்க...
...உனக்கு ஏதாவது கஷ்டம் வந்தா, நீ சாப்பிடற உணவிலே இதுக்குக் கொஞ்சம் கொடுத்துட்டுச் சொல்லு. உதவி பண்ணும்...
சரிம்மா.
மாணிக்கவல்லியின் தாய் இறந்து போனாள். சிற்றன்னைக்கு மாணிக்கத்தைப் பிடிக்கவில்லை...
ஏய், சோம்பேறி!
மாணிக்கவல்லி தந்தையை ஏறிட்டுப் பார்த்தாள்... ஆனால்
இதபாரு! முரண்டு பண்ணாதே! சித்தி என்ன சொன்னாலும் செய்யணும்!


சிற்றன்னையின் குழந்தைகள் படுத்தி எடுத்தன...
அடியே மாணிக்கம்! இந்தக் குழந்தைகளைக் கொஞ்சம் கவனிக்கப்படாதா? இப்படி அடம் பிடிக்கிறியே...
மாணிக்கவல்லியின் அழகு வளர வளர, சிற்றன்னைக்குப் பொறாமை...
என்ன அலங்காரம் வேண்டிக் கிடக்கு...? சமையலைக் கவனி, போ!
மாணிக்கவல்லி வீட்டு வேலைகள் எல்லாம் செய்தாள்...
சாப்பாடு தயாரா?
துணி துவைச்சாச்சா...?
பத்து பாத்திரம் இன்னும் தேய்க்கலையா!
அன்றிரவு...
ஐயோ! காலைச் சமையலுக்கு விறகு இல்லையே, என்ன பண்ணுவேன்!
மாணிக்கவல்லிக்கு அம்மா பரிசளித்த பொம்மை நினைவுக்கு வர...
பொம்மையே! பால் சாப்பிடு!



பொம்மை பால் அருந்தியதும் பேசியது...
மாணிக்கவல்லி! விறகு பற்றிக் கவலைப்படாதே, தூங்கு! நான் பார்த்துக்கறேன்.
பொம்மை கானகம் சென்றது...
கொப்பில் வாழும் குரங்குகளே! கொம்பு கொண்டு வாருங்கள்!
மறுநாள் காலை...
அட! இத்தனை விறகு எப்படி வந்தது?
எப்படி வந்தா என்ன, பரண்மேல் அடுக்கு! உம்!
இளவேனில் பருவம்...
அடியே! மாணிக்கம்! தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சு! களை பிடுங்கு...
அருமை பொம்மையே! அம்மா தந்த பொம்மையே! நான் ரொம்பக் களைத்திருக்கிறேன்...
மரநிழலில் இளைப்பாறு...



பொம்மை காட்டுக்குப் போய்...
காட்டில் வாழும் முயல்களே! தோட்டம் திருத்த வாருங்கள்!
முயல் குட்டிகள் தோட்டத்தைச் சுத்தம் செய்தன.
என் அருமைப் பொம்மையே! எனக்கு எத்தனை உதவி செய்கிறாய்?
என்னோடு காட்டுக்கு வா!
காட்டில்...
இந்தச் செடியின் இலைகளைப் பறித்துக் கஷாயம் போட்டுச் சாப்பிடு.



பொம்னும் காட்டிய மூலிகை மாணிக்கவல்லிக்கு உடலுறுதியைக் கொடுத்தது. மேலும்...
நீ முன்னைவிட இன்னும் அழகா இருக்கே!
அது சரி, இந்தக் காட்டில் சூனியக்காரி இருக்காளாமே?
ஆமாம், ஒரு பொல்லாத கிழவி!
மாணிக்கவல்லி பயந்து வீட்டுக்கு ஓடி வர...
என்ன அவசரம்?
சமையலுக்கு நேரமாச்சு.
தந்தை பரிவுடன்...
பாவம் மாணிக்கவல்லி! ஓயாமல் வேலை; முகம் சிரிப்பதே இல்லை; அவளுக்கு நல்ல வரன் பார்க்கணும்...
ஒரு நாள்...
நான் நாலு நாளில் திரும்பி வரேன்... மாணிக்கம்! எல்லாரையும் கவனித்துக் கொள்.
ஆகட்டும், அப்பா.


மறுநாள் மழையும் புயலும்...
மாணிக்கம்! ஜன்னல் வழியே எட்டிப்பார்க்காதே! சூனியக்காரிகள் புயலில்தான் தொட்டிகளில் பறப்பார்கள்!
காட்டில் ஒரு பொல்லாத கிழவி இருக்காளாம். அவள் மனிதர்களை விழுங்கி விடுவாளாம்!
ஐயோ!
சிற்றன்னை வந்து...
சும்மாதானே இருக்கீங்க? விளக்கு எதுக்கு?
அணைக்காதே! சூனியக்காரி வந்துடுவா!
அப்படின்னா விளக்கு எண்ணெயை வீணாக்காம இந்தக் கூடைப் பஞ்சையும் நூலாக நூற்றுவிடு!
மாணிக்கம் இரவெல்லாம் கண் விழித்து...
அப்பா! என்ன மழை! என்ன காற்று...


திடீரென்று வீசிய காற்றில் விளக்கு அணைந்தது...
வேலையை முடிக்கணுமே. இல்லாட்டா சிற்றன்னை கோபிப்பாள்....
அப்போது சிற்றன்னை...
இந்த மாதிரி திறந்த விளக்கு அணைந்துதான் போகும். பொல்லாக் கிழவி வீட்டுக்குப்போய் சிம்னி விளக்கு வாங்கிவா, அணையாது!
மாணிக்கவல்லி மந்திர பொம்மையுடன் புறப்பட்டாள்...
பொம்மையே! நீதான் எனக்குத் துணை...
காட்டில்...
பயமாயிருக்கே! பொல்லாக்கிழவி விழுங்கி விடுவாளே!
நான் இருக்கும்போது என்ன கவலை?
இவ்வளவு தூரம் நடந்தும் பொல்லாக் கிழவி வீட்டைக் காணோமே... திக்கு திசை புரியலையே...



தொடர்ச்சி பக்கம் 53-ல்

கோணமூஞ்சியூர் என்று ஓர் இராஜ்ஜியம். அதை ஆண்ட ராஜா பெயர் தடுமாறன்! ராஜாவுக்கு இனிப்பு என்றால் உயிர்! அதிலும் லட்டு என்றால் கேட்கவே வேண்டாம். தினமும் குறைந்தது பத்து லட்டாவது திங்காமல் இருக்க மாட்டார்.

ராஜாவின் பட்டப்பெயரானதடுமாற வர்மன் என்று கூறினால் யாருக்கும் தெரியாது. லட்டு ராஜா என்று கூறினால்தான் 'சட்'டென்று புரியும்!

தினமும் பத்து லட்டுக்குக் குறையாமல் தின்றால் ராஜாவின் உடம்பு என்ன ஆவது? ராஜாவுக்குச் சீக்கிரமே சர்க்கரை வியாதி வந்துவிட்டது.

அரண்மனை வைத்தியர்கள் பாடு திண்டாட்டமாகி விட்டது. ராஜாவுக்கு லட்டு தின்பதில் இருந்த ஆசையைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அவரிடம் போய் 'உங்களுக்குச்சர்க்கரை வியாதி இருக்கிறது. அதனால் லட்டு திங்காதீர்கள்' என்று சொல்லி யாராவது உயிரோடு திரும்பி வர முடியுமா? சொன்னால்தான் ராஜா கேட்பாரா?

வைத்தியர் குழம்பிப் போனார். என்ன செய்வது என்று அவருக்குத் தோன்றவில்லை. மகாராணியிடம் போய்



லட்டு ராஜா

முறையிட்டார்கள். ராணிக்கும் கவலை பிடித்துக் கொண்டது.

ராஜா லட்டு சாப்பிடுவதை முழுக்க நிறுத்த முடியாவிட்டாலும், இரண்டாகக் குறைக்க ஏதாவது வழி கிடைத்தால் போதும் என்று எல்லோரும் ஏங்கினார்கள்.

அரண்மனையில் துணிகளை வெளுத்துவரும் சலவைக்காரப் பெண் ஒருவள் இருந்தாள். அவள் பெயர் துளசி. அவள் தலைசிறந்த அறிவாளி.

மகாராணியும் அரண்மனை வைத்தியர்களும் கலங்கிப் போயிருக்கும் செய்தி துளசிக்குத் தெரிந்தது.

''இரண்டு லட்டுக்குமேல் திங்காதபடி ராஜாவை நான் மாற்றிக் காட்டறேன். ஒரு வாரம் பொறுங்கள்'' என்று அவர்களுக்குத் தைரியம் கூறினாள் துளசி.

முன்பே பேசிக் கொண்டபடி அடுத்த நாள் மகாராணி ராஜாவை அழைத்துக்

சின்ன பாய

கொண்டு ஆற்றங்கரைக்கு வந்தாள். ஆற்றங்கரையில் துளசி, துவைத்து உலர்ந்த துணிகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தாள். அருகே அவளுடைய இரண்டு கழுதைகள்.

திடீரென்று துளசி இரண்டு கழுதைகளையும் கம்பால் நாலு சாற்று சாற்றினாள். பாவம் அந்த வாயில்லா ஜீவன்கள், பரிதாபமாகக் கத்தின.

ராஜாவும் ராணியும் இதைப் பார்த்துக்கொண்டே அங்கு வந்து விட்டனர். ராஜா மனம் துடித்துப் போனார்.

''ஏம்மா இந்த வாயில்லா உயிர்களை இப்படி அடிக்கிறே துளசி?'' என்று கேட்டார் அரசர்.

ஏதோ பதில் கூற வந்த துளசி சட்டென்று நிறுத்திக் கொண்டு விட்டதை ராஜா கவனிக்கத் தவறவில்லை.

''சொல்லும்மா துளசி? என்னம்மா சொல்ல வந்து நிறுத்திட்டியே? எதுக்காக இந்தக் கழுதைகளை இப்படி விளாசித் தள்ளினாய்! இவைகளை உன் சொந்தக் குழந்தைகள் மாதிரி எண்ணுகிறாய் என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட நீ, இப்படி இவைகளை அடித்தது அதிசயமாக இருக்கு. சொல்லும்மா? என்ன காரணம்?'' என்று கேட்டார் ராஜா.

''மகாராஜா, கழுதைங்க பேசிக்கிறது எனக்குத் தெரியும். அதுனாலதான் இதுங்களை அடிச்சேன்'' என்றாள் துளசி.

''இதுங்க என்ன பேசின?''

துளசி தயங்கினாள்.

''இதோபார். என் பொறுமை போயிடுத்து. இதுங்க என்ன பேசிக்கிட்டது என்பதை நீ சொல்லலேன்னா, உன் தலை காணாமல் போயிடும்'' என்று மிரட்டினார் ராஜா.

துளசி தயங்கியபடி சொன்னாள்.

''அரண்மனையில் ஏராளமாத் துணிங்க விழுதுன்னு ஒரு கழுதை அலுத்துக்கிட்டது. இப்பவே இப்படி அலுத்துக்கிறியே... இந்த ராஜாவுக்குச் சர்க்கரை வியாதி. அதுனால கூடிய விரைவில் செத்துப் போய், புது ராஜாவுக்கு முடிசூட்டு விழா நடக்கப் போகிறதே? அப்போ இந்த மாதிரி பல மடங்கு துணி விழுமே? என்ன செய்வேன்னு இரண்டாவது கழுதை கேட்டது. நல்லவரான நீங்க செத்துப் போகப் போவதாச் சொன்னா எனக்கு ஆத்திரம் வராதா? அதுதான் அடிச்சேன்'' என்றாள் துளசி.



பெருமை மிக்க புறாக்கள்!

● புறாக்கள் செய்திகளை அனுப்பப் பழக்கப்பட்டதாகப் படித்திருக்கின்றோம்! புறாக்களுக்கு, மனிதர்களை விடக் கண் பார்வை கூர்மையானது. — அமெரிக்காவில் மருந்து கேப்சூல்கள் மேலே பூச்சு சரியில்லாதவைகளைக் கண்டுபிடிக்கப் புறாக்களை உபயோகப் படுத்துகின்றனராம்! ரஷ்யாவில் இயந்திர உறுப்புகளில் கண்களுக்குத் தெரியாமல் ஏற்படும் விரிசல்களைப் புறாக்களைக் கொண்டு கண்டறிகின்றனராம்! ஒரு நாளைக்கு 16 மணிக்கு மேல் இவ்வேலைகளைப் புறாக்கள் செய்கின்றன. நான்கே நாட்களில் ஒரு புறாவை இந்த வேலைகள் செய்யப் பழக்க முடியுமாம்!

— மொரப்பூர் அ. நல்சாத்.

மணிபோர்

● பிரிட்டிஷ் ராயல் நேவியைச் சேர்ந்த அட்மிரல் சர். ஹாரி ராவ்சன் தலைமையிலான படை சான்சிபார் என்ற நாட்டை 38 நிமிடங்களில் தோற்கடித்தது. போர் 1896 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் தேதி காலை 9.02 மணி முதல் 9.40 மணி வரை நடைபெற்றது!

— ஆர். மூர்த்தி, கல்லிடைக்குறிச்சி.



ராஜா மௌனமாக யோசித்தார். தான் இறக்கப் போகிறோமோ என்று அவருக்குப் பயம் வந்துவிட்டது.

''துளசி, வருங்காலத்தைப் பற்றி மனிதர்களால் அறிய முடியாத பல உண்மைகளை முன்னதாகவே அறியும் திறமை பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் உண்டு என்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கழுதைகளை அடிக்காதே. எனக்கு எப்படி இறப்பு ஏற்படப் போகிறது என்பதை அவைகளின் பேச்சைக் கேட்டு அறிந்து வந்து சொல்,'' என்று பணிவாகக் கேட்டுக் கொண்டார் ராஜா.

துளசி பணிவாகத் தலையாட்டினாள். இரண்டு நாட்கள் ஓடின. துளசியின் வரவை ராஜா ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், அவள் வரவே இல்லை. பொறுமை இழந்த ராஜா அவளையே தேடிக் கொண்டு வந்து விட்டார்.

''எனக்கு எமன் எப்படி வரப் போகிறான் என்பதை அறிய முடிந்ததா? உன் கழுதைகள் இதுபற்றி ஏதாவது பேசிக் கொண்டதா?'' என்று ஆவலோடு கேட்டார் ராஜா.

''இன்னிக்குத்தான் பேசித்துங்க. உங்களுக்கு எமன் நீங்கள் திங்கப் போகும் இரண்டாவது லட்டில்தான் இருக்கிறானாம். புரையேறி உடனே செத்துப் போவீங்களாம்'' என்றாள் துளசி.

ராஜா கவலையில் ஆழ்ந்தார்.

''மகாராஜா, ஏன் கவலைப்படறீங்க? விதியை மதியால் வெல்லலாம்,'' என்றாள் துளசி.

ராஜா அவளை அதிசயத்தோடு பார்த்தார்.

''இரண்டாவது லட்டில்தானே யமன் இருப்பான்? தினமும் ஒரு லட்டோடு நிறுத்திக் கொள்ளுங்கள். எமன் ஏமாந்து போவான்.''

ராஜாவின் முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது.


துளசிக்கு ராஜா பரிசளித்தார்! ராணி பரிசளித்தாள்! வைத்தியர் தனியாகப் பரிசளித்தார்.

புதையல் வேட்டை

பொழுதுபோக்கு விளையாட்டு

கோகுலம்





இங்கே தொடங்கு
முதலில் தாயம்
பாய்மரப் படகு
சுழல் காற்று
உப்புக் கடல்
பரிசல் கிடைத்தது
துடுப்புக் கிடைத்தது
பாதாள ஓடை
குதிரை கிடைத்தது
சித்தர் அருள்



இந்தியாவின் டிஸ்னி லேண்ட்

''வால்ட் டிஸ்னி''யையும் அவர் அமைத்திருக்கும் ''டிஸ்னி லேன்டையும் அறியாதவர்கள் மிகவும் குறைவு. அந்த அளவிற்கு உலக மக்களிடையே, குறிப்பாகச் சிறுவர்களின் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றிருக்கிறது அது. நம் நாட்டிலும் ஒரு டிஸ்னி லேன்டை உருவாக்குவதற்காக ஹரியானா முன்னாள் முதல்வர் (சௌதாலா) முயற்சித்தார். ஆனால் பல காரணங்களால் அம் முயற்சி கைவிடப்பட்டது. அதன் பின்பு பம்பாயைச் சேர்ந்த மிகப் பெரிய தொழிலதிபர் சுபாஷ் சந்திர கோயல் என்பவர் நம் இந்தியச் சிறுவர்கள் அனைவரின் கனவையும் நனவாக்கும் முயற்சியாகக் கிட்டத்தட்ட 25 கோடி ரூபாய் செலவில் பிரம்மாண்டமான ''சிறுவர் உலகம்'' ஒன்றை அமைத்து சாதனை புரிந்துள்ளார்.

பம்பாயின் மேற்குப் பகுதியான போரிவலியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் 250 ஏக்கரா கொண்ட விசாலமான நிலப்பரப்பில் இது அமைக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் வெறுமனே விளையாடும் இடமாக மட்டுமல்லாது அவர்களை அறிவியல் மற்றும் அனைத்துத் துறைகளிலும் 21 ஆம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்லும் பாலமாக இது அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. ஜப்பான், ஜெர்மனி மற்றும் இத்தாலி போன்ற வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விளையாட்டு இயந்திரங்கள் இங்கு ஏராளம். இதில் 50 சதவீதம் அட்வென்சர் கேம்ஸ் எனப்படும் சாதனை செய்யத்தூண்டும் அரங்கங்களாகவும், 50 சதவீதம் ரைடிங் எனப்படும் சவாரி முறையிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் மேக்னடிக் லாக்' எனப்படும் காந்த பாதுகாப்பு வளையத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளதால் விபத்து என்ற பேச்சுக்கே இடமில்லை. எனினும் எதிர்பாராமல் நடக்கும் அசம்பாவிதத்தை மனதில் கொண்டு டாக்டர், நர்ஸ் மற்றும் ஆம்புலன்ஸ் போன்ற மருத்துவ வசதிகளையும் கூட தயார் நிலையில் இங்கு வைத்துள்ளார்கள்.

ஒவ்வொரு அரங்கினுள்ளும் புகுந்து வருவதே மறக்க முடியாத திரில்லிங்கான அனுபவமாகும். இதனை வார்த்தைகளால் முழுவதும் வர்ணிக்க முடியாது. அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும். எதற்கும் உதாரணத்திற்கு ஒரு சில இதோ...

மிர்ரர் மேட்ச் எனும் கண்ணாடி விளையாட்டரங்கில் நுழைந்தீர்களானால் நாலாபுறமும் கண்ணாடிகளால் சூழப்பட்ட அறைகளாகவே இருக்கும். கதவு எங்குள்ளது என்பதைக் கண்டுபிடித்துப் பல அறைகளைத் தாண்டி வருவது அரிய சாதனைதான்!

'ஹெட்கோ மேட்ச்' எனும் அரங்கில் நுழைந்து அங்கு உள்ள புதிர்களை விடுவிப்பதன் மூலமாக அடுத்த

எஸ். எச். அப்துல் ஜாப


அறைக்கு வழி கண்டுபிடித்து அப்படியே படிப்படியாக வெளியேறு வது பெரும் சாதனைதான்!

டெரர் ஹோட்டலுக்குள் ஏதேனும் சாப்பிடும் நோக்கத்துடன் உள்ளே நுழைந்து அமர்ந்தால் ஏமாந்துதான் போவீர்கள்! முதலில் அழகாகத் தோன்றும் அனைத்தும், திடீரென எலும்புக் கூடுகளாகவும் பயங்கரமான பிராணிகளாகவும் மாறி உங்களைப் பயமுறுத்தி அயர வைக்கும்!

இது தவிர தங்கச் சுரங்கத்திலிருந்து தங்கம் எப்படி வெட்டியெடுக்கப்படு கிறது, பின்னர் அது எவ்வாறு பிரிக்கப் படுகிறது என்பதைத் தத்ரூபமாக அப்படியே செயற்கை முறையில் வடித்துள்ளார்கள்.

இங்கு பல்வேறு நாடுகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட 30 ஆயிரம் வகை தாவரங்களை சிறுவர்கள் கண்டு மகிழலாம். இது தாவரவியல் மாண வர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

தற்போது இதற்காக 25 கோடி செலவிடப்பட்டிருந்தாலும் மேலும் பல கோடி ரூபாய்கள் செலவளித்து இதனை விரிவாக்கும் பணிகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டுதான் உள்ளன. வாய்ப்புக் கிடைத்தால் பம்பாய் செல்பவர்கள் மறக்காமல் இங்கு சென்று வாருங்களேன்.



அழகான கைகள்

சங்கரும் கணேஷும் அண்ணன் தம்பிகள். அவர்களுடைய குட்டித் தங்கைதான் சரளா. மூவரும் முறையே ஐந்தாம் வகுப்பு, நான்காம் வகுப்பு, மூன்றாம் வகுப்பில் படித்து வந்தனர்.

ஓர் நாள் விடுமுறை தினம். சங்கரும், கணேஷும் வீட்டு வாசலில் விளை யாடிக் கொண்டு இருந்தார்கள்.

சங்கர் கணேஷிடம், "இதோ பார் என் கைகளை, எவ்வளவு அழகாக உள் ளன? உன் கைகள் எப்படி மெலிந்து குச்சி போல் உள்ளன? என்னால் வலிமையோடு சண்டையிட முடியும். ஆனால், உன் குச்சிக் கைகள் ஒன்றுக்கும் உதவாது. என் கைகளே அழகான கைகள்" என்றான்.

சங்கர், குழாயடிக்குச் சென்று சோப் புப் போட்டுச் சுத்தமாகப் பளிச்சென்று கைகளைக் கழுவித் துடைத்துக் கொண்டு வந்தான். "இதோ இப்பப் பார், என்னுடைய கைகள் தான் மிக மிக அழகான கைகள்" என்றான்.

கணேஷ் விடவில்லை. "என் கை கள்தான் அழகு" என்றான். சங்கர் என் கைகள்தான் அழகு என்று முரண்டு பிடித்தான். இருவரும் தொடர்ந்து சண்டை போட்டுக் கொண்டு இருந்த னர்.

அந்தச் சமயத்தில் ஓர் பிச்சைக்காரன் அங்கு வந்தான். "சாப்பிடுவதற்குக்



கொஞ்சம் சாதம் கொடுங்கள். பசி காதடைக்கிறது'' என்று வேண்டிக் கொண்டு நின்றான்.

சங்கர் பிச்சைக்காரனைப் பார்த்துத் தன் கைக்ளைக் காட்டி, ''இதோ பார் என் கைகள் மிகவும் அழகாக உள்ளன அல்லவா?'' என்று கேட்டான்.

கணேஷ் தன் கைகளைக் காண்பித்துத் தன்னுடைய கைகள்தானே சங்கரின் கைகளை விட அழகாக இருக்கின்றன என்று கேட்டான்.


பிச்சைக்காரன் சொன்னான். ''எனக்கு அழகு கிழகு எல்லாம் இப்போ ஒன்றும் தெரியாது. எனக்குப் பசி காதடைக்கிறது. முதலில் சிறிது சாதம் கொடுங்கள்'' என்று கேட்டான்.

இதற்குள் பிச்சைக்காரனின் நிலையை உணர்ந்து கொண்ட சிறுமி சரளா உள்ளே சென்று பிச்சைக்காரனுக்குச் சாதம் கொண்டு வந்து போட்டாள்.

அதை வாங்கிக் கொண்டு பசியாறிய பிச்சைக்காரன் சொன்னான். ''உங்கள் இருவருடைய கைகளும் அழகானது அல்ல. பசி என்ற சொல் காதில் விழுந்ததும் அன்னம் அளித்த இந்தச் சிறிய பெண்ணின் கைகள்தாம் அழகு'' என்று சொல்லித் தன் வழியே சென்றான்.

வி. ஆர். ஜெயஸ்ரீ, கிருஷ்ணகிரி.

சுத்தமான புகை வண்டிகள்!



புகை வண்டிகள் நகர்ப்புறங்களைக் கடக்கும் போதும், நிலையங்களில் நிற்கும் போதும், பாலங்கள் மேல் ஆறுகளைக் கடக்கும் போதும் அவ்வண்டியிலுள்ள அனைத்துக் கழிவறைகளும் மூடப்படும். இதற்கெனத் தனியான பணியாளர்களும் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்

எங்கே...?

சீனாவில்!

— கோவி. மதிவேகவான், தளத்துப் பாளையம்.


திரும்பிப் பார்க்காமல் போகிறானே, ஹ்ம்...
மாணிக்கம் மேலும் நடக்க...
ஐயோ! என்ன பயங்கரம்!
இருட்டிய பிறகுதான் பொல்லாக் கிழவி வருவாள், காத்திருப்போம்...
நேரம் செல்ல... மறுபடி ஒரு குதிரை வீரன்...
அட! இப்போ கறுப்பு வீரன்!
கறுப்பு வீரனைத் தொடர்ந்து இருள் கவிந்து வருகிறதே!


இருள்பரவ...
ஐயோ! இவையா சூனியக் காரியின் சிம்னி விளக்குகள்!
பயப்படாதே, நானிருக்கேன்!
அதோ! பொல்லாக் கிழவி வருகிறாள்.
பூமியே அதிர்கிறதே!
சூனியக்காரி தன் வீட்டின் தோட்டத்துக்குள் நுழைந்தபோது
மனித வாடை வீசுகிறதே!
பயப்படாமல் பேசு!
பாட்டியம்மா, காற்று வீசினாலும் அணையாத விளக்கு ஒன்று வேண்டும்; தருவாயா?
ஹ ஹஹா! நீ எனக்காகச் சில நாள் வேலை செய்தால் தருவேன்!



செய்யாவிட்டால்!
விழுங்கி விடுவேன்!
கிழவியுடன் மாணிக்கவல்லி தோட்டத்தைக் கடந்து வீடு நோக்கிச் செல்ல...
ஐயோ! முள்மரம் முறிந்து விழுகிறது!
ஹி.. ஹி.. முறியலை, வளைந்து கொடுத்து உன்னைச் சிறைப் படுத்துகிறது! மந்திரம் போடறேன்....
முள் மரம் முன்போல் நிமிர்ந்தது...
அடடா! முள்ளில் சிக்கித் தாவணி கிழிஞ்சு போச்சே!
கன்னத்தில் வேறு கீறல்...
முள் மரத்திடம் நீ தப்பினாலும் இந்த நாயிடமிருந்து தப்ப முடியாது! ஜாக்கிரதை!



சூனியக்காரியின் வேலைக்காரி கதவைத் திறக்க...
வாங்கம்மா!
எங்கே சாப்பாடு!
தயாரா இருக்கு...
ஹி..ஹி... ரொம்பப்பசி! உன் சமையல் ரொம்ப ருசி!
சூனியக்காரி எல்லாவற்றை-யும் சாப்பிட்டுத் தீர்த்தாள்...
ஏய்! இந்தாங்க... ..ஆளுக்கொரு ரொட்டித் துண்டு...
மாணிக்கம்! விடிவதற்குள் இந்த மூட்டைகளில் கலந்திருக்கும் கடுகையும் வெந்தயத்தையும் தனித்தனியா பிரிச்சு, மூட்டை கட்டி வைக்கணும்! இல்லாட்டா உன்னை விழுங்கி விடுவேன்!
கிழவி குறட்டை விட்டுத் தூங்க...
ராஜகுமாரி மாதிரி அழகா இருக்கே, இவளிடம் வந்து சிக்கினாயே...
நீயும் தான் பாவம், ஒரே ஒரு ரொட்டித்துண்டு உண்டு அடிமையா...


பாவம், கருகையும் வெந்தயத்தையும் எப்படித்தான் பிரிக்கப் போறியோ!
கவலைப்படாதே, கொஞ்சம் பால் கொடு!
மாணிக்கவல்லி பொம்மைக்குப் பால் தந்து, உதவி கோர...
மரத்தில் வாழும் பறவைகளே, மங்கைக்கு உதவ வாருங்கள்!
பறவைகள் பறந்து வந்தன...
அட! எத்தனை அழகா கருகையும் வெந்தயத்தையும் பிரிக்கின்றன!
வேகமாகவும் கூட!
காலையில்... பொல்லாக் கிழவி!...
என்ன? ஆச்சா?
ஆச்சு! மூட்டைகளைக் கட்ட வேண்டியதுதான் பாக்கி!
அன்றிரவு...
ஏய்! பொண்ணு! இந்த மூட்டைகளில் அரிசியும் பருப்பும் கலந்திருக்கு. காலைக்குள் பிரித்து வை! இல்லாட்டா முழுங்கிடுவேன்!


மறுபடி பொம்மை உதவ...
வளையில் வாழும் எலிகளே, விரைந்தெழுந்து வாருங்கள்!
எலிகள் அரிசியையும் பருப்பையும் பிரித்துவிட, காலையில் கிழவி...
எப்படித்தான் சாதிக்கிறியோ!
கிழவிக்கு ஆச்சரியத்துடன் ஆத்திரமும் எல்லை மீறியது...
அடுப்பை மூட்டிக் கொப்பரையில் தண்ணீர் கொதிக்கவிடு! மாணிக்கத்தை அதில் போடு! ஹி... ஹி...
கிழவி அப்பால் போனதும்...
ஐயோ! இந்த ஆபத்திலிருந்து எப்படித் தப்புவாய்? நான் கட்டளையை நிறைவேற்றாவிட்டால் கிழவி என்னை விழுங்கி விடுவாளே!
கவலைப்படாதே! இதுவரை உதவிய மந்திரப் பொம்மை, இப்போதும் உதவும்..... சிங்காரப் பொம்மையே, என்னைக் காப்பாற்று!


பொம்மை, யானைகளை அழைத்தது...
நல்லாருக்கு உதவும் யானைகளே! பொல்லாக் கிழவியைப் பாருங்கள்!
யானைகள் பொல்லாக் கிழவியின் வீட்டை அழித்தன...
யானைகள் முன் என் சூனியம் செல்லாது. நான் வேறு நாட்டுக்குப் பறந்து போகிறேன்! ஹோ...ஹோ...
மாணிக்கவல்லி! ஒரே ஒரு அணையா விளக்கை எடுத்துக் கொள்! வீடு திரும்பலாம்!
கானகம் கடந்து, வீடு திரும்பும்போது மீண்டும் சிவப்பு வீரன்...
கருப்பு, சிவப்பு, வெள்ளைக் குதிரைகளில் பாய்ந்து செல்வது யார்? உனக்குத் தெரியுமா?
ஓ! வெள்ளை வீரன் அதிகாலை; சிவப்பு வீரன் நண்பகல்; கருப்பு வீரன் இரவு!
இருள் கவியும் நேரம், மாணிக்கவல்லியின் வீட்டை அடைந்தனர்...
இந்தாங்க, நீங்கள் கேட்ட சிம்னி விளக்கு!


மண்டை ஓட்டின் கண்களிலிருந்து ஒளி பரவ, சிற்றன்னையும் அவள் குழந்தைகளும்...
ஐயோ! சூனியக்காரி!
பயமாயிருக்கு!
ஓடு! ஓடு!
ஓடினவங்க திரும்ப மாட்டாங்க; அவங்களால இனி உனக்குத் துன்பம் இல்லை. இந்த விளக்கைப் புதைத்து விடுவோம்!
புதைத்த இடத்தில் மாணிக்கம் ரோஜாச் செடி நட்டாள்...
சூனியக்காரி என்னைப் பிடித்துச் சிறை வைத்திருந்தாள். நான் இந்த நாட்டு மகாராணி-யாக்கும்!
அட, அப்படியா!
இருவரும் அரண்மனையை அடைய, இளவரசன்...
அம்மா! உன்னைத் தேடாத இடமில்லை...
நடந்ததையெல்லாம் பிறகு சொல்கிறேன். என்னைக் காப்பாற்றிய இவளை ஏற்றுக்கொள்!
நானா காப்பாற்றினேன்? என் அம்மா கொடுத்த இந்த மந்திரப் பொம்மையல்லவா நம்மைக் காப்பாற்றியது!
மாணிக்கவல்லியும் சூரியகுமாரனும் சந்தோஷமாய் அரசாண்டனர்.
(ஒரு ருஷ்ய நாடோடிக் கதையைத் தழுவியது.)


அந்தாளு எதை செஞ்சாலும் வித்தியாசமா செய்வார்.
எப்பிடிங்க?
விசிறியை அப்படியே வச்சுகிட்டு தலையை மட்டும் ஆட்டுவார்
இரா. ஜெகதீஷ்
ராஜு... வர வர எனக்கு ஞாபக மறதி அதிகமாயிட்டே வருது...
உண்மை தான்... நான் ராஜு இல்லே... ராமு...
கே. எஸ். குமரன்
சிரிப்...
டிரைவர் என்னப்பா பண்றே?
டயர் மாத்துறேன் சார்
நான் இருக்கப் பவே டயரை நீ மாத்தறியே... நான் இல்லாதப்ப எதையெல்லாம் மாத்துவியோ?
சு. ரமேஷ்
அவங்க உட்காரவே மாட்டாங்க.
ஏன்?
அவங்க பேரு அமராவதி யாச்சே.
பூ. கணேஷ்
அந்த ஆளு என்னாங்க சின்னப்பிள்ளை மாதிரி மூணு சக்கர வண்டி ஓட்டறாரு?
அவர் பேர் குழந்தைராஜ் ஆச்சே!
க. மனோகர்
அதோ போறாரே! அவர் பலருக்கும் வாழ்க்கைப் பயணத்தின் ஆபத்தான திருப்பங்களில் வழிகாட்டியா இருந்திருக்கார்
அப்படியா! யார் அவர்?
டிராபிக் கான்ஸ்டபிள்
???....
ஸ்ரீரத்
செல்லம்



மலைக் கோட்டை மர்மம்!

1 வண்டியை உருட்டிய வெள்ளம்

அந்த அதிகாலை நேரத்தில் புகையைக் கக்கியவாறு பேரிரைச்சலோடு புவனபுரம் இரயில் நிலையத்தில் வந்து நின்றது பாசஞ்சர் இரயில். அதிலிருந்து முதலில் கீழி றங்கிய ஆனந்தும், அஸ்வினியும் 'சில்'லென்று தங்கள் முகத்தில் மோதிய பனிக் காற்றைத் தாங்க முடியாமல் 'வெடவெட'வென்று நடுங்கி னர். அவர்களைத் தொடர்ந்து அப்பா பிரேம் நாத்தும், அம்மா கமலாவும் பெட்டி படுக்கையோடு இறங்க, இரயில் நகர்ந்தது.

வானளாவி நிற்கும் மலைகளும், குன்றுகளுமே நாற்புறமும் தென் பட்டன. எங்கு பார்த்தாலும் பச்சை வர்ணத்தை அள்ளித் தெளித்தது போல் பயிர் பச்சைகளும், மரங்களும் செழித் தோங்கிக் கிடந்தன. வெண் மேகக் கூட்டங்கள் மலை முகடுகளை வருடியவாறு நகர்ந்து கொண்டிருந்த காட்சி பார்ப்பதற்கு ரம்யமாக இருந்தது.

இரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தனர். "சந்திர கிரிக்கு இங்கேயிருந்து ரொம்ப தூரம் போகணுமா அப்பா?" என்று கேட்டு அப்பாவின் முகத்தைப் பார்த்தான் ஆனந்த்.

பிரேம்நாத் அவனைப் பார்த்துப் புன்னகைத்தவாறு "எட்டு கிலோ மீட்டர் போகணும். ஆனால், மாட்டு வண்டிப் பயணம் ரொம்ப நல்லா இருக்கும்" என்றார்.

"ஐயையோ! மாட்டு வண்டியிலா போகணும்?" என்று அண்ணனும், தங்கையும் ஒரு சேர திகைப்படைந்து கேட்க, பிரேம்நாத் பதில் சொல்வ தற்குள், "ஐயா, வண்டி வேணுங்களா?" என்று ஒரு குரல் அவர்கள் பின்னா லிருந்து கேட்டது.

அங்கே பதின்மூன்று அல்லது பதி னான்கு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். கலைந்த தலையும், கிழிந்த ஆடைகளுமாக அவன் நின்றிருந்த போதிலும் அவன் முகத்தில் ஒரு வசீகரம் இருந்தது. அந்த நடுக்கும் குளிரில், அவன் உடம்பை ஒடுக்கியவாறு அரை குறை ஆடைகளோடு நின்ற காட்சி இரக்கத்தைத் தோற்றுவிப்பதாக இருந் தது.

பிரேம்நாத் அவனிடம், "ஏன் தம்பி, சந்திரகிரிக்குப் போகணும் வரியா?" என்று கேட்டார்.

"சந்திரகிரிக்கா!" என்று வியப்புடன் வாயைப் பிளந்த அச்சிறுவன், "எனக் குக் கூட சந்திரகிரிதாங்க சொந்த ஊரு. வாங்க. போகலாம்" என்று உற்சா கத்துடன் சொல்லி மறுபேச்சுக்குக் காத்திராமல் அவர்கள் பெட்டி படுக்கைகளை எடுத்துப் போய் வண்டியில் வைத்தான்.

அந்த மலைப் பாதையில் இப்படியும் அப்படியும் குலுங்கியவாறு வண்டி செல்ல, ஆனந்த் தலைகுனிந்தவாறு சிந்தனையுடன் அமர்ந்திருந்தான். அஸ்வினியின் கண்கள் கலங்கிச் சிவந்தி ருந்தன. ஆட்டோவும், டாக்சியும் பரந்த விளையாட்டு மைதானங்களும் பள்ளிக் கூடமும், பொழுது போக்குகளும் நிறைந்த நகர வாழ்க்கையை விட்டு விட்டு இப்படியொரு மலைக் கிரா மத்துக்கு வசிக்க வருகிற அந்தக் குழந்தைகளின் மனநிலையை பிரேம்

ஜி.ர. வசந்தன்

நாத்தால் புரிந்து கொள்ள முடிந்தது.

வண்டிக்காரச் சிறுவன் திரும்பி பிரேம்நாத்தைப் பார்த்தான். ''நீங்க தானே வெள்ளியாற்றுக்குக் குறுக்கே அணை கட்ட வந்திருக்கும் என்ஜினியர் ஐயா?'' என்று கேட்டான். அவன் குரலில் அதிகப் பரபரப்பு இருந்தது.

'ஆமாம் தம்பி' என்றார் பிரேம்நாத்.

ஆனந்த் ஆற்றாமையோடு, "ஏம்பா, நாம போகிற ஊர்ல படிக்கிறதுக்குப் பள்ளிக் கூடமாவது இருக்கா?'' என்று கேட்டான்.

அவன் கேள்விக்கு அவர் பதில் சொல்லுமுன் வண்டிக்காரச் சிறுவன் முந்திக் கொண்டு ''அந்த ஊர்ல பள்ளிக்கூடமெல்லாம் இல்ல. இங்கே புவனபுரத்துக்குத்தான் வரணும்'' என்றான்.

''இவ்வளவு தூரம் வந்தா படிக்கணும்?'' என்று கேட்ட அம்மா கமலாவின் குரலில் கலவரம் பெரிதும் தொனித்தது.

''ஆமாம்மா. இங்கதான் வந்தாகணும், புவனபுரத்திலதான் பெரிய பள்ளிக்கூடம் இருக்கு... சந்திரகிரியில மோட்டார் வசதி கூடக் கிடையாது. மாட்டு வண்டிதான், நான் கூட முன்னால பள்ளிக்கூடத்துக்கு வண்டி ஓட்டிக்கிட்டுத்தான் இருந்தேன்... இப்ப ஓட்டறதில்ல'' என்றான் சிறுவன்.

''ஏன் ஓட்டறதில்லே?'' என்று கேட்டான் ஆனந்த்.

சுள்ளென்று கையிலிருந்த சாட்டைக் கம்பால் மாட்டை அடித்து உசுப்பி விட்டுத் திரும்பிய சிறுவன், ''சந்திரகிரியில இருந்து ரங்கனும், வேம்புவுந்தான் பள்ளிக்கூடத்துல படிக்கிறாங்க. இப்ப நாகராஜன் வண்டியில அவங்க போறாங்க... வண்டி ஓட்டறதுல என்னை விட அவன் கெட்டிக்காரன்னு பேரு, அதான்'' என்று சிரித்தான்.

சிந்தனையுடன் அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த பிரேம்நாத், ''ஏன் தம்பி, இவங்க ரெண்டு பேரையும் பள்ளிக்கூடத்துக்கு அழைச்சுட்டுப் போக வண்டி வேணும்... அந்தப் பொறுப்பை நீ ஏத்துக்க முடியுமா?'' என்று கேட்டார்.




செல்லம்

அந்தச் சிறுவன் அதற்கு உடனே சம்மதம் தெரிவித்தான். ''நானே அழைச்சுட்டுப் போறேங்க... வேற யாரையும் நீங்க ஏற்பாடு பண்ண வேண்டாம்; அதோட வேற என்ன வேலை இருந்தாலும் சொல்லுங்க. செய்வேன்'' என்ற அவன் குரலில் மிகுந்த மகிழ்ச்சி இருந்தது.

சிறுவனது அடக்கமும், பணிவும் அவர்களை வெகுவாகக் கவர்ந்தது. ''ரொம்ப நல்ல பிள்ளையா இருக்கான் இல்லே?'' என்று கணவரிடம் கேட்ட கமலா, அவனைப் பார்த்து, ''உன் பேரு என்ன தம்பி?'' என்று வினவினாள்.

''மணிமாறன்'' என்றான் அவன் சற்றுக் கூச்சத்துடன். வண்டி சந்திர கிரியை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஆனந்தும், அஸ்வினியும் புவனபுரம் பள்ளியில் சேர்ந்து ஒரு வாரத்திற்கு மேல் ஆகி விட்டது. இப்போது அவர்களுக்கிருந்த ஒரே வெளியுலகத் தோழன் அந்த வண்டிக்காரச் சிறுவன் மணிமாறன்தான். காலையிலும், மாலையிலும் அவன் வண்டி ஓட்டியவாறு சொல்லும் கதைகள்தான் அவர்களுடைய பொழுதுபோக்கு. பெரும்பாலும் மணிமாறனின் கதைகள் எல்லாம், கிராமிய நம்பிக்கைகளின் அடிப்படையில் எழுந்த பேய், பிசாசு கதைகளும், மாய தந்திரக் கதைகளுமாகவே இருக்கும். கதைகள்எல்லாமே கொடியவர்கள் தோல்வியடைந்து சோதனைக்குள்ளான நல்லவர்கள் வெற்றியடைவதாகவே முடியும். கதாபாத்திரங்களோடு மனம் ஒன்றி ரசனையுடன் கதை சொல்லும் மணிமாறன் சில நாட்களுக்குள் இருவர் மனதிலும் இடம் பிடித்துக் கொண்டான்.

அன்று பள்ளிக்கூடம் முடிந்து ஆனந்தும், அஸ்வினியும் வெளியே வந்த போது ஆயத்தமாக வண்டியோடு நின்று கொண்டிருந்த மணிமாறன், அவர்களைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கையை அசைத்தான். வானத்தில் கருமேகங்கள் திரண்டு குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது.

''மழை வர மாதிரி இருக்கு. சீக்கிரம் போயிடலாம்'' என்றவன், சந்திரகிரியிலிருந்து பள்ளிச் சிறுவர்களை அழைத்து வரும் மற்றொரு வண்டி இன்னும் புறப்படாமலேயே நிற்பதைப் பார்த்து, வண்டிக்குள் அமர்ந்திருந்த சிறுவர்களிடம் ''இன்னும் நாகராஜன் வரலியா?'' என்று கேட்டான்.

''இன்னும் காணோம். எப்பவுமே அவன் இப்படித்தான். எங்கேயாவது போய் வீண் பொழுது போக்கிட்டு நினைத்த நேரத்துக்கு வருவான்... மழை வேற வருது'' என்று அங்கலாய்த்தான் அந்த வண்டியில் இருந்த சிறுவர்களில் ஒருவனான ரங்கன்.

மழைத் தூறல் விழ ஆரம்பித்தது. மணிமாறன் மாட்டை வேகமாக விரட்டி ஓட்டினான். 'கடகட'வென்று தார்ச் சாலையில் பாய்ந்தோடிய வண்டி சற்றைக்கெல்லாம் மலைப் பாதையில் திரும்பி விரைந்தது.


மலைப் பாதையில் வண்டி திரும்பி விட்டாலே மணிமாறனின் கதையும் ஆரம்பமாகி விடும். முன்பு அந்த மலையில் வாழ்ந்ததாகக் கூறப்படும், ஒரு மந்திரவாதியின் கதையை மிகவும் சுவையாய்ச் சொல்லிக் கொண்டு வந்தான் அவன். அண்ணனும், தங்கையும் கண்கள் அகல விரிய அவனது கதையைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

''அதோ பாருங்க... அந்த மலை மேல பாழடைந்த கோட்டை இருக்கே. அதுல ஒரு முனீஸ்வரன் கோயில் இருக்கு. அங்கதான் அந்த மந்திரவாதி ஒரு குகைக்குள்ள இருந்தானாம்'' என்று

''உங்க பையன்தான் எப்பவும் ஸ்கூலுக்கே 'ஃபர்ஸ்ட்'னு சொன்னீங்களே. எல்லாத்துலயும் 100க்கு 100 வாங்கிடுவானா?''

''ஹி... ஹி... எல்லாருக்கும் முன்னாடி. காலையில சீக்கிரம் ஸ்கூலுக்குப் போயிடுவான்னு சொன்னதை நீங்க தப்பாப் புரிஞ்சுக்கிட்டீங்க!''

— சீர்காழி வி. ரேவதி.





''எதுக்குடா காகிதத்தைச் சாப்பிடறே?''

''இந்தக் கதை சுவையா இருக்குன்னு எல்லாருமே சொல்றாங்க... அது நிஜந்தானான்னு டெஸ்ட் பண்ணிப் பார்க்கிறேன்!''

— சீர்காழி வி. ரேவதி.

தொலைவில் தெரிந்த மலையைச் சுட்டிக் காட்டினான் மணிமாறன்.

ஆனந்தும், அஸ்வினியும் தலைகளை வண்டிக்கு வெளியே நீட்டி அவன் சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தனர். தொலைவில் மலை மீது பாழடைந்து சிதிலமான ஒரு கோட்டையும் காவி வர்ணமடித்த கோயில் ஒன்றும் மழைச் சாரலுக்கிடையே மங்கலாகத் தெரிந்தன.

''அந்த மந்திரவாதி நிறையப் பேய்களைத் தன் மந்திர சக்திக்குக் கட்டுப்படுத்தி வச்சிருந்தானாம்.... இப்பவும் அந்தப் பேய்கள் மலைக் கோட்டைக்கு அந்தப் பக்கம் இருக்கிறதா சொல்றாங்க... மலை மேல் இப்ப யாரும் போறதில்ல, போனவர்களும் திரும்பி வந்ததில்ல'' என்றான் மணிமாறன்.

அஸ்வினிக்கு உடல் நடுங்கியது. அண்ணனின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

''அந்த மலைக்கு யாரும் போறதில்லேன்னா, அந்தக் கோயில்ல புதுசா வர்ணமடிச்சிருக்கே! அது எப்படி?'' என்று கேட்டான் ஆனந்த்.

அதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் ஒரு வினாடி விழித்த மணிமாறன், ''பூசை செய்யற பூசாரி போயாகணுமே? அதோட, நம்ம ஊர்ல பாஞ்சான்னு ஒருத்தர் இருக்கார்... அவர்தான் ஊருக்குத்தலைவர். அவரும், அவரோட ஆட்களும் கூடப் போவாங்க. முனீஸ்வரனுக்குப் பிரமாதமாப் பூசையெல்லாம் செய்வாங்க. அவங்க ஆட்கள்தான் கோவிலுக்கு வர்ணம் பூசி இருப்பாங்க,'' என்று சமாளித்தான்.

மழை வலுக்க ஆரம்பித்தது. மணிமாறன் வண்டியை நிறுத்தினான். வண்டிக்குள் சாரல் அடிக்காமலிருக்க, முன்புறமும், பின்புறமும் மேலே சுருட்டிக் கட்டி வைத்திருந்த படுதாக்களைப் பிரித்து விட்ட மணிமாறன் ஒரு பெரிய பிளாஸ்டிக் பையால்தன் உடலை மறைத்துக் கொண்டு மீண்டும் வண்டியைச் செலுத்தினான். ஒருபுறம் செங்குத்தாக நெளிந்து, வளைந்து, எழுந்து நின்ற பாறைகளும், மறுபுறம் கிடுகிடுவென்று கீழிறங்கிய பள்ளத்தாக்குகளுமாகக் காட்சியளித்த பாதையின் குறுக்கே ஆங்காங்கே மலையிலிருந்து வழிந்த நீர் ஓடிக் கொண்டிருந்தது.

'ஹோ'வென்று பேரிரைச்சலுடன் மழை கொட்ட சர்வ ஜாக்கிரதையாக வண்டியை ஓட்டினான் மணிமாறன்.

வேகமாக ஓடிக் கொண்டிருந்த வண்டி, திடீரென்று பெரும் குலுக்கலுடன் நின்றதை உணர்ந்து, ஆனந்தும், அஸ்வினியும் படுதாவை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தனர்.

ஏறத்தாழ இருபதடி அகலத்திற்கு மழையின் காரணமாக மலை மேலிருந்து பாய்ந்து வந்த நீர் கடும் வேகத்தோடு பாதையைக் கடந்து பள்ளத்தாக்கில் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது.

மணிமாறன் இருவரையும் பார்த்து, ''பயப்படாதீங்க... இது மழை பெய்யறதால மலை மேல இருந்து வரும் தண்ணிதான். மழை விட்டா கொஞ்ச நேரத்துல தண்ணி வரதும் நின்னுடும், அது வரை நாம காத்திருந்துதான் போகணும்... இப்ப தாண்டறது ஆபத்து'' என்றான்.

அப்போது அவர்களுக்குப் பின்னால் 'ஜல், ஜல்'லென்று மற்றொரு மாட்டு வண்டி கன வேகமாக வருவது தெரிந்தது. அந்த வண்டியை ஓட்டிக் கொண்டு வருபவனைப் பார்த்து விட்ட மணிமாறன், ''நாகராஜா, வெள்ளம் சாலையின் குறுக்கா ஓடுது, வண்டியை நிறுத்து'' என்று சத்தமிட்டான்.

அந்த வண்டியை ஓட்டி வந்த நாக ராஜன்சட்டென்று மாட்டின்மூக்கணாங் கயிறை இழுத்து, அவர்களது வண்டி யருகே தன் வண்டியைக் கொண்டு வந்து நிறுத்தினான். பாதையின் குறுக்கே பாயும் வெள்ளத்தை உற்றுப் பார்த்தவன் மணிமாறனைப் பார்த்து, ''ஏண்டா, இந்த வெள்ளத்துக்காகவா பயந்து இங்க நின்னுக்கிட்டிருக்க..! வேகமாகப் போனா ஒரே பாய்ச்சல்ல தண்ணியைக் கடந்துட லாமே?'' என்றான் கேலிக் குரலில்.

''இது மலை மேல இருந்து பாயற தண்ணி... வேகம் பயங்கரமா இருக் கும்... சுலபமா நெனச்சுடாதே'' என்று எச்சரித்தான் மணிமாறன்.

''நீ காத்திருந்து நாளைக்கு வா, நான் போறேன்'' என்ற நாகராஜன் கயிற்றைத் தளர்த்தி மாட்டைத் தட்டி விட்டான். மறுகணம் வண்டி 'கடகட'வென்று வெள்ளத்தை நோக்கிப் பாய்ந்தோ டியது.


பாதையின் குறுக்கே பாய்ந்து கொண்டிருந்த வெள்ளம் முன்னைக்கு இப்போது அதிகரித்திருப்பதைக் கவ னித்த மணிமாறன் சட்டென்று தன் வண்டியிலிருந்து கீழே குதித்து நாக ராஜனின் வண்டியைப் பின் தொடர்ந்து ஓடினான். ஒரேஎட்டில் அந்த வண்டியை அடைந்தவன், உள்ளேயிருந்த சிறுவர் களைப் பார்த்து, '' ஏ ரங்கா, வேம்பு வெள்ளம் ரொம்ப வேகமா ஓடுது. சீக்கிரமா கீழே குதிங்க'' என்று கத்தினான்.

ஏற்கனவே என்ன செய்வதென்று தெரியாமல் மிரண்டு போயிருந்த சிறுவர்கள் பதறியடித்துக் கொண்டு ஓடுகிற வண்டியிலிருந்து 'தபதப' வென்று கீழே குதித்தனர்.

இதற்குள் பேரிரைச்சலுடன் பாய்கிற வெள்ளத்தை நெருங்கிவிட்ட நாக ராஜன், மாட்டின் வாலைத் திருகி சாட்டையால் அடித்து விரட்டினான். படுவேகத்துடன் மாடு வண்டியை இழுத்துக் கொண்டு வெள்ளத்தில் பாய்ந்துமுன்னேறியது. அவன் 'ஹையா ஹையா' என்று கத்தியவாறு மாட்டை இடமும், வலமுமாக மாறி மாறிச் சாட்டையால் விளாசினான். மாடு மிரண்டு துள்ளியது. தண்ணீரின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறியது.

கிட்டத்தட்ட வண்டிச்சக்கரத்தின் பாதி உயரத்திற்கு வெள்ளம் ஓடுவதைப் பார்த்த நாகராஜன் ஆழம் தெரியாமல் ஆபத்தில் காலை வைத்து விட்டதை உணர்ந்தான். வெள்ளம் வண்டியில் மோதி அதை அங்குலம் அங்குலமாகப் பள்ளத்தை நோக்கித் தள்ளியது. வண்டியை இழுக்க முடியாமல் மாடும் தவிக்க, அவன் சாட்டையால் ஓங்கி அதன் முதுகில் அடித்தான். மாட்டை விரட்டுவதற்காக அவன் போட்ட கூச்சல் தண்ணீரின் இரைச்சலையும் மீறி அந்த மலைப் பிரதேசத்தில் ஒலித்தது.

(வளரும்....)



'கற்பூரம் ஒரு வகை கற்பூர மரத்தி லிருந்து எடுக்கப்படுகிறது. சீனாவிலும் பார்மோஸாவிலும் இம் மரங்கள் அதிகமாக வளருகின்றன. மரத்தின் பட்டைகளையும் கிளைகளையும் சிறு சிறு துண்டுகளாக வெட்டி. இலைகளையும் சேர்த்துப் பெரிய பாத்திரங்களில் நீர் விட்டுக் கொதிக்க வைக் கிறார்கள். பாத்திரங்களின் மேல் பல கண்ணறைகள் உள்ள தட்டை வைத்து. அதன் மேல் வைக்கோல் பரப்பி மூடி விடுவார்கள். நீராவி மூலம் வரும் கற்பூரம் வைக்கோல் மேல் பூப் போலப் படிகிறது. இதை எடுத்து வில்லை போடுவார்கள். அந்த வில்லைதான் நாம் காணும் கற்பூரம்!

— எ. அனீஸ் முகமது. தொண்டி.

கேட்கட்டுமா டாக்டர்



டாக்டர் கு. கணேசன்




★ எம்.கே. சக்திவேல், சேலம்.

கோடைக்காலத்தில் வெப்பத்தின் கடுமையால் சிலர் மயக்கம் போட்டு விழுகிறார்களே, இதற்கு என்ன காரணம்?

கோடையின் கடுமை காரணமாக சிலருக்கு உடம்பின் வெப்பம் அளவுக்குமேல் அதிகரிக்கிறது. அதைத் தாங்க முடியாமல் மூளைத்தண்டுவடத் திரவத்தின் அழுத்தமும் அதிகரிப்பதால், நமது சுயநினைவைக் கவனித்துக் கொள்ளும் மூளையின் பகுதி தற்காலிகமாக செயலிழக்கிறது. இதனால் மயக்கம் வருகிறது!

★ சா. கிருஷ்ணசாமி, ஸ்ரீ ஆதி வராகநல்லூர்.

வயிறு மட்டும் பெரிதாகவும், உடல் எலும்பும் தோலுமாகவும் ஒரு குழந்தைக்கு இருக்கிறது. இது எதனால் டாக்டர்?



புரதச் சத்துக் குறைந்த குழந்தைகளுக்கு வயிறு பெரிதாகவும் உடம்பின் மற்ற பாகங்கள் குச்சி போல வளர்ச்சி குறைந்தும் காணப்படலாம். இதே மாதிரியான தோற்றம் கல்லீரல் சுருங்கும் போதும், குடலில் காச நோய் தாக்கும் போதும், சிலவகைச் சிறுநீரகக் கோளாறுகளாலும் இருக்கலாம்! காரணம் எதுவானாலும் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றால் குணம் கிடைப்பது உறுதி!

★ பா. சுபாதேவி, திண்டுக்கல்.

நாம் பயப்படும்போது வியர்த்துக் கொட்டுவதும், வாய் உலர்வதும் ஏன் டாக்டர்?



பதில் : பயமேற்படும்போது நம் இரத்தத்தில் 'அட்ரீனலின்' என்ற ஹார்மோன் அதிகமாக சுரக்கிறது. இதனால் இரத்தக் குழாய்கள் அனைத்தும் சுருங்குகின்றன. உடம்பின் வெப்பம் அதிகமாகிறது. இந்த அதிகப்படியான

வெப்பத்தை வெளியேற்ற உடல் வியர்க்கிறது. அதே சமயம் இரத்தக் குழாய்களின் சுருக்கத்தால் நாக்கில் உமிழ் நீர் சுரப்பது குறைந்து விடுவதால் வாய் உலர்கிறது.

★ ஜி. வெங்கி, குத்தாலம்.

தொழுநோய் எதனால் உண்டாகிறது டாக்டர்?



'மைக்கோ பேக்டீரியம் லெப்ரே' என்ற பாக்டீரியாக் கிருமிகள் தோலையும் அதைச் சார்ந்த நரம்புகளையும் பாதிப்பதால் தொழுநோய் வருகிறது.

★ க. கோகிலவாணி, சங்கமங்கலம்.

சில மாத்திரைகளை உணவிற்கு முன்பும், சிலவற்றை உணவிற்குப் பின்பும் சாப்பிடச் சொல்கிறார்களே, அது ஏன் டாக்டர்?

சில மாத்திரைகளை உணவிற்கு முன்பு - அதாவது வெறும் வயிற்றில் சாப்பிட்டால்தான் சீக்கிரம் கரைந்து இரத்தத்தில் சேரும்; வேறு ஏதாவது உணவுப் பொருட்கள் இரைப்பையில் இருந்தால் இவ்வகை மாத்திரைகள் கரைவதில் தாமதமேற்படும். இதனால் இவற்றை உணவிற்கு முன்பு சாப்பிடச் சொல்கிறோம். சில மாத்திரைகளை வெறும் வயிற்றில் சாப்பிட்டால் இரைப்பையில் புண் உண்டாகலாம். இதனைத் தவிர்க்க அவ்வகை மாத்திரைகளை உணவுக்குப் பின்பு சாப்பிடச் சொல்கிறோம்.

★ ஆர். சரவணக்குமார், மயிலம்பாடி.

வயிற்றில் புழுக்கள் எவ்வாறு உண்டாகின்றன? அதைத் தவிர்க்கவும், போக்கவும் வழி கூறுங்கள், ப்ளீஸ்!

குடல் புழுக்களின் முட்டைகள் அசுத்தமான மணலில், தெரு ஓரங்களில், மக்கள் மலம் கழிக்கும் பொது இடங்களில் இருக்கும். இவ்விடங்களில் குழந்தைகள் விளையாடும் போதோ, மலம் கழிக்கும் போதோ குடல் புழுக்களின் முட்டைகள் கால் பாதத்திலும் கை விரல்களிலும் ஒட்டிக் கொள்ளும். கைகளை நன்கு சுத்தம் செய்யாமல் சாப்பிட்டால், நகங்களில் ஒட்டிக் கொண்ட முட்டைகள் உணவுடன் குடலுக்குப் போய் விடும்.



அங்கு முட்டையிலிருந்து 'லார்வா' வெளிப்படும். அது பல வளர்ச்சி மாற்றங்களைக் கடந்து குடல் புழுவாக மாறும். சிலவகை குடல்புழுகளின் லார்வாக்கள் நம் பாதங்களின் தோலைத் துளைத்துக் கொண்டு உடம்புக்குள் நுழைந்து விடும் ஆற்றல் படைத்தவை. எனவே, குடற்புழுக்களைத் தவிர்க்க முதலில் கை, கால்களை சுத்தமாக வைத்துக் கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். நகங்களை வெட்டி சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். அசுத்தமான இடங்களில் விளையாடக் கூடாது. பொது இடங்களில் மலங் கழிப்பதைத் தவிர்த்து, சுத்தமான கழிப்பறைகளில் மலம் கழிக்க வேண்டும். வெளியிடங்களுக்குச் செல்லும் போது செருப்பணிந்து செல்ல வேண்டும். இம்மாதிரியான சுகாதார முறைகளால் குடலில் புழுக்கள் வளர்வதைத் தவிர்க்கலாம்! குடற்புழுக்களை ஒழிக்க ஒரே வழி - மருத்துவர் ஆலோசனையின் பேரில் குடற்புழு ஒழிப்பு மாத்திரைகளை வாங்கிச் சாப்பிட வேண்டும்!

★எம். ஆனந்தன், வந்தவாசி.

பழங்களைப் பற்றியும் அவற்றிலுள்ள சத்துக்களைப் பற்றியும் தெளிவாகக் கூறுங்களேன், டாக்டர்!

பழங்களைப் பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் கூறுவதற்கு இந்த இடம் சாத்தியமில்லை, தம்பி! விரைவிலேயே பழங்களின் பெருமைபற்றி ஒரு தனிக் கட்டுரை எழுத இருக்கிறேன். அதைப் படித்தால் தெளிவாகப் புரியும்.

படம் இங்கே
பாடல் எங்கே?
போட்டியில்
முதல் பரிசாக
ரூ 20/-
பரிசுபெறும்
பாடல்கள்.

கொண்டாட்டம்!

யானை ஊர்வலம் நடக்குது;
எங்கள் வீட்டுக் கூடத்திலே,
ஒப்பாய்த் தாத்தா யானையாம்
சின்னப் பையன் பாகனாம்!

அன்பு அண்ணன் மேளமாம்
அக்கா ஜால்ராத் தாளமாம்.
அசைந்து, தவழ்ந்து கூடத்திலே
அங்கே வாரார் யானையார்!

அழகாய்த் தம்பி குழலிசைக்க,
அருமைத் தங்கை மேளம் கொட்ட,
பூனைக்கும் நாய்க்கும் கொண்டாட்டம்.
போடுது இங்கே குதியாட்டம்.

— எம். பூங்குழலி, உதயேந்திரம்.





திண்டாட்டம்!

எங்கள் தாத்தா மங்கபதி
பட்டாள 'மேஜர்' — அவர்
எட்டு வார லீவிலேதான்
வீட்டிலே 'ஆஜர்'
வந்ததுமே எங்களுக்கு
ஒரே கொண்டாட்டம் — எங்கள்
வாண்டுத் தனத்தாலே — அவர்
பாடு திண்டாட்டம்.

யானை போலத் தாத்தா நாலு
காலில் நடக்கவே — குட்டி
சீனுப்பயல் அவர் முதுகில்
சவாரி செய்யவே
கிட்டு அங்கே பீப்பீ ஊத
யானை நடந்தது. — அப்போ
கிளர்ந்து எழுந்த மகிழ்ச்சிக் கொரு
எல்லை இல் லையே!

நானும் ஒரு தட்டெடுத்துத்
தாளம் போடவே — அண்ணா
தானும் ஒரு பாத்திரத்தில்
'மியூசிக்' தந்தானே
சும்மா அதைப் பாட்டியுமே
பார்த்து ரசிக்கவே — அப்பா
அம்மா கூடச் சேர்ந்து
அழகாய்ச் சிரிக்கவே
எங்கள் வீட்டு ஜிம்மியோட
பூனை 'சில்க்'கியும் — சேர்ந்து
எங்களோட ஆட்டத்திலே
கலந்து கொள்ளவே — தாத்தா
வந்ததுமே எங்களுக்கு
ஒரே கொண்டாட்டம் — எங்கள்
வாண்டுத் தனத்தாலே — அவர்
பாடு திண்டாட்டம்


— நாமக்கல் ராஜா, சென்னை — 15.





கடிகாரங்கள் நேற்றும் இன்றும்


ஆழி




ஆதிகாலத்தில், குகை மனிதர்கள், சூரியனைக் கொண்டே நேரத்தைப் புரிந்து கொண்டார்கள்.

பிறகு, தரையில் ஒரு கோலை நட்டு வைத்து அதன் நிழலை வைத்து நேரத்தை அளவிட்டனர்.






இந்தச் சூரிய நிழல் கடிகாரத்தை 3,500 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தியர்கள் கண்டுபிடித்தார்கள்.




இப்படியும் ஒரு சூரிய நிழல் கடிகாரம் இருந்தது.




இப்படிக்கூட சூரிய நிழல்கடிகாரம் இருந்தது. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்புதான், பகல் 12 மணி நேரம் என்றும், இரவு 12 மணி நேரம் என்றும் பிரிக்கப்பட்டது.

மெழுகு வத்தியில் கோடுகள் வரைந்து, அது எரிய, எரிய, கோடுகளைக் கொண்டு நேரத்தை அளந்தனர்.






இது மாதிரி நவீனப்படுத்தப்பட்ட சூரிய நிழல் கடிகாரங்களை இன்றும்கூட மேல்நாடுகளில் சட்டைப் பையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்!




இது எண்ணெய் விளக்குக் கடிகாரம். விளக்கு எரிய எரிய குறைகிற எண்ணெ யின் அளவைக் கொண்டு, நேரத் தைக் கணித்தனர்.




கயிற்றில் ஒரே இடைவெளியில் முடிச்சுகள் போட்டு, அதை எரியவிட்டு நேரத்தைக் கணித்தார்கள்.




ஒரு கல் பாத்திரத்தில் துளை யிட்டு, அதை நீரில் மிதக்கவிட்டு, அது மூழ்கும் கால அளவைக் கொண்டு நேரத்தை அளந்தனர். இந்த நீர்க்கடிகாரம் 2000ஆண்டு களுக்கு முன்பு கிரீஸ் தேசத்தில் நடைமுறையில் இருந்தது.




சீனாவின் நீர்க் கடிகாரம் இது. மேலே உள்ள தொட்டியிலிருந்து சொட்டுச் சொட்டாக, அடியில் உள்ள தொட்டி யில் நீர் நிரம்பும். அடித்தொட்டியில் குறிக்கப்பட்ட அளவைக்கொண்டு நேரத்தைக் கணக்கிட்டார்கள்.



இது மாதிரி ஒரு நீர்க்கடிகாரம் இருந்தது. அடியில் உள்ள பாத் திரத்தின் நீர்மட்டம் உயரும் போது, அதனுடன் பொருத்தப் பட்ட முள்ளும் நகர்ந்து நேரம் காட்டும்.



இது மணல் கடிகாரம். மேல் கிண்ணத்தில் உள்ள மணல் கீழ்க் கிண்ணத்தில் சிறிது சிறிதாகக் கொட்டும். கொட்டி முடிவதை ஒரு நேர மாகக் கணக்கிட்டார் கள். மணல் தீர்ந்த தும் கிண்ணத்தைத் திருப்பி வைப்பார்கள்.



இது 1600-ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட ஒற்றைமுள் கடிகாரம். 1700 ஆம் ஆண்டில் தான் இதில் நிமிடமுள் சேர்க்கப்பட்டது!

16- ஆம் நூற்றாண்டில்தான், சுருள்வில் கொண்டு இயங்கக்கூடிய கடிகாரத்தை பீட்டர் எல்லின் என்ற ஜெர்மானியர் உருவாக்கினார்.





இங்கிலாந்தில் முதன் முதலில் கடிகாரம் வைத்துக்கொண்டிருந்த பெண்மணி, முதலாம் எலிஸபெத் மகாராணிதான்! அவர்தான் முதல்முதலில் கடிகாரத்தை மணிக்கட்டில் கட்டிக்கொண்டார்! அதற்குமுன் கடிகாரத்தைக் கழுத்தில்தான் கட்டித் தொங்க விட்டுக் கொண்டார்கள்!

லண்டனில் பிரிட்டிஷ் நாடாளுமன்றக் கட்டடங்களுக்கு மேல், 1858 - ஆம் ஆண்டு 'சர் பெஞ்சமின் ஹால்' என்பவரின் முயற்சியால் அமைக்கப்பட்டது 'பிக்பென்' கடிகாரம். எண்கள் ஒவ்வொன்றும் 77 செ.மீ. உயரம்! பெண்டுலம் 4 மீ. கடிகாரத்தின் எடை 13½ டன்! 6 கி.மீட்டருக்கு அப்பால் இருந்து பார்த்தாலும் நேரம் தெரியும்! இதன் ஒலி வானொலியில் 41 மொழி நிகழ்ச்சிகளில் ஒலி பரப்பப்படுகிறது!


இதற்கு ஏன் 'பிக்பென்' என்று பெயர் வந்தது தெரியுமா? இதற்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றி, மிகவும் பருமனான சர் பெஞ்சமின் ஹால் நீண்ட நேரம் பேசிய போது, பொறுமை இழந்த ஒருவர் 'பிக்பென்' என்றே பெயர் வைத்துவிடலாம் என்றார்! 'பிக்பென்' என்பது சர் பெஞ்சமின் ஹாலின் கிண்டல் பெயர்!

உலகில் பிறந்தநாள் கொண்டாடப்படும் ஒரே கடிகாரம் பிக்பென்தான்!







மலர்களாலேயே உருவாக்கப்பட்ட ஒரு கடிகாரம் ஜப்பானில் இருக்கிறது. உலகிலேயே மிகப் பெரியது. 25 மீட்டர் சுற்றளவுள்ள முகம். மணிமுள் 7.2 மீ. நிமிடமுள்ளும் விநாடி முள்ளும் 9.3 மீ. மூன்று முட்களின் மொத்த எடை 660 கிலோ. செலவு 12 மில்லியன் ஜப்பான் யென்!



உலகில் மிக அதிகமான தொகைக்கு இந்தக் கைக் கடிகாரம் ஏலம் போயிற்று. இடம்: நியூயார்க். தொகை: ரூ. 1 கோடி! தேதி, மணி, நிமிடம், விநாடி ஆகியவற்றைத் தனித்தனியாகக் காட்டும் கடிகாரம் இது!




இது அமெரிக்கக் கடிகாரம். ரேடியோவுடன் சேர்ந்தது. வேண்டிய ஸ்டேஷனைத் திருப்பி, வேண்டிய வால்யூமில் வைத்து, அலாரமும் வைத்துவிட்டால், ரேடியோ சரியாக அந்த நேரத்தில் இயங்க ஆரம்பிக்கும். அது போல், குறிப்பிட்ட நேரத்தில் தானே நிறுத்திக் கொள்ளும்!




சீனாவில் ஆதவாய் என்ற 70 வயது மனிதர் கண்டுபிடித்துள்ள இந்தக் கடிகாரம் ஒரே சமயத்தில் உலகின் 24 பகுதிகளின் நேரத்தைத் துல்லியமாகக் காட்டக் கூடியது!

இது சூரிய சக்தியால் இயங்கும் கடிகாரம். சூரிய ஒளி இல்லாத நேரத்தில், பாட்டரியால் தானே இயங்கும். சூரியன் தோன்றியதும் பாட்டரி இணைப்புத் தானே நின்று விடும்! சூரிய சக்திக் கடிகாரத்தைக் கண்டுபிடித்தவர்கள் ஜெர்மானியர்!



சுவிட்ஸர்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்ட அணுச்சக்தியால் இயங்கக்கூடிய கடிகாரம் மிகத் துல்லியமாக நேரம் காட்டும். சுமார் ஒரு செகண்ட் தாமதமாகுமாம்— மூவாயிரம் ஆண்டுகளில்!



• இது தெரியுமா?

கடிகாரத்தின் எந்திரப் பகுதிகள் பொருத்திய தகட்டின் குறுக்களவை வைத்துத்தான் அதன் 'சைஸ்' நிர்ணயிக்கப் படுகிறது. பெண்களின் கடிகாரம் 5¼ சைஸ், மற்றவை 8¾, 9¾, 10½, 11 சைஸ். ஆனால், ஸ்விஸ் கடிகாரங்களில், 'சைஸ்' என்பதற்குப் பதில், 'லைன்' என்று குறிப்பிட்டிருப்பார்கள். ஒரு 'லைன்' என்பது ஓர் அங்குலத்தில் 32-இல் 3 பாகம். டைம்பீஸ், சுவர்க் கடிகாரங்களை அங்குலக் கணக்கில் தான் குறிப்பிடுவார்கள்.

ஒரு தவளை தும்பியாகிறது

''பள்ளி மாணவர்களுக்கான கதைப் போட்டி! மொத்தப் பரிசு ரூபாய் இரண்டாயிரம்!''

'மாணிக்கம்' வார இதழில் வந்திருந்த அறிவிப்பு கதிரேசனை மிகுந்த பரபரப்புக்கு உள்ளாக்கியது.

'முதற்பரிசு ஐந்நூறு... இரண்டாம் பரிசு முந்நூறு... மூன்றாம் பரிசு... ஆறுதல் பரிசுகள்..' படிக்கப் படிக்க அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. மறுபுறம் உள்ளத்தில் இறுக்கமும் கூடியது. 'இந்த அறிவிப்பை முருகானந்தமும் பார்ப்பானோ!'

அவனுடைய கவலையில் அர்த்தம் இருந்தது. முருகானந்தம் நன்றாகப் படிக்கின்ற மாணவன். அத்தோடு கதை, கவிதைகள் எழுதுவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தான். ஏற்கனவே சில பரிசுகளையும் பெற்றிருந்தான்.

இந்தப் போட்டி பற்றித் தெரிந்தால் அவ்வளவுதான்.... நிச்சயம் ஒரு பரிசைத் தட்டி விடுவான். அது முதல் பரிசாகக் கூட இருக்கலாம்! தேர்வுக்கு இன்னும் இருபது நாள்களே இருக்கும் இந்தச் சமயத்தில் அவன் இதில் கலந்து கொள்வானா? இரண்டு நாளுக்கு முன்னால் கண்ணப்பன் சொன்னான்: 'முருகானந்தம் இந்த ஒரு மாதத்துக்கும் எந்தப் பத்திரிகையையும் பார்க்க மாட்டானாம்... படிக்க மாட்டானாம்...'

அந்தக் கடையில் 'மாணிக்கம்' தொடர்பான சுவரொட்டி தொங்கியது. அதிலும் போட்டி பற்றிய அறிவிப்பு! அதை யாராவது பார்த்துவிட்டு அவனிடம் சொல்லி விட்டால்?

கதிரேசனுடைய கவலை கற்பனையின் எல்லைகளையும் தாண்டியது. ஏற்கனவே உருவான பொறாமை உணர்ச்சி, குளத்தில் விழுந்த கல் எழுப்பும் வளையமாக விரிந்தது.

படிப்பில் முருகானந்தத்தோடு போட்டி போட முடியவில்லை. எப்போதும் முதல் இரண்டு இடங்களுள் ஒன்றை நிலைப்படுத்திக் கொண்டிருந்தான் அவன். கதிரேசன் பத்தாம் இடத்தைப் பெறுவதற்கே படாதபாடு பட்டான்!

முருகானந்தம் உண்மையாகப் படித்து வாங்கிய மதிப்பெண்களை 'காப்பியடித்து மிகுதியாக வாங்கிவிட்டான்' என்று கதைகட்டி விட்டான்! வகுப்பில் பாடத்தைக் கவனிக்காத சில 'மக்குகள்' அவன் சொன்னதைக் காது கொடுத்துக் கேட்டார்கள். ஆசிரியர்களுக்கு அச் செய்தி எட்டவில்லை!

மற்றொரு வேலையையும் அவன் செய்தான். ''பத்திரிகைகளில் முருகானந்தம் எப்படிப் பரிசு வாங்கினான் தெரியுமா? இந்தப் பத்திரிகையில் வருவது... அந்தப் பத்திரிகையில் வருவது எல்லாவற்றையும் பார்த்துக் காப்பியடித்துக் கதை எழுதி விட்டான். அவனுடைய தந்திரம் தெரியாமல் அவர்களும் பரிசு கொடுத்து விட்டார்கள். எதை எதைப் பார்த்து எந்தக் கதையை எழுதினான் என்பதையெல்லாம் நான் ஒரு 'டயரி'யில் குறித்து வைத்திருக்கிறேன். எனக்கும் கதை எழுதத் தெரியும். கவிதை எழுதத் தெரியும். அதை விட முக்கியமான வேலைகள் இருப்பதால் நான் அதில் ஈடுபடவில்லை.''

அவன் சொன்ன அந்தக் 'கதை'யையும் சில பொழுது போகாத 'ஜீவன்கள்' காது கொடுத்துக் கேட்டன.. அங்கு வந்த கண்ணப்பன், ''கதிரேசா! அவன் கதை எழுதிப் பரிசு வாங்கினால் உனக்கு ஏன் உடம்பெல்லாம் எரிகிறது? முடிந்தால் நீயும் எழுது. இல்லாவிட்டால் அமைதியாக இரு... இப்படி பொறாமைப் படுவது.... அவதூறு பேசுவது கெட்ட பழக்கம்!'' என்று அழுத்தமாகச் சொன்னான்.

''உண்மையைச் சொன்னேன்... பொறாமைப்படுகிறேன் என்கிறாயே!''

''பெரிய அரிச்சந்திரன்! உண்மைக்காக வாழ்கிறான்!''

பூதலூர் முத்து

அதற்குப் பிறகு கண்ணப்பன் இல்லாத இடத்தில் மட்டுமே தன் 'வேலை'யைச் செய்தான்.

'எது உண்மை என்பதை எல்லோரும் விரைவில் புரிந்து கொள்கிறார்களே... எதையும் மறைத்து வைக்க முடியவில்லையே... நம் விருப்பப்படி ஏமாற்ற முடியவில்லையே' என்று அவன் வருந்தினான்.

கதிரேசன் உள்ளத்தில் அப்படிப் புழுங்கினாலும், முருகானந்தம் தான் வகுத்துக் கொண்ட வழியில் தொடர்ந்து சென்று கொண்டிருந்தான்!

வகுப்பில் சுமாராகப் படிக்கிறவர்களை அழைத்து மரத்தடியில் வைத்துப் பல பாடப் பகுதிகளை விளக்குவான். கேள்விகள் கேட்டு, அவர்கள் புரிந்து கொள்கிற வரை முகம் சுளிக்காமல் சொல்லித்தருவான். பள்ளிக் கூடத்தில் நடக்கும் போட்டிகளாயினும் பிற அமைப்புகள், பத்திரிகைகள் நடத்தும் போட்டிகளாயினும் அவற்றைப் பற்றி மாணவர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லுவான், கலந்து கொள்ளுமாறு ஊக்கப்படுத்துவான். கதை, கவிதை எழுதிக் காட்டினால் நன்றாக இருந்தால் பாராட்டுவான். குறைகள் தென்பட்டால் இதமாக எடுத்துச் சொல்லுவான்.

அவன் எதைச் செய்தாலும் அதைப் பற்றித் தவறான கண்ணோட்டத்தோடு கதிரேசன் விமர்சனம் செய்து கொண்டிருந்தான். ''கதை, கவிதை எல்லாம் கொண்டு வாருங்கள்.... திருத்தித் தருகிறேன் என்பது எதற்காகத் தெரியுமா? அதிலிருந்து காப்பியடிக்க!''

அந்தச் சொற்கள் கண்ணப்பன் காதில் விழுந்தன.

''கதிரேசா, உன் பேச்சு எல்லை தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறது. நீ இப்படிக் கிண்டல் செய்வதையெல்லாம் நான் முருகானந்தத்திடம்...''

''போய்த் தாராளமாகச் சொல்லிக் கொள்...''

''நான் முருகானந்தத்திடம் சொல்லப் போவதில்லை... நம் வகுப்பாசிரியரிடமும் தலைமையாசிரியரிடமும் சொல்லப் போகிறேன்.''

அதைக்கேட்டு அவன் அதிர்ச்சியடைந்தான்.

'ஒரு பண்புள்ள; நன்றாகப் படிக்கிற மாணவனை இப்படி வாயில் வந்தபடி மற்றொரு மாணவன் கிண்டல் செய்வதை வகுப்பாசிரியரோ தலைமையாசிரியரோ பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். பிறகு நம் படிப்பே கேள்விக்குறியாகிவிடும்,' என்று அஞ்சினான் கதிரேசன்.

கண்ணப்பனைத் தனியே சந்தித்து 'இனிமேல் அப்படியெல்லாம் பேச மாட்டேன்,' என்று உறுதியளித்தான்.

அப்படி உறுதியளித்தானே தவிர முருகானந்தத்தின் வளர்ச்சிக்கு மறைமுகமாக எப்படிக் கெடுதல்



செய்யலாம் என்று யோசித்தான். அந்த நேரத்தில் போட்டி பற்றிய அறிவிப்பு வந்தது அவனுடைய பரபரப்புக்குக் காரண மாயிற்று.

'போட்டியைப் பற்றிய செய்தி கண்ணப்பன் போன்றவர்களுக்குத் தெரிந்தால் கூட முருகானந்தத்திற்குப் போய்விடும், என்ன செய்வது?'

குழம்பினான் அவன்.

''என்ன கதிரேசா, கையில் அட்டை, தாள்! கதை எழுதப் போகிறாயா?''— திரும்பிப் பார்த்தான்.வாசு.

போட்டிக்குக் கதை எழுதலாம் என்று தான் அந்தத் தனியிடத்தை நாடி வந்தான் கதிரேசன். பேனாவைத் திறந்து வைத்துக் கொண்டானே தவிர சொற்கள் வரவில்லை! உள்ளம் பொறமை என்ற அழுக்குத் திரையில் மூடப்பட்டிருந்தது! 'போட்டி பற்றித் தெரிந்து விட்டால் அவன் எழுதி அனுப்பி விடுவானே' என்ற சிந்தனை செக்குமாடாக சுற்றிச்



கௌரவ தண்டனை!

● இந்தோசினாவை 1802 முதல் 1820 வரை ஆண்ட சியாலாங் இறந்த பின் அடக்கம் செய்யப்பட்ட சமாதியை அதிலுள்ள ரத்தினங்களுக்காகக் கொள்ளையடித்தவர்கள் சடலத்தைத் தூக்கியெறிந்து விட்டனர். மீன்பிடிப்பவன் ஒருவன் கையில் அவரது மண்டையோடு சிக்கியது. மகிழ்வோடு மந்திரியைப் பார்த்து அதைக் கொடுத்தான். அந்த மீன் பிடிப்பவன் உடனே பிரபுவின் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டான். அவனுக்கு ஒரு கோயிலும் கட்டப்பட்டது. இன்னும் கூட அது இருக்கிறது. இவ்வளவு கௌரவத்தையும் அளித்த பிறகு மீன் பிடிப்பவன் தலையை வெட்டிக் கொன்று விட்டார்கள். அசுத்தமான கைகளால் மன்னருடைய மண்டையோட்டைத் தொட்டு விட்ட பாவத்துக்குத் தண்டனையாம் அது!

— ஆ. ஏழுமலை, திண்டிவனம்.

சுற்றி வந்தது. தெரிந்த ஒன்றிரண்டு சொற்கள் கூட 'கண்ணாமூச்சி' காட்டின.

வாசுவிடம் 'கதை' என்று சொன்னால் அவன் எதையாவது கேட்பான். வீண் தொல்லை.

''இல்லை... தேர்வுக்கு மனப்பாடம் செய்த ஆங்கிலக் கட்டுரையை எழுதிப் பார்கிறேன்...''

அவன் போய்விட்டான்.

கதிரேசனுக்குக் கதை எதுவும் தோன்றவில்லை. எரிச்சலாக இருந்தது. கொண்டு வந்த தாளைக் கசக்கிச் சுருட்டி எறிந்தான்.

சற்றுத் தூரத்தில் கண்ணப்பன் வருவது தெரிந்தது. 'விடுமுறை என்பதால் புத்தகப் பையோடு வருகிறான். இது அவனுடைய வழக்கமான இடமோ என்னவோ... தெரியாமல் வந்து விட்டோம். அவனிடம் ஆங்கிலக் கட்டுரை என்று சொல்லி மீள முடியாது. புத்தகம் எங்கே... கட்டுரையைச் சொல் என்று தொடங்கிவிடுவான்,' என்று நினைத்தவன் விரைந்து புறப்பட்டான்; செடிகளுக்கிடையே மறைந்தான்.

ஒரு வாரம் ஓடிவிட்டது. கதை அனுப்புவதற்குரிய கடைசி நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

கதிரேசன் கதை என்ற பெயரில் ஒரு பிண்டத்தைப் பிடித்து வைத்திருந்தான். அதுவே அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. அவனுடைய வாழ்நாளில் அதுதான் முதல் முயற்சி! அதை அஞ்சலிலும் சேர்த்து விட்டான்!

அதைவிட அவனுக்கு வேறுவிதத்தில் ஒரு நிம்மதி. 'போட்டி விவரம் முருகானந்தத்திற்குத் தெரிந்திருந்தால் இந்நேரம் எல்லோருக்கும் தெரிவித்திருப்பான். நமக்கும் செய்தி வந்திருக்கும். அவனுக்குத் தெரிய வில்லை. அவன் கலந்து கொள்ள முடியாது.'

'எத்தனைப் பேர் நூலகத்திற்குப் போகிறார்கள். எத்தனைப் பேர் வீட்டுக்கு 'மாணிக்கம்' வருகிறது! ஒருவர் கூட அதுபற்றிப் பேசவில்லையே, ஏன்? தேர்வு நேரம்... படிப்பில் கவனமாக இருக்கிறார்கள்.'

''கதிரேசா... என்ன ஆழ்ந்த சிந்தனை!''

குரலைக் கேட்டு நிமிர்ந்தான். கண்ணப்பன் கையில் ஒரு தாளோடு நின்று கொண்டிருந்தான்.

'இன்னும் இரண்டே நாள்தான்... இனிமேல் எதையும் செய்ய முடியாது.'

''ஒன்றுமில்லை கண்ணப்பா... தேர்வுக்குப் படித்த களைப்பு!''- நன்றாகச் சமாளித்தான்.

''சரி... ஓய்வு எடுத்துக் கொண்டு நன்றாகப்படி... உனக்கு ஒரு செய்தி... 'மாணிக்கம்' பத்திரிகையில்...''

கேட்ட அவனுடைய விழிகளில் கலக்கம். ''மாணிக்கம் பத்திரிகையில்...''

''ஒரு போட்டி அறிவித்திருக்கிறார்களே...!''

''என்ன போட்டி... தெரியாதே...'' முகத்தைத் துடைப்பது போல் ஒரு நடிப்பு. , கண்ணப்பன் சந்தேகப்படவில்லை.

''கதை எழுதத் தெரியும் என்றாயே... இந்தப் போட்டியில் கலந்து கொள்... விவரம் சொல்கிறேன்... குறித்துக் கொள்...''

அவன் குறித்துக் கொள்ளத் தொடங்கினான்.

''கண்ணப்பா, முருகானந்தத்தைப் பார்த்தாயா?''

''அவனை நான் எங்கே பார்ப்பது? தேர்வுப் படிப்புக்காக பள்ளிக்கூடம் விடுமுறை யாதலால் அவனுடைய பாட்டி வீட்டிற்குப் போயிருக்கிறான். கிராமத்தில் படிப்புக்கு ஒரு தொல்லையும் இருக்காது பார்... அதனால்தான்!''

'அப்படியானால் அவனுக்கு விவரம்

தெரிய வாய்ப்பில்லை. நமக்குப் பரிசு கிடைக்கா விட்டால் போகட்டும். அவன் கலந்து கொள்ளக் கூடாது.'

'தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை' என்ற கோணல் சிந்தனையின் கொம்பில் அவன் நின்று கொண்டிருந்தான்.

''என்ன கதிரேசா, முருகானந்தத்திற்குத் தெரிவித்தால் அவனும் இந்தப் போட்டியில் கலந்து கொள்வானே என்றுதானே நினைக்கிறாய்?''

வேறு வழியின்றி, ''ஆமாம் கண்ணப்பா... அதைத்தான் நினைத்தேன்,'' என்றான்.

''நீ வருந்தவேண்டாம். அவனுக்கு இந்தப் போட்டி பற்றிய விவரம் தெரியும்..''

கதிரேசன் சொல்ல முடியாத திகைப்புக்கு உள்ளானான். அதை ஒரு வழியாக மறைத்துக் கொண்டு, ''முன்பே தெரியுமா! கதை அனுப்பி விட்டானா?'' என்றான்.

''அவன் அனுப்புகிறானோ இல்லையோ என்றெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால், அவன் இந்தக் கடிதத்தை அங்கிருந்து எழுதியதால்தான் நான் உன்னைப் பார்க்க வந்தேன்..''

''என்ன சொல்கிறாய்?''

''ஆமாம்... 'இந்தப் போட்டியைப் பற்றி இப்போதுதான் எனக்கு விவரம் தெரிந்தது. விவரம் முகவரி ஆகியவற்றை எழுதியிருக்கிறேன். நம் நண்பர்களுக்கெல்லாம் இதை உடனே தெரிவித்து விடு. படிப்புக்குத் தடையில்லாதபடி, கலந்து கொள்ளும்படி சொல்' என்று எழுதியிருக்கிறான்''

கதிரேசன் ஒரு நிமிடம் மௌனமானான். முருகானந்தம் எவ்வளவு உயர்ந்தவன்!

''அதைவிட ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? இந்தப் போட்டி பற்றிய விவரத்தை அவனுக்குச் சொன்னது யார் தெரியுமா? முருகானந்தம் சென்ற விடுமுறைக்குச் சென்ற போது அறிமுகம் ஆன ஒரு பையன்! அந்த ஊரில் சுண்டல் விற்றுப் பிழைப்பவன்! பள்ளியில் படிப்பைப் பாதியிலேயே விட்டவன்! 'மாணிக்கம்' பத்திரிகையைக் கொண்டு வந்து கொடுத்து போட்டிக்கு எழுதி அனுப்பும்படி அவனை உற்சாகப் படுத்தினானாம்...''

அதைக் கேட்டதும் அவனுடைய உள்ளத்தில் 'சுரீர்' என்றது.

சுண்டல் விற்றுப் பிழைக்கிற ஓர் ஏழைப் பையனுக்கு இருக்கும் அந்த உள்ளம் - உயர்ந்த எண்ணம், வசதியுள்ள மாணவனான தன்னிடம் இல்லையே என்ற பதைப்பு - வறுமை உணர்ச்சி அப்போதுதான் அவனுக்கு ஏற்பட்டது. சிந்திக்கத் தொடங்கினான்.

'தாமரை மலருக்கு அருகிலிருந்து கொண்டு அதன் அழகைக் காணாமல் - மணத்தை மோந்து மகிழத் தெரியாமல் ஒரு சொறித்தவளையாக 'கொட கொட'த்துக் கொண்டு இருந்து விட்டேனே! இனி, நான் தாமரை மலராக இல்லாவிட்டாலும் ஒரு நல்ல தும்பியாவாவது இருப்பேன்.'

அவன் உறுதியெடுத்துக் கொண்டான்.

கேமரா..?


* கேமரா என்னும் ரோமன் மொழி சொல்லுக்கு தனியான இருட்டு அறை என்பது பொருள். புகைப்படக் கருவியும் ஓர் இருட்டு அறைதானே.

— நீடாமங்கலம் மகேந்தி, நீடாமங்கலம்.

''ஏண்டா இப்படிப் பழைய பூவை வாங்கிட்டு வந்திருக்கே?''

''நீங்கதானே பழம்பூ வாங்கிட்டு வரச் சொன்னீங்க!''

— சீர்காழி வி. ரேவதி.





பாலத்தை எப்படிக் கடந்தார்? — போட்டி

மிகவும் நீளமான பாலம். அதைக் கடந்து செல்ல, சரியாகப் பதினாறு நிமிடங்கள் ஆகும். பாலத்தின் இரண்டு முனைகளிலும், காவல்காரர்கள் இருந்தனர். ஒரு பக்கத்துக் காவல்காரர் பெயர் சங்கர். இன்னொரு பக்கத்துக் காவல்காரர் பெயர் சுந்தர்.

பாலத்தைக் கடந்து செல்லக் கட்டணம் உண்டு. கட்டணத்தை வசூலிப்பதில் சங்கர், சுந்தர் இருவருமே மிகமிகக் கண்டிப்பானவர்கள். கட்டணம் கொடுக்காமல் யாருமே அவர்களைத் தாண்டிப் போய்விட முடியாது. அப்படி யாராவது முயன்றால் அவர்களை இழுத்து வெளியே கொண்டு போய் விட்டுவிடுவார்கள்.

சங்கருக்கும் சுந்தருக்கும் ஒரு வேடிக்கையான பழக்கம். சரியாக பகல் பன்னிரண்டு மணிக்கு இருவருமே தூங்கப் போய் விடுவார்கள். பதினைந்து நிமிடங்கள் தூங்கிச் சரியாகப் பன்னிரண்டு பதினைந்து ஆகும் போது விழித்துக் கொண்டு விடு வார்கள். இதில் துளியும் பிசக மாட்டார்கள்.

பலே புத்திசாலியான மதிவாணன் என்பவர் சங்கரும் சுந்தரும் தூங்குகின்ற நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கட்டணம் செலுத்தாமல் பாலத்தைக் கடக்க முயன்று வெற்றியும் பெறுகிறார்!

மதிவாணன் வேகமாக நடந்து போகவில்லை! சங்கருக்கும் சுந்தருக்கும் மயக்க மருந்து தரவில்லை! ஆனால் , பாலத்தைக் கடந்து விடுகிறார் கட்டணம் தராமல்!

மதிவாணன் பாலத்தை எப்படிக் கடந்து போயிருப்பார்? நீங்கள் யோசித்தால் முடியாதது கூட உலகில் உண்டா? கூப்பனோடு உங்கள் விடை வரவேண்டும். பரிசு உண்டு. அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர், 'கோகுலம்,' ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 32.

எப்படிக் கடந்தார்?

-- போட்டி

பெயர்: ____________________

முகவரி: ____________________

வயது: ____________________

____

____

பின்கோடு: ____________________

முடிவு தேதி: 15.6.91

நீர்யானைக்கு வியர்ப்பது இரத்தமா?



குட்டியை முதுகில் வைத்துக் கொண்டு மகிழ்ச்சியாக நீந்திக் கொண்டிருந்தது அம்மா நீர்யானை. அம்மாவின் கண்களும், மூக்குத் துவாரங்களும் மட்டும்தான் நீருக்குமேல் வெளியே தெரிந்தன. உடலின் மற்ற பாகங்கள் நீருக்குள் மூழ்கிக் கிடந்தன. அதனால் தூரத்தில் கரையிலிருந்து பார்ப்பவர்களுக்கு அம்மாவின் முதுகில் இருந்து குட்டி நீர்யானை சவாரி செய்வதாகத் தோன்றவில்லை. ஏதோ திரைப்படங்களில் மந்திர தந்திரக் காட்சிகளில் தண்ணீரின்மேல் நடப்பது போல் தோன்றியது.

கரையில் பைனாகுலரோடு நின்று பார்த்துக் கொண்டிருந்த வெளிநாட்டுப் பயணிகளுக்கு, ஆப்பிரிக்கச் சுதேசிகள் விளக்கிக் கொண்டிருந்தனர். எதிர்க்கரையில் இதற்கு நேர்மாறான காட்சி தென்பட்டது. புதர்களுக்கிடையே ஒளிந்தபடி அம்மா நீர்யானையையே துப்பாக்கியால் குறிபார்த்துக் கொண்டிருந்தான் ஒருவன்!

நீரில் மிதந்து வந்த மட்டை உரிக்காத தேங்காயை அம்மா நீர்யானை வாயில் கௌவிக் கடித்தது. அம்மாவுக்கு உதவ குட்டியும் நீரில் குதித்தது. அந்த நேரம் பார்த்துத் துப்பாக்கி வெடித்தது. குறி தவறியதால் குண்டு நீரில் பாய்ந்து நீரைச் சிதற வைத்தது.

அம்மா குட்டியோடு நீருக்குள் மூழ்கியது. நீருக்குள்ளேயே நீந்தியது. குட்டியும் அம்மாவுக்குச் சளைக்காமல் நீருக்குள்ளேயே கூடவே நீந்தி வந்தது! இரண்டும் தங்கள் காது, மூக்குத் துளைகளை இறுக மூடிக் கொண்டு சில நிமிடங்கள் நீந்தி, வெகுதூரம் சென்று நீருக்குமேல் தலையைத் தூக்கிப் பார்த்தன. ஆபத்து விலகிப் போயிருந்தது.

எதிரே, இன்னொரு நீர்யானை நீந்திக் கொண்டே வந்தது.

''கீழப்பக்கம் போகாதே. துப்பாக்கியோட ஒரு ஆள் காத்திருக்கான். நாங்க உயிர் பிழைத்து வந்ததே அதிசயம்'' என்று எச்சரித்து அனுப்பியது அம்மா. அம்மாவின் முதுகில் கழுத்துக்கு அருகே பழையபடி குட்டி ஏறிக் கொள்ள, அம்மா நீர்யானை நீந்திச் சென்றது. நேரம் ஓடியது.

''அம்மா, எனக்குப் பசிக்கிறது'' என்றது குட்டி.

''இன்னும் கொஞ்ச தூரத்தில் ஆறு வளைகிறது. அங்கே ஏராளமாகப் பாசியும் நீர்க்கொடியும் இருக்கும். ஒரு கை பார்க்கலாம்'' என்றது அம்மா.

வளைவு வந்தது. அம்மாவும் குட்டியும் நீரில் மூழ்கின. நீருக்கடியில் செழித்துக் கிடந்த பாசியையும், நீர்த் தாவரங்களையும் ஒரு பிடி பிடித்து விட்டு வெளியே வந்தன இரண்டும்.

குட்டியின் முகத்தில் நிறைவு இல்லை. ''தினமும் இதுவேதானா? எனக்கு அலுத்துப் போச்சு,'' என்றது சலிப்புடன்.

''மனிதர்கள் முன்னைப் போல் இல்லை. நம்மைப் பிடிக்கவும், கொல்லவும் அலைகிறார்கள். அதனால், உணவுக்காகக் கரையேறிப் போவது ஆபத்தில்தான் முடியும்,'' என்றது அம்மா.

''நாம் அவர்களுக்கு என்னம்மா தீங்கு

ரேவதி

செய்தோம்?''

''பயிர்ப் பச்சைகளைத் தின்ன நாம் கரையேறிப் போகிறோம் இல்லையா? அப்ப, நாம்ப தின்பதைவிட அதிக அளவு பயிர்கள் நம்ம கால்பட்டு நாசமாகின்றன. யார்தான் பொறுப்பார்கள்? அதனால், நம்மை வரவிடாது தடுக்க, நம்மையே கொன்றுவிடுகிறார்கள்.''

குட்டி பதில் பேசாது யோசனையில் ஆழ்ந்தது. அம்மா தொடர்ந்தது.


''இதையாவது நியாயம்னு ஒத்துக்கலாம். ஆனால், இறைச்சிக்காகவும், நமது தோலால் சவுக்கு செய்யவும் நமது பற்களைக் கொண்டு பொய்ப்பல் கட்டிக் கொள்ளவும் நம்மைச் சுட்டுத் தள்ளுகிறார்களே...! இந்தக் கொடுமையை யாரிடம் கூறுவது? அதனால், கரையேறி உணவு தேடப் போகும் போது எந்த நிமிடமும் ஆபத்து நேரிடலாம்னு விழிப்போட இருக்கணும்.''

இரண்டும் பேசிக் கொண்டே நீந்தின.

''அப்போ நமக்கு விமோசனமே கிடையாதா? பாதி வயிறு கூட நிரம்பாமல் பாசித் தாவரங்களையே தின்று கொண்டு, உயிருக்கு அஞ்சி வாழ வேண்டியதுதானா'' என்று விரக்தியோடு கேட்டது குட்டி.

தாய் அனுதாபத்தோடு குட்டியைப் பார்த்தது.

''நம்ம கொள்ளுத் தாத்தாவுக்குத் தாத்தாவெல்லாம் மனிதர்களையே பார்த்ததில்லையாம். காடு அந்த அளவுக்குச் செழித்து வளர்ந்து பயிர்ப் பச்சைகளும், கடலை, கரும்பு, சோளமும் மண்டிக் கிடந்ததாம். இஷ்டத்திற்குப் போய்த் தின்பார்களாம். ஆனால், இப்போ தங்களுடைய வசதிகளுக்காக மனிதர்கள் காட்டை அழித்து நம்முடைய வாழுமிடத்தைக் குறைக்கிறார்கள். நமக்கு உணவு கிடைக்கும் பகுதி ஒரேயடியாகக் குறைந்துவிட்டது. அதனால் நாம்தான் திண்டாடுகிறோம். அதிலும் தாவரங்களையே நம்பி நமது இனம் வாழ்வதால், படாதபாடு படுகிறோம். ஏண்டாப்பா நீர்யானையாகப் பிறந்தோம்னுகூட வருத்தமா இருக்கு'' என்று ஏக்கப் பெருமூச்சு விட்டது அம்மா.



அந்த இடத்தில் ஆறு, நிலத்தில் ஊடுருவி உள்ளே போயிருந்தது. ஏராளமான நீர்யானைகள் நீருக்குமேல் மூக்கையும் காதுகளையும் நீட்டி வைத்துக் கொண்டு சுகமாகக் கிடந்தன. அம்மாவும் குட்டியும் அவைகளோடு சேர்ந்து கொண்டன.

கூட்டத்திற்குள் புகுந்து சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பியது குட்டி.

''அம்மா, சித்தப்பாவையும் அவர் பெண்ணையும் காணோம்!''

''அவங்க இரண்டு பேரும் தாங்களாகவே விலங்கு பிடிப்பவர்களிடம் போய்ச் சிக்கிக் கொண்டு விட்டனர்.''

குட்டி, அம்மாவைத் திகைப்போடு பார்த்தது.


''நம் இனத்தவர்களுக்குப் போதிய உணவு கிடைப்பதில்லை. ஆபத்துக்களும் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. இப்படி அரைப்பட்டினி கிடந்து பயந்து பயந்து வாழ்வதைவிட, விலங்கு பிடிப்பவர்களிடம் சிக்கிக் கொண்டால் உயிர் பிழைக்கலாம்.''

''அம்மா, அவங்க நம்மைக் கொன்று விட மாட்டார்களா?''

''மாட்டாங்க. அவங்க நம்மைப் பிடிப்பது கொல்வதற்காக அல்ல. உலகத்திலேயே இந்த ஆப்பிரிக்கக் கண்டத்தில் மட்டும்தான் நம் இனம் அதிகமாக இருக்கிறதாம். உலகெங்கும் உள்ள உயிரியல் பூங்காக்கள், சர்க்கஸ் கம்பெனிகளிலிருந்து நம்மை விலை கொடுத்து வாங்கி வளர்க்கச் சில நல்ல மனிதர்கள் தயாராக இருக்கிறார்கள். விலங்கு பிடிப்பவர்கள் நம்மை அவர்களிடம் விற்று விடுவார்கள். நம் உயிருக்கு ஆபத்தும் இல்லை. நமக்குத் தேவையான தீனியையும் அவர்களே கொடுத்து விடுவார்கள். இதனால்தான் நம் இனத்தாரில் பலர் தாங்களாகவே போய்ச் சிக்கிக் கொள்கிறார்கள்'' என்றது அம்மா.

''அப்ப, நாமும் அவர்களிடமே போய் விடலாமே? பசியால் இப்படி அவதிப்படுவதைவிட அது நல்லதில்லையா?'' என்றது குட்டி.

''வயிறு மட்டும் முக்கியமல்ல கண்ணே! சுதந்திரம் வேண்டாமா? நாம்



இப்போ எவ்வளவு தொலைவு ஆனந்தமாக நீந்தி வந்தோம்? அவர்களிடம் போய் விட்டால், இப்படி நீந்த முடியாதே! ஒரு சிறிய இடத்திற்குள்ளேயே இறக்கும் வரை சுற்றிச் சுற்றி வர வேண்டியதுதான். அதுவும் ஒரு வாழ்க்கையா?'' என்று வெறுப்போடு கூறிக் கொண்டது அம்மா.

''அம்மா அங்கே பாரேன். ஒரு படகு வருது!'' என்றது குட்டி.

நீர்யானைகள் கூடி மகிழ்ச்சியாக நீந்திக் கொண்டிருந்த பகுதிக்கு ஒரு படகு வந்து கொண்டிருந்தது.

''ஐயோ பாவம்! எந்த முட்டாள் உயிரைப் பறிகொடுக்க இப்படிப் படகிலே வருகிறானோ!'' என்று பரிதாப்பட்டது அம்மா.

நீர்யானைகள் இருந்த பகுதிக்குள் வந்துவிட்ட படகு, அவை மீது இடித்து நகர்ந்தது. கோபங் கொண்ட நீர்யானைகள் படகுக்குக் கீழே தலையை வைத்து அலாக்காகத் தூக்கிப் படகைக் கவிழ்த்தன. கவிழ்ந்த படகு ஆற்றின் ஓட்டத்தோடு போக அதில் வந்தவன் உயிருக்குப் போராடினான்.

குட்டியின் தொந்திரவைத் தாளாது அம்மா ஆற்றின் புதிய பகுதிக்கு அதை அழைத்து வந்தது. அங்கே கரை ஓரத்தில் கோரைப் புற்கள் மண்டிக் கிடந்த பகுதிக்கு இரண்டும் வந்தன. வயிறார மேய்ந்தன.

திடீரென்று 'சடார்,' 'சடார்' என்று நீரை வாரி இறைக்கும் சத்தம் கேட்டது. இரண்டும் திரும்பிப் பார்த்தன.

முதலை ஒன்று பயங்கரமாக வாயைத் திறந்தபடி வந்து கொண்டிருந்தது. அம்மாவும் குட்டியும் துளியும் அஞ்சவில்லை.

''வாய் வலிக்கப் போகிறது, மூடிக்க. நான் வாயைத் திறந்தால் இதைவிடப் பயங்கரமா இருக்கும்.''

வாயை மூடிக் கொண்டாலும் முதலையின் சீற்றம் அடங்கவில்லை.

''இங்கே ஏன் வந்தே? இது எங்க பகுதி?''

''மனிதர்கள் மாதிரி உரிமை கொண்டாடாதே. இங்கே கோரையும், கிழங்கும் மண்டிக் கிடக்கு. இவை உன்னால் திங்க முடியாதவை. எங்கள் பசிக்கு இவை தேவை. அதனால்தான் வந்தோம்'' என்றது அம்மா.

''வெறும் தாவரங்களை உண்டு வாழும் உனக்கு, இவ்வளவு துணிவும் திமிரும் இருக்கக் கூடாது. யானையையே அழித்துச் சாப்பிடும் வீர இனம் நாங்கள்'' என்றது முதலை.

முதலையின் செருக்கை முடிவுக்குக் கொண்டுவரத் தீர்மானித்த அம்மா தன் வாயைப் பயங்கரமாகத் திறந்தது. நாலடிக்கும் அதிகமாக வாயின்மேல் பகுதி பிளந்து உயர்ந்தது. ஒரு சிறிய குகையே தோன்றியது அங்கே. கூரிய பெரிய பற்களும் சிவப்பு வண்ணமும் சேர்ந்து பயங்கரத்தை அதிகமாக்கியது.

ஆபத்தை உணராத முதலை சீறிப் பாய்ந்து வந்தது. பிளந்த பெரிய வாயால்

இரு பரிசுகள்!





கோகுலம் ஜனவரி '91 இதழில் வெளியான 'அழகி' எழுதிய 'கல்விப் பயன்,' மார்ச் '91 இதழில் வெளியான தேவி நாச்சியப்பனின் 'மூட்டைப் பூச்சி வந்தாச்சு!' ஆகிய சிறுகதைகள், குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் முறையே ஜனவரி, மார்ச் மாதச் சிறுவர்க்கான சிறுகதைகளில் சிறந்ததற்கான பரிசைப் பெற்றுள்ளன.

பரிசு பெற்ற ஆசிரியர்களையும், பரிசு வழங்கிய சங்கத்தையும் பாராட்டுகிறோம்!

முதலையின் முன் பக்கத்தைப் பக்கவாட்டில் கவ்வி அப்படியே வாயை மூடிக் கொண்டது அம்மா. முதலையின் கதை முடிந்தது.

ஏதோ சத்தம் கேட்டது. அம்மாவும் குட்டியும் திரும்பிப் பார்த்தன. கரையோரத்தில் இருந்த மரம் ஒன்றில் காமிராக்களோடு இரண்டு அயல்நாட்டினர், கூடவே ஒரு சுதேசி வழிகாட்டி.

அம்மாவின் முதுகில் இரத்தம் போல் சிவப்புப் புள்ளிகள் வியர்த்திருந்தன.

''பார்த்தீர்களா இரத்த வியர்வையை! இப்படி இரத்தத்தையே வியர்வையாக வியர்க்கும் ஒரே விலங்கு எங்கள் நாட்டு நீர்யானைகள்தான்'' என்று பெருமையோடு விளக்கினான் வழி காட்டி.

''என்ன அநியாயம்! நாம் உணர்ச்சிவசப்பட்டாலும் சரி, நீண்ட நேரம் தரையில் இருந்தாலும் சரி, நமது தோலுக்கடியில் இருந்து எண்ணெய் போன்ற சிவப்பு வண்ணத் திரவம் வடியும். இது நமது உடலை வரள விடாது காப்பாற்றவே என்பதையும் இதற்கும் வியர்வைக்கும் சம்பந்தமே இல்லை என்பதையும் இந்த வழிகாட்டி முட்டாள் உணரவில்லையே!'' என்று குட்டியிடம் பரிதாப்பட்டது அம்மா.

இரண்டும் கரையேறின. மிகப் பெரிய கழுத்தின் பாரத்தைத் தாங்காது இரண்டும் மரத்தின் வேரில் கழுத்தைச் சாய்த்து வைத்து இளைப்பாறியதை அயல் நாட்டினர் படம் எடுத்தனர். வந்த தடத்திலேயே பின்பக்கமாக நகர்ந்து இரண்டும் நீரில் இறங்கி நீந்திச் சென்றதை அவர்கள் பெரு வியப்போடு பார்த்தனர்.

அறிவியல் உண்மைகள்:

★ நீர்யானை தாவரம் உண்ணும் விலங்கு.

★ அதன் முதுகில் சிவப்பாக வியர்ப்பது இரத்தமல்ல.

★ முதலைக்கும் நீர்யானைக்கும் சண்டை நடந்தால் நீர்யானைதான் வெற்றி பெறும்.

★ தரையில் இருக்கும் பொழுது தங்கள் கனத்த கழுத்தை இவை மரவேர்கள், கற்களில் வைத்து இளைப்பாறும்.

★ நீரில் இது பின்பக்கமாகத்தான் நகர்ந்து இறங்கும்.

படம் இங்கே, பாடல் எங்கே?

—போட்டி முடிவு

இந்தப் போட்டிக்கு வந்த பாடல்களைப் பரிசீலனை செய்து தேர்ந்தெடுப்பது மிகப் பெரிய செயலாக இருந்தது. பாடல்கள் எல்லாமே அவ்வளவு அருமையாக இருந்தன. அதோடு மிகவும் புகழ் வாய்ந்த கவிஞர்களும் கூட இதில் கலந்து கொண்டிருந்தார்கள் ஆர்வம் காரணமாக.

பரிசுக்குரிய பாடல்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு குழந்தைக் கவிஞரின் அன்புக்குரிய கவிஞர் ரா. பொன்ராசனிடம் தரப்பட்டது.

முதல் பரிசு ரூ. 20/- பெற்றவர்கள்:

1. இல. முரளீதரன், பத்தாம் நிலை 'ஆ பிரிவு, அரசு மேநிலைப் பள்ளி, கோட்டூர், மலையாண்டிபட்டிணம், பொள்ளாச்சி வட்டம் -642 014.

2. தெ. தமிழ்க்குமரன், 23, மாதா கோவில் தெரு, பனகுடி, நெல்லை மாவட்டம் -642 109.

3. நாமக்கல் ராஜா, 369, அண்ணாசாலை, சைதை, சென்னை - 600 015.

4. எம். பூங்குழலி, த/பெ. வி. ஏ. முருகேசன், 22 ஏ, மேட்டுத் தெரு, உதயேந்திரம், வழி - வாணியம்பாடி, 635 752.

2 ஆவது பரிசாக ரூ. 10/- பரிசு பெறுவோர்:

1. கி. நர்மதா, ஆர். பி. 10, பட்டினப் பாக்கம், சென்னை - 600 028.

2. என். சிவசுந்தரம், 2, ராமசாமி கோவில் தெரு, மண்ணடி. சென்னை - 600 001.

3. எம். அபிராமி, 58, பேட்டை ராமசாமி ராஜா தெரு, இராஜபாளையம் - 626 117.



சிறுவர் சங்கச் செய்திகள்

நீங்கள் உங்கள் ஊரில் நடத்தி வரும் சிறுவர் சங்கங்களைப் பற்றிய விவரங்களை அனுப்பினால், இந்தப் பகுதியில் அவை வெளியிடப்படும் என்று சென்ற இதழ் கோகுலத்தில் அறிவித்திருந்தோம். வந்துள்ள விவரங்களைப் பார்க்கும் போது பிரமிப்பாக உள்ளது! எவ்வளவு சிறுவர் சங்கங்கள்! ஆனால், விவரங்களை அனுப்பும் போது உங்கள் பள்ளி ஆசிரியர் அல்லது பெற்றோருடைய கையொப்பத்துடன் அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டிருந்ததைப் பலர் மறந்து விட்டார்கள். அதனால் அவை வெளியிடப் படவில்லை.

கோகுலம் சிறுவர் சங்கம்
முத்துராமலிங்கபுரம் - 626 105.
காமராசர் மாவட்டம்.

இந்தச் சங்கம் கடந்த ஆண்டு நவம்பர் 14 ஆம் நாளன்று தொடங்கப்பட்டுள்ளது. தலைவர் - மு. பாலசுப்ரமணியன், துணைத் தலைவர் - ச. ஜனார்த்தனன், செயலர் - கி. பாண்டி, பொருளாளர் - ஜி.கே. கண்ணன். தற்பொழுது 15 உறுப்பினர்கள் உள்ளனர்.

குறிக்கோள்கள்: சிறுவர் இலக்கியங்களைப் படிப்பது, கதை கவிதைகளை எழுத ஊக்குவிப்பது, சிறுவர் பத்திரிகைகளைப் படித்து ரசித்து அந்தந்தப் பத்திரிகைகளுக்கு நிறை குறைகளை எழுதியனுப்புவது.


இச்சங்கத்தின் விழா ஒன்று 26.4.91 அன்று மாலை, முத்துராமலிங்கபுரம் மாவட்டக் கிளை நூலகத்தில் நடைபெற்றுள்ளது. டாக்டர் எஸ். திருநாராயணசாமி தலைமை தாங்க, எழுத்தாளர் கொ.மா. கோதண்டம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியுள்ளார். இலக்கிய அன்பர் என். சுப்பராயலு, தலைமை ஆசிரியர் பா. காமாட்சி, ஆசிரியர் என். ராசு, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்த இக்கூட்டத்தில் ஏராளமான தம்பி தங்கைகள் வந்து கலந்து கொண்டு மகிழ்ந்தனர். சங்க உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சியும் முடிவில் நடைபெற்றது.

இராஜா தேசிங்கு (வானொலி) சிறுவர் சங்கம்
98, சிங்கவரம் சாலை, சிறுகடம்பூர்,
செஞ்சி - 604 202.
தெ. ஆ. மாவட்டம்.

1988 ஆம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. தலைவர் - தா. ஷேக் உசேன், துணைத்தலைவர் - வே. காமராஜ், செயலாளர் - பா. அருண்பாரத், செயற்குழு - ஜி.ஆர். ரமேஷ், ஈ. குலசேகரன், ஆர். விஜயகுமார், எம்.எஸ். சங்கர், சி. சௌகத் அலி, டி. பாலு, எஸ்.ஆர். ஞானநந்தவேல், ஆர். ரவி.

குறிக்கோள்கள் - சுற்று வட்டாரத்தில் கல்வியறிவில்லாதவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுத்தரல், இலவசக் கல்வி வகுப்பு, ஏழைக் குழந்தைகளுக்கு உதவி செய்தல், குழந்தை இலக்கிய வளர்ச்சிப் பணிகளைச் செய்தல், புதிதாக மரம் வளர்த்தல், பத்திரிகைகளுக்குக் கதை, கட்டுரை, கவிதை, சிரிப்பு எழுத வைத்தல், சிறுவர் பத்திரிகைகளை, சிறுவர் நிகழ்ச்சிகளை (வானொலி) விமர்சித்தல், கலை நிகழ்ச்சிகளை நடத்துதல்.

இப்பகுதியில் பங்கு கொள்ள விரும்பும் சிறுவர் சங்கங்கள் மே 91 கோகுலம் இதழைக் காணவும். இதற்கென யாரும் கோகுலத்தின் சார்பில் சந்தா வசூல் செய்யக் கூடாது. இதற்கும் கோகுலம் பத்திரிகைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.



ஸ்போர்ட்ஸ்

போலோ விளையாட்டு

போலோ விளையாட்டுக்குத் தனியான வரலாறு உண்டு. நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இது பெர்ஷியாவில் ஆடப்பட்டுள்ளது என்கிறது 'ஸ்போர்பஸ்' களஞ்சியம். உலகப் புகழ் பெற்ற பாரசீகக் கவி பெர்தௌசி தனது காவியங்களில் இந்த ஆட்டத்தின் விவரங்களைத் தருகிறார். பாரசீகத்தில் மகளிர் கூட இந்தப் போலோ போன்ற ஒரு ஆட்டத்தை ஆடியிருக்கிறார்கள் என்கிறார் அவர். குறிப்பாக அரச குடும்பத்துப் பெண்கள் இதில் தனி உற்சாகம் காட்டி வந்துள்ளனர்.

பாரசீகத்திலிருந்து போலோ ஆட்டம் அரேபியாவுக்குப் பரவியது. ஹரூன் அல் ரஷீத் என்ற அரேபிய மன்னரும், அவரது இளவரசரும் இதில் அக்கறை காட்டி ஆடியிருக்கிறார்கள். இளவரசர் பாக்தாத் நாரில் ஒரு போலோ மைதானத்தையே கட்டினார். இராணுவ வீரர்களைப் போருக்குத் தயாராக வைத்திருக்க போலோ ஆட்டம் உதவுகிறது என்று இவர்கள் எண்ணினர்.

சீனாவிலும் இ ந் த விளையாட்டு அரச முக்கியத்துவம் உள்ளதாக ஆடப்பட்டு வந்துள்ளது. 'சுங் சுல்' என்ற சீன மன்னர் தனது இளவரசியின் திரு மணத்தின் போது விருந்தினர்களை மகிழ்விக்க போலோ ஆட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளார். மணமகன் திபெத்திய இளவரசர். அதனால் இவ்வாட்டம் திபெத்துக்கும் பரவியது.

ஒரு குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால் பார்சீகத்திலும், சீனாவிலும் பல காலம் வரை போலோ ஆட குதிரைகளுக்குப் பதிலாகக் கழுதைகளைப் பயன் படுத்தியி ருக்கிறார்கள்!

இந்தியாவில் அக்பர் சக்கரவர்த்தி போலோ ஆடியதாக வரலாறு கூறு

குண்டுமணி

கதையை முடியுங்கள் - போட்டி முடிவு

கோகுலம் வாசகர்கள் சாதாரணமானவர்கள் அல்ல என்பதைக் காட்டி விட்டார்கள்! ஏ, அப்பா! ஆயிரத்து நானூறு பேர்களா கலந்து கொள்வீர்கள்! திணற அடித்து விட்டீர்களே!

பாதிக் கதையைப் படித்திருப்பீர்கள். கூண்டைத் திறந்து தன்னை விடுவிக்கும் பொன்னப்பரைச் சிங்கம் சாப்பிட வருகிறது. இதற்குமேல் கதையை வளர்த்து முடிக்கும்படி கேட்டிருந்தோம்.

இக்கதை மிகவும் பிரபலமான ஒரு கதையின் பாதிதான். சிங்கம் நரி, மாடு, நாய் போன்ற மற்ற விலங்குகளை அழைத்து நியா யம் கேட்கும். எல்லாம், மனிதனின் நன்றி இன்மையைச் சுட்டிக்காட்டு, பொன் னப்பரைச் சிங்கம் சாப்பிடலாம் என்று தீர்ப்பு வழங்கி விடும். அல்லது நரி மட்டும் பேச்சை மாற்றிச் சிங்கத்தைக் கூண்டுக்குள் போகும்படி செய்து, பொன்னப்பரைத் தப்பிக்க வைக்கும். போட்டியில் நாங்கள் எதிர்பார்த்தது இவற்றிலிருந்து மாறுதலான முடிவை. அது இயற்கையாக இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்த்தோம்.

இந்த முடிவைக் கொடுத்த நான்கு பேர்க ளுக்கு முதல் பரிசாக ரூ. 35/- வழங்கப் படுகிறது. இதே முடிவைப் பலர் எழுதியிருந்தாலும் இவர்களுடைய நடை, விளக் கம் எல்லாமே சிறப்பாக இருந்ததால் இவர்களுக்குப் பரிசு அளிக்கப்படுகிறது.

ரூ. 35/- பரிசு பெறுவோர்:

1. கே. யுவராஜ், 20/14/3, பாரதியார் தெரு, என். எஸ். நகர், ஆரணி, - 631 301.

2. மு. அப்துல் ஹாதி, 10 ஆம் வகுப்பு, அ. உ. நி. பள்ளி, புதுகை டி. ஓ., ஏம்பல் அஞ்சல், 622 204.

3. ஆர். மதுமித்தா, எல். 38 பெ, பாரதிதாசன் காலனி, கே. கே. நகர், சென்னை - 600 078.

பரிசு பெற்றவர்களுக்கு வாசகர் சார்பில் வாழ்த்துக்கள்!

றது. அக்பரது போலோ ஆட்டக் குச்சிகள் தங்க - வெள்ளிப் பிடிகளுடன் இருந்தனவாம்! நெருப்புப் பந்துகளைக் கொளுத்தியும் அக்பர் இந்த ஆட்டத்தை ஆடியிருக்கிறார்!

அமெரிக்காவில் போலோ ஆட்டத்தைப் பரப்பிய பெருமை அமெரிக்கரான 'நேம்ஸ் கார்டன் பென்னட்'டைச் சாரும்.

போலோ விளையாட்டில் ஒவ்வொரு குழுவிலும் நான்கு குதிரை ஆட்டக்காரர்கள் இருப்பார்கள். இரண்டு குழுக்கள் போட்டியிடும். குதிரையில் இருந்தபடியே குச்சியால் பந்தைத் தட்டி கோலுக்கு அனுப்ப வேண்டும். குதிரையேற்றத்தில் நல்ல பயிற்சி இருந்தால்தான் இது முடியும். இடது கையால் குதிரையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, வலது கையால் குச்சியைப் பிடித்து ஆடவேண்டும். அதிக கோல்களைப் போடும் குழுவே வெற்றி பெற்றதாகும்.

போலோ மைதானத்தின் அளவு 300 கெஜ நீளம், 160 கெஜ அகலம். குதிரையில் அமர்ந்தபடி ஆட்டத்தை இரு அம்பயர்கள் கவனிப்பார்கள். மைதானத்திற்குள் வேறு யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். ரெபரி கூட மைதானத்திற்கு வெளியே இருந்துதான் தனது முடிவுகளை வழங்குவார். கோல் நீதிபதிகள் இருவர், கோல் பகுதியில் இருந்து, அம்பயர்களுக்கு தகவல் தந்து உதவுவார்கள். நேர அறிவிப்பாளர்கள் மணியடித்து ஆட்டத்தின் தொடக்கத்தையும் முடிவையும் அறிவிப்பார்கள்.

ஒவ்வொரு போலோ பந்தயமும் எட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஏழு நிமிஷமாகக் கணக்கிடப்பட்டு மொத்தம் ஐம்பத்தாறு நிமிடங்கள் பந்தயம் நடைபெறும்.

இந்தியாவில் 1862 ஆம் ஆண்டு பஞ்சாபில் இந்த நவீன முறை போலோ ஆட்டம் முதன் முதலாக ஆடப்பட்டது. இந்தியா போலோ ஆட்டத்தில் ஒரு சாதனை நிகழ்த்தியுள்ளது. யானை மிதிருந்து போலோ ஆடும் பந்தயம் உலகத்தில் ஒரே ஓர் முறைதான் இதுவரை நடைபெற்றுள்ளது. இதை நிகழ்த்தியது இந்தியாதான். நிகழ்த்திய இடம் ஜெய்ப்பூர்.

கேளுங்கள் சொல்லப்படும்

—சேறநம்பி

★ கு. கன்னியப்பன், திருப்பூர்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குறிஞ்சிப்பூ மலர்வது போல் வேறு ஏதாவது பூ மலர்கிறதா?

மலர்கிறது. ஃபிலோஸ்டேச்சஸ் பேம்பூசாய்ட்ஸ் என்ற மூங்கில் இனம் நூற்றி இருபது ஆண்டுகளுக்கு ஒரு முறைதான்; அதுவும் உலகம் முழுவதும் ஒரே பருவத்தில் பூக்கிறது. இது கடைசியாகப் பூத்தது 1960 ஆம் ஆண்டின் இறுதியில். அடுத்த முறை இது 2080 ஆம் ஆண்டில்தான் பூக்கும்!

★ க. எத்திராசன், மன்னார்குடி.

பச்சைகுத்திக்கொள்வது அறிவியலின் அடிப்படையில் நல்லது தானா? இதை எதைக் கொண்டு குத்துகிறார்கள்?

இதுபற்றி மாறுபட்ட கருத்துகள் உள் ளன. ஆனால், உடல் நலத்திற்கு நல்லது என்பது இதுவரை நிரூபிக்கப்பட வில்லை. பச்சை இலையின் சாறு, கந்தகப் பொடி, மூலிகை, போன்று பல வகைப்பட்ட பொருள்களைக் கொண்டு பச்சை குத்துகிறார்கள்.

★ சுவா பபினா, உதகை – 4.

துக்கத்தை வெளியிட கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடும் முறை, உலக நாடுகள் எல்லாவற்றிலும் பின்பற்றப்படுகிறதா?

இல்லை. சவுதி அரேபியாவில் இது பின்பற்றப்படுவதில்லை.

★ வ. பரமசிவன், தோப்பூர்.

உலகப்புகழ் பெற்ற 'ஈசாப்'பின் முழுப்பெயர் என்ன? இவர் எப்படி இறந்தார்?

ஈசாப் என்பது காரணப் பெயர். முழுப்பெயர் தெரியவில்லை. இவரது பெருமைகளை அறியாத மன்னர், இவ ரை மலை உச்சியில் இருந்து உருட் டித் தள்ளிவிடும்படி தண்டனை கொடுத்து உலக மக்களின் வெறுப்புக்கு இலக்கா னார்.

★ மு. சுந்தரமூர்த்தி, இராஜகுமார், திருவண்ணாமலை.

வெள்ளைக் காகங்கள் உண்மையா க வே இருக்கின்றனவா?

இல்லை. ஆனால் வெள்ளைப் புலி, வெள்ளை யானை, வெள்ளை மயில் இருக்கின்றன. வெள்ளை காண்டாமிரு கங்கள் கூட இருந்திருக்கின்றன.

★ வ. தீபாராணி, ஈரோடு.

கவி ரவீந்தரநாத் தாகூர் வேறு ஏதாவது புனை பெயரில் கவிதை கதைகள் எழுதியுள்ளாரா?

பானுசிம்மன் என்பது தாகூரின் தொடக்க காலப் புனை பெயர். இப் பெயரில் பல கவிதைகளை எழுதி யுள்ளார்.

★ பு. மலர்க்கொடி, பழனி.

அரக்கு எப்படி எடுக்கிறார்கள்?

அரக்கு என்பது அரக்குப் பூச்சி தயாரிக்கும் ஒரு பிசின். இந்தப் பூச்சி யை மைக்ரோஸ்கோப் என்ற நுண் பெருக்காடி மூலமே காண முடியும். அவ்வளவு சிறிய உருவம். இது வெளிவிடும் கட்டித் திரவமே அரக்காகிறது. முத்திரை இட மட்டு மின்றி, மெருகேற்ற, விளையாட்டுப் பொருள்களைச் செய்ய, சாயமிட, மருந்து தயாரிக்க என்று பலவகைக ளிலும் இது பயன்படுகிறது. அரக்கின் பயனை நமது முன்னோர்கள் நன்கு அறிந்திருந்தனர். வேதங்களில் இதைப் பற்றி ஏராளமான குறிப் புகள் உள்ளன. சமஸ்கிருதத்தில் இதற்கு 'லக்கா' என்று பெயர். பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் வசித்ததையும், துரியோத னன் தீயிட முயன்றதையும் மகா பாரதத்தில் படித்திருப்பீர்களே?

★ வெ. மணிக்கொடி, திண்டுக்கல்.

காகங்கள் இல்லாத நாடு ஏதாவது இருக்கிறதா?

காகங்களே இல்லாத ஒரே நாடு

நியூசிலாந்து மட்டுமே.

★ கு. சம்பத், விழுப்புரம்.

நோபல் பரிசு பெற்றவர்களில் மிகக் குறைந்த வயதை உடையவர் யார்?

இங்கிலாந்தைச் சேர்ந்த லாரென்ஸ் பிராக். பரிசு வாங்கப்பட்டபோது இவருக்கு வயது 25. இதுவரை இந்தச் சாதனை முறியடிக்கப்படவில்லை.

★ ச. காதர் பாட்சா, மசூலிப்பட்டினம்.

வெற்றிலையின் தாயகம் எது? இந்தியாதானே?

இல்லை. பாரதத்தின் பண்டைய நூல்களில் 'தாம்பூலம்' என்ற பெயரில் இது குறிக்கப் பட்டாலும், இதன் தாயகம் மலேயாதான் என்கிறது என்சைக்ளோபிடியா.

★ க. பொன்னுவேல், திருச்சி - 2.

பெருங்காயம் எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?

பெருங்காயம் ஒரு தாவரப் பொருள். கால்பேனம், சும்புல் என்ற தாவரங்கள் வெளியிடும் பால் போன்ற திரவப் பொருளிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இந்தச் செடிக்கு வேர், பூ எல்லாம் உண்டு.

★ மு. முத்துராமன், பொள்ளாச்சி - 1.

தமிழில் வெளிவந்த முதல் அகராதி பெஸ்கி பாதிரியார் வெளியிட்ட சதுரக ராதிதானே?

இல்லை. 1679 ஆம் ஆண்டில் தமிழ் - போர்ச்சுக்கீசிய அகராதி ஒன்றை பாதிரியார் புரோயன்கா வெளியிட்டுள்ளார். இந்திய மொழிகளில் வெளியிட்ட முதல் அகராதி என்ற பெருமையும் இதற்குத்தான்.

★ ல. செந்தாமரை, மாயூரம் - 3.

'கரப்பு' என்று கரப்பான் பூச்சியை அழைக்கிறோமே, இது எதிலிருந்து பிறந்த பெயர்?

ஆங்கிலத்தில் கரப்பான் பூச்சியை காக்ரோச் என்று குறிப்பிடுகிறார்கள். இது 'ஸ்பானிஷ்' சொல்லான காக்ராச்சிலிருந்து பிறந்தது. காக்ரோச்சிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டதே கரப்பான் பூச்சி.

★ பூ. சுந்தரமூர்த்தி, நாமக்கல் - 2.

சூப்பர்மேனை உருவாக்கியவர் யார்?

ஒருவர் அல்ல, இருவர். ஜெர்ரி சீகல், ஜோ ஷஸ்டர் என்ற இரு கார்டூனிஸ்ட்டுகள். பஞ்சத்திற்கு விற்ற மாதிரி மிகக் குறைந்த பணத்திற்கு இந்த 'சூப்பர்மேனை' விற்று ஏமாந்தார்கள். வாங்கியவர் குபேரனானார்.

★ கி. தெய்வநாயகி, நாமக்கல்.

அஞ்சல் அட்டையை யார் கண்டு பிடித்தார்கள்? இது இந்தியாவில் எப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டது?

கண்டு பிடித்தவர் ஹேர்மேன் என்ற ஆஸ்திரியாக்காரர். 7.2.1869 இல் இது ஆஸ்திரியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியாவில் 1879 இல் கொண்டுவரப் பட்டது.

★ து. வடிவேல் அழகன், தூத்துக்குடி - 4..

சென்னை நகரின் எரிந்து போன மூர்மார்க்கெட்டை யார் முதலில் அமைத்தார்கள்?

இது 1900 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அமைத்தவர் சர் ஜார்ஜ் மூர் என்பவர். இவர் அன்றைய சென்னை முனிசிபாலிடியின் (மாநகராட்சி அல்ல) தலைவராக இருந்தவர். இவர் எடுத்த முயற்சிகள் காரணமாக, அன்று இருந்த ஆங்கில அரசாங்கம் (கவர்னர்) இந்த இடத்தை முனிசிபாலிட்டிக்கு ஒதுக்கியது.

★ ப. சின்னராஜா, சிதம்பரம்.

உலகின் முதல் தொழிற்சங்கம் தோன்றியது எந்த நாட்டில்? சைனா விலா இல்லை சோவியத் ரஷ்யாவிலா?

இரண்டிலும் இல்லை. அமெரிக்காவில்தான்! பிலடெல்பியா மெக்கானிக்கல் தொழிற் சங்கம் தான் உலகின் முதல் தொழிற்சங்கம். அதிசயமாக இருக்கிறது இல்லையா?

★ க. ஜமால் முகமது, அரிசிக்கரை.

குத்துச் சண்டைக்காரர்கள் கையுறை போட்டுக் கொள்கிறார்களே. இது எப்பொழுது தோன்றியது?

கிரேக்க, ரோமாபுரி மக்கள் காலத்திலேயே இது தோன்றி விட்டது. 1968 ஆண்டு ஒலிம்பிக்கில் இந்தக் கையுறை சீரமைக்கப்பட்டது.

★ கு. வஜ்ரவேலு, கரூர் மற்றும் பலர்.

மகாபாரதத்துச் சகுனி ஆடிய ஆட்ட

மும், கிராண்ட் மாஸ்டர் ஆனந்த் ஆடிவரும் சதுரங்கமும் ஒன்றுதானா?

இல்லை. சகுனி ஆடிய ஆட்டம் சொக்கட்டான். இதை ஆட பகடை அல்லது தாயக்கட்டை அல்லது சோழிகள் தேவை. இதை ஆடி, இது போடும் எண்களின் அடிப்படையில் காய்கள் கட்டங்களில் நகர்த்தப்படும். இந்த ஆட்டத்தின் நோக்கம், எதிரி காய்களை வெட்டி, தனது காய்களை சுற்றி வந்து எடுத்து விடுவது.

சொக்கட்டான் ஆட்டமே, இன்றய சதுரங்கத்தின்அடிப்படை. சதுரங்கத்தை ஆட சொக்கட்டான் என்ற பகடை தேவையில்லை. இந்த ஆட்டத்தின் நோக்கம் எதிரி ராஜாவை இயங்க வழியின்றிக் கட்டி விடுவது.

இன்னும் கூறப் போனால் சொக்கட்டான் ஆட்டம், கிராமங்களில் இன்றும் ஆடப்படும் ஆடுபுலி ஆட்டம் ஆகிய இந்த இரண்டின் மாற்றப்பட்ட புது வடிவம்தான் சதுரங்கம் என்கிறார்கள்.

★ உ. மணிகண்டன், விருத்தாசலம்.

உலக மலைத் தொடர்களில் மிகவும் பழமையானது இமய மலைத் தொடர் தானே?


இல்லை. இந்தியாவின் வட மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஆரவல்லி மலைத் தொடரே உலகத்தின் பழமையான மலைத்தொடர். இதன் வயது 700 மிலியன் ஆண்டுகள்! இமய மலை என்ன, உலகத்தில் உள்ள மற்ற மலைகள் எல்லாமே இதன் தம்பிகள்தான். ஆனால், இது இப்பொழுது புவிஇயல் மாற்றங்களால் சுருங்கி விட்டது.

★ வ. பிச்சம்மாள், அரியலூர்.

ஆமையை வாகனமாகக் கொண்ட தெய்வங்கள் ஏதாவது இந்து மதத்தில் உண்டா?

உண்டு. யமுனை நதி, தெய்வப் பெண்ணாக வணங்கப்படுகிறாள் வட இந்தியப் பகுதிகளில். இவள் யமனுடைய தங்கை. இந்த யமுனைப் பெண்ணுக்கு வாகனம் ஆமைதான்.


பெருமைக்குரிய வாசகியே! சிறிது எளிதான கேள்வியைக் கேட்கலாகாதா? இதற்கு பதிலளிக்க எங்கெல்லாம் அலைந்தேன் தெரியுமா ?



''உனக்கு அப்பா பிடிக்குமா...? அம்மா பிடிக்குமா? சொன்னால் அங்கின் லட்டு தருவேன்!''

''எனக்கு லட்டுதான் பிடிக்கும்!''


— அ. நவ்சாத், மொரப்பூர்.



''சீப்புக்கும், வாழைப்பழத் தோலுக்கும் ஓர் ஒற்றுமை. அது என்னன்னு சொல்லு, பார்ப்போம்!''

''சீப்பு தலை வாரும்; வாழைப்பழத் தோல் காலை வாரும்!''

ஏ. ஹரிகிருஷ்ணன்,
எலவனாசூர்.



'''நான்சென்ஸ்'க்கு எதிர்ப்பதம் சொல்லு...!''

'''நீ.சென்ஸ்' சார்...!''

— அ. நவ்சாத், மொரப்பூர்.

பிடித்ததைத் தடுத்தால்...?

—ஐந்து பேர் பேட்டி—


மிகவும் ஆர்வமாக ஒரு வேலை செய்து கொண்டிருக்கிறீர்கள். அப்போது அம்மாவோ, அப்பாவோ வந்து அதை நிறுத்தச் சொல்லியோ அல்லது வேறு ஏதாவது வேலை செய்யச் சொல்லியோ அல்லது உனக்குப் பிடிக்காததைச் செய்யச் சொல்லியோ கூப்பிட்டால் எப்படி இருக்கும்? சில சிறுவர் சிறுமிகளின் அனுபவங்களைக் கேட்போமா?

ஸ்ரீவத்ஸன்: எனக்கு டிராயிங் போடறதுன்னா ரொம்பப் பிடிக்கும். வேறே படங்களைப் பார்த்துப் போட்டுப் போட்டுப் பழகின நான், கற்பனையாகவும் படம் போட ஆரம்பித்தேன். படிப்பைக் கூடத் தள்ளி வெச்சுட்டு ஓவியத்திலே ஆழ்ந்துடுவேன். பரீட்சை சமயத்துல கூட என் கவனம் டிராயிங்கிலதான் அதிகமாப் போகும். அப்படித்தான் ஒரு சமயம் பரீட்சை நேரத்துல டிராயிங் போட்டுக்கிட்டிருந்தேன். அம்மா வந்தாங்க. ''பாடத்தைப் படிடா. டிராயிங் எல்லாம் லீவிலே போட்டுக்கலாம்னு'' கோவமா சொன்னாங்க.எனக்குக் கோபமா வந்தது. எங்க காலனில நடந்த ஓவியப் போட்டியில கலந்துக்கிட்டு பரிசு கூட வாங்கியிருக்கேன்; என் ஆர்வத்தை இப்படித் தடுக்கறாங்களேன்னு எரிச்சலா வந்தது. என் மனசைப் புரிஞ்சுக்கிட்டோ என்னவோ, அப்பா என்கிட்டே வந்து, ''இதோ பாரு, நீ, பின்னால தொழில்ரீதியான ஓவியனா வரணும்னு ஆசைப்படறியா?'' அப்படீன்னு கேட்டார். ''இல்லே''ன்'னேன். ''உனக்கு ஜுவாலஜி இன்டிரஸ்ட் இருக்கு; நிறைய மார்க் வாங்கறே. உன் ஓவியத் திறமையை அந்தப் பாட சம்பந்தமானதாவே வளர்த்துக்கோ. ஓவியத்தை வெறும் பொழுதுபோக்காத்தான் நீ பாவிக்கறேன்னா, அதை உன்னோட ஓய்வு நேரத்திலே தாராளமா வளர்த்துக்கோ. இல்லே, ஓவியம்தான் உனக்குத் தொழிலா இருக்கணும்னு ஆசைப்பட்டியானா, அந்த வழியிலேயே உன்னை நான் ஆளாக்கி விடறேன்; ஓவியக் கல்லூரியிலே சேர்க்கறேன்; என்ன சொல்றே?''ன்னு கேட்டார். நிஜமாவே நான் ஓவியத்தை ஒரு ஹாபியாத்தான் வெச்சுக்க ஆசைப்படறேன். அதனால அவர் சொல்றதிலேயும், என் அம்மா கோவப்பட்டதிலேயும் நியாயம் இருக்குன்னு புரிஞ்சுக்கிட்டேன். அதனால உடனே, ஓவியத்துகிட்ட 'சாரி' சொல்லிட்டு அதை ஒதுக்கி வெச்சுட்டு பாடப் புத்தகத்தை எடுத்துக்கிட்டேன். இப்ப பரீட்சை முடிஞ்சிடுச்சு. பேப்பர் பேப்பரா ஓவியமா வரைஞ்சு தள்ளறேன். அப்பா, பேப்பர், கலர் பென்சில், பெயிண்ட் எல்லாம் வாங்கித் தர்றார். எல்லாருக்கும் சந்தோஷம்!

என். கார்த்திக்: இப்பத்தான் சைக்கிள் விடக் கத்துக்கிட்டிருக்கேன். வெகேஷன் வேற விட்டாச்சு. என் அண்ணன் வீட்ல ஒரு குட்டி சைக்கிள் இருக்கு. விடுவேனா? தினமும் சைக்கிள்ல ரவுண்டுதான். அம்மா



என். கார்த்திக்



ஸ்ரீவத்ஸன்

வுக்குதான் பயம். இப்பத்தான் புதுசா சைக்கிள் ஓட்டக் கத்துக்கிட்டேன் என்பதால் எங்கயாவது விழுந்து வைக்கப் போறேன்னு சப்தம் போடுவாங்க. எனக்கு வெறுப்பா இருக்கும். காதிலே போட்டுக்கவே மாட்டேன். ஆனா அம்மா அடிக்கடி இப்படி எச்சரிப்பதற்கு என்ன காரணம்னு யோசிச்சுப் பார்த்தேன். புதுசா கத்துக்கிட்ட ஆர்வத்திலே சில பையன்கள் கண்மண் தெரியாம ஓட்டி மிச்ச வண்டியையெல்லாம் திணற அடிப்பதைப் பார்த்திருப்பாங்க போலிருக்கு. அதான் அப்படிச் சொல்றாங்க; கண்டிப்பா இருக்காங்க. அவங்க மனசை ஏன் நோக அடிக்கணும்? நடுநடுவே அவங்க பேச்சைக் கேட்கறா மாதிரி, ''இல்லேம்மா, இனிமே சைக்கிளை ஓட்டலேம்மா''ன்னு சொல்லிட்டு நல்ல பிள்ளையா சைலன்டா இருந்திடுவேன். ஆனா அம்மா அசந்திருக்கும் போது நைஸா சைக்கிளை எடுத்துக்கிட்டு ஓடிடுவேன். ஆனா அப்படி அம்மாவோட கண்டிப்பையும் மீறி நான் சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போகும் போது, மனசுக்குள்ள ஜாக்கிரதையா வண்டி ஓட்டணும், அம்மாவோட பயத்தைப் போக்கணும்னு நினைச்சுக்கிட்டு ரொம்பவும் எச்சரிக்கையோட விடுவேன். இப்பக் கூட அம்மா, 'டேய் சைக்கிளை எடுக்காதே' அப்படீன்னு கத்துவாங்க. நல்ல பிள்ளையா 'சரி'ம்பேன். அவங்க அசந்து இருக்காங்களா, எடு சைக்கிளை, விடு சவாரி... அவ்வளவுதான்! அப்பா ஒண்ணும் கண்டுக்க மாட்டார்! அவரும் என்னை மாதிரி இருந்தவர்தானே?

எம். ஸ்ரீதேவி: ஒரு கதை புத்தகம் படிச்சுக்கிட்டிருந்தேன். ரொம்பவும் சுவாரஸ்யமா இருந்தது. ''டிரஸ் பண்ணிக்க; கல்யாணத்துக்குப் போகலாம்''னு அம்மா கூப்பிட்டாங்க. அப்பா எப்பவோ ரெடி! நான் வர முடியாதுன்னிட்டேன். ''கல்யாண வீட்ல வந்து மீதியைப் படிச்சுக்கலாம், வா''ன்னு அம்மா வற்புறுத்திக் கூப்பிட்டாங்க. நான் முடியவே முடியாதுன்னிட்டேன். கடைசியில நான்தான் ஜெயிச்சேன். கல்யாணத்துக்கு நான் போகலே. புத்தகத்தை படிச்சு முடிச்சுட்டுத்தான் மறுவேலை பார்த்தேன்! இதே மாதிரி பள்ளிக்கூடம் இருக்கற நாள்லகூடப் பாடப் புத்தகம் படிச்சுக்கிட்டிருக்கும் போதும், இளம்பச் சொல்லித் தொந்திரவு பண்ணுவாங்க. எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. எனக்குப் படிக்கறதிலே ஆர்வம்



எம். சிவகுமார்

ஜாஸ்தி. வகுப்பிலே ஃபர்ஸ்ட் ராங்க் வாங்கறவ. பரிசு, சர்டிபிகேட் எல்லாம் வச்சிருக்கேன். அதனாலே பாடம் படிக்கும் போது தொந்தரவு பண்ணினா எனக்கு ரொம்பக் கோவம் வரும். அதே பழக்கம். கதைப் புத்தகம் படிக்கறபோதும் வர்றது. மேலே சொன்ன சம்பவத்துக்குப் பிறகு நானே யோசிச்சுப் பார்த்தேன். அம்மாவும் அப்பாவும் ஆசையா கூப்டாங்க. கல்யாண வீட்ல அடிக்கடி பார்க்க முடியாத உறவுக்காரங்களைச் சந்திக்கலாம். அவங்க, ''எங்கே உங்க பொண்ணு வரலியா?''ன்னு கேட்டாங்கன்னா, ''இல்லே, அவ கதைப் புத்தகம் படிச்சுக்கிட்டிருக்கா. அதனால வர மாட்டேன்னுட்டான்னா பதில் சொல்வாங்க? வேறே ஏதாவது சாக்கு போக்கு பொய் சொல்வாங்க. அனாவசியமா அவங்களை நாம்ப தர்மசங்கடத்துக்குள்ளாக்கணுமான்னு யோசிக்க ஆரம்பிச்சேன். இப்பல்லாம் பாடம் படிக்கும் போது மட்டும், அந்த மாதிரி வரச் சொன்னா, மறுத்துடறேன். கதைப் புத்தகம்தானா, பரவாயில்லேன்னு படிச்சுக்கிட்டிருந்த பக்க மூலையை மடிச்சு வெச்சுட்டு அரை மனசோட புறப்பட்டுடறேன்!

இ.மீனாபாரதி: துணிக்கடைக்குப் போயிருந்தோம். ரெடிமேட் துணிகள். கடைக்காரர் விதவிதமா டிரஸ்செல்லாம் எடுத்துப் போட்டார். ஒன்னைப் பார்க்க இன்னொன்னு பிரமாதமா இருந்தது. எதை எடுத்துக்கறதுன்னு ஒவ்வொன்னா பார்த்துக்கிட்டே வந்தேன். நான் எந்தச் சட்டையை எடுத்துக்கப் போறேன்கறதை அம்மா-அப்பாஸஸ்பென்ஸோட பார்த்துக்கிட்டிருந்தாங்க. நான் சட்டுனு ஒரு டிரஸ்ஸைக் கையில எடுத்தேன். அம்மாகிட்டே, ''இதை எடுத்துக்கறேம்மா''ன்னேன். அப்பா அதை எடுத்துப் பார்த்தார். அவர் பார்வை டிரஸ்ஸிலே ஒட்டியிருந்த விலை ஸ்டிக்கர் மேல நின்றது! அம்மாடியோவ்!'ங்கறா மாதிரி புருவம் உயர்த்தினார். பக்கத்துல இருந்த அம்மாவிடம் விலை ஸ்டிக்கரைக் காமிச்சார். அம்மாவும் அதை எதிர்பார்க்கலே போலிருக்கு. தர்மசங்கடமா அப்பாவைப் பார்த்தாங்க. எனக்குப் புரிஞ்சு போச்சு. விலை அதிகம்னு ரெண்டு பேரும் ஃபீல் பண்றாங்க; அவங்களால அந்த விலையைக் குடுத்து டிரஸ் வாங்க முடியாது! நான் ஏற்கெனவே ஒவ்வொரு டிரஸ்ஸா எடுத்து எடுத்துப் பார்த்து, வைத்த போது அப்பா அதனோட விலையை மட்டும் பார்த்துக்கிட்டே வந்தது கவனத்துக்கு வந்தது. வீட்டில இருக்கிற பொருளாதார நிலை எனக்குப் புரிஞ்சிருந்தாலும் இந்த விலை உசந்த டிரஸ்ஸை வாங்கித் தர முடியாம அவங்களைத் தடுக்குதுன்னு புரிஞ்சுது. ஆனாலும், ''இதையே எடுத்துக்கறேம்ப்பா'' அப்படீன்னேன். அவ்வளவு அழகா இருந்தது அந்த டிரஸ்! ''வந்து.... இது இப்ப உனக்கு ரொம்ப கரெக்டா இருக்கும்மா. ஆனா நாளாக நாளாக சின்னதாயிடும். வேஸ்ட்தானே! அதுக்கு இவ்ளோ செலவு பண்ணி வாங்கணுமா? யோசிச்சுப் பார். கொஞ்சம் விலை கம்மியா வாங்கினோம்னா சின்னதா போனாலும் பெரிய நஷ்டமில்லேன்னு ஆறுதலா இருக்கும். என்ன சொல்றே?'' அப்படீன்னு அப்பா கேட்டார். என்னால பதில் பேச முடியலே. அந்த டிரஸ் கிடைக்கலியேன்னு வருத்தம்தான். கேட்டதை வாங்கித் தர மாட்டேங்கறாங்களேன்னு கோவம்தான். அந்த டிரஸ்ஸைப் போட்டுக்கிட்டா ஃப்ரண்ட்ஸ்களோட பாராட்டும் பிரமிப்பும் கிடைக்கும்தான். ஆனா, வீட்டு நிலைமை? ரொம்பவும் கஷ்டப்பட்டு மனசை அடக்கிக்கிட்டேன். 'வசதி இருந்தா அம்மாவும் அப்பாவும் இதை விட விலை உசந்த டிரஸ் வாங்கித் தர மாட்டாங்களா என்ன?' அப்படீன்னு மனதை சமாதானம் பண்ணிக்கிட்டேன். அப்பாவும் அம்மாவும் அவங்க பட்ஜெட்டுக்கு ஏத்ததா வேறு டிரஸ்ஸை வாங்கித் தந்த போது 'மறுப்பு சொல்லாம வாங்கிக்கிட்டேன். இதுவும் அழகாத்தான், நல்லாத்தான் இருக்கு. ஃப்ரெண்ட்ஸெல்லாம் பாராட்டத்தான் செய்யறாங்க. எனக்கும் மகிழ்ச்சிதான். எங்க அப்பா தேர்ந்தெடுத்து வாங்கித் தந்ததாச்சே!

எம். சிவகுமார்: தோட்ட வேலை செய்யறதுன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். பள்ளிக்கூட நாள்லேயே தினமும் கார்த்தால அரைமணியாவது தோட்டத்திலேயே இருப்பேன். செடிக்குத் தண்ணி ஊத்தறது, ரொம்ப நீளமா வளர்ந்திருக்கற செடிக்கிளையை ஒடிச்சுப் பொருத்தமான அளவிலே வளர்க்கறது, நிலத்தைக் கொத்தி விதையோ, இளங் கன்றையோ நடறது அப்படீன்னு முழு மூச்சா அதுலயே மூழ்கிடுவேன். அப்பப் பார்த்துத்தான் கடைக்குப் போ லாண்டிரிக்குப் போன்னு அம்மா கூப்பிடுவாங்க. எரிச்சலா வரும்.



ஸ்ரீதேவி



தி. மீனாபாரதி

''என்னைப் பாதியிலே விட்டுட்டுப் போகாதே''ன்னு செடிங்களெல்லாம் என்னைப் பார்த்துக் கெஞ்சற மாதிரித் தோணும்! அப்படித்தான் ஒருதரம் சாயந்திரம் எங்க வீட்டு செம்பருத்திச் செடியை கவனிச்சுக்கிட்டிருந்தேன். அதனோட இலை அழுக்கையெல்லாம் தண்ணீர் ஊத்தித் துடைச்சு பளபளப்பாக்கிக்கிட்டிருந்தேன். அப்பப் பார்த்து திடீர்னு 'விருந்தாளிங்க' வந்திட்டாங்க. அவங்களுக்கு திடீர் டிபன் பண்ணிப் போடறதுக்காக சாமான் வாங்கக் கடைக்குப் போகணும்னு அம்மா என்னைக் கூப்பிட்டாங்க. எனக்குக் கோபமான கோபம்! வந்திருந்த திடீர் விருந்தாளிங்க மேலதான்! இதை முடிச்சுட்டுப் போறேம்மா'' அப்படீன்னேன். ''இல்லேடா சிவா இவங்கள்ளாம் உடனே புறப்பட்டுடுவாங்க. அதுக்குள்ள உடனே போய் ஏதாவது கூல்டிரிங்ஸ் வாங்கிட்டு வந்திடு'' அப்படீன்னு அம்மா என்னை விரட்டினாங்க. வந்தவங்க ஏதோ சாதாரணமான விஷயமாத்தான் வந்திருக்காங்க. அம்மா என்னைக் கடைக்குப் போகச் சொன்ன போது அவங்க குறுக்கிட்டு 'அதெல்லாம் வேண்டாங்க' அப்படீன்னுதான் சொன்னாங்க. ஆனாலும் அம்மா விடலே. அவங்களை வற்புறுத்தி உட்கார வெச்சாங்க; என்னையும் கடைக்கு அனுப்பிச்சாங்க. வெறுப்போடதான் பாதியில கிளம்பினேன். அப்புறமா கடைக்குப் போற வழியிலே அமைதியா யோசிச்சுப் பார்த்தேன். அம்மா அவங்களை இப்படி வற்புறுத்தறாங்கன்னா அதுக்குக் காரணம் இல்லாம இருக்காது. 'இவ்ளோ தூரம் வந்தோம், ஒரு வாய் காப்பி குடுத்தாங்களா, பார்த்தியா' அப்படீன்னு வேற எங்கயாவது அவங்க பின்னாடி எதுவும் பேசிடக் கூடாதேன்னு நினைச்சிருப்பாங்க. அந்தச் சமயம் பார்த்து. வீட்ல பால் வராததனால் என்னைக் கடைக்கு அனுப்பிச்சிருக்காங்க. அம்மா மட்டும் பாவம் என்ன பண்ணுவாங்கன்னு எனக்கு இரக்கமே வந்தது. தோட்ட வேலையை நடுவிலே ஒரு பத்து நிமிஷம் விட்டுட்டு அப்புறமா தொடர்ந்துக்கறதிலே ஒண்ணும் பெரிசா நஷ்டமாயிடாது. ஆனா, நான் கடைக்குப் போய் வாங்கிட்டு வந்தா, வந்தவங்களுக்கும் சந்தோஷம்; அம்மாவுக்கும் சந்தோஷம்! நான் கூல்டிரிங்ஸ் வாங்கிக்கிட்டுத் திரும்பிய போது செம்பருத்திச் செடி கரெக்டான காரியம் செஞ்சேடா சிவான்னு சொல்லி சிரிச்சு ஆடின மாதிரி இருந்தது!


பட்ங்கள், பேட்டி: பிரபு சங்கர்

மாவீரன் அலெக்ஸாண்டரின் வீரம்

★ மாவீரன் அலெக்சாண்டர் தன்னைப் பார்க்க வந்த ஒரு விருந்தினரை, தமது அரண்மனைத் தோட்டத்துக்கு அழைத்துப் போனான். அங்கே வீரர்களின் உருவச் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு சிலையிலுள்ள வீரர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை விருந்தினருக்குச் சொன்னான் அலெக்சாண்டர்.

கடைசியில் விருந்தினர் அலெக்சாண்டரைப் பார்த்து, ''இத்தனை வீரர்களின் சிலைகள் இருக்கும் போது உங்களுடைய சிலை மட்டும் அங்கு இல்லையே, ஏன்?'' என்று கேட்டார். ''இங்கு எனது சிலையைப் பார்த்து, இது யாருடைய சிலை என்று வருபவர்கள் கேட் பதைவிட, மாவீரன் அலெக்சாண்ட ருடைய சிலை ஏன் இங்கு இல்லை என்று கேட்பதையே நான் விரும்புகிறேன்'' என்று பதில் சொன்னான் அலெக்சாண்டர்.

-- எஸ் நாகராஜன், தேனி.



சார் தபால்

பலநூறு நன்றி!

★ கேளுங்கள் சொல்லப்படும் கேள்வி பதில்கள் ஆரம்பமே அருமையாக உள்ளது. எங்களுக்கு தெரியாத பல செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது.
ஊத்தங்கரை, பி. கோவிந்தசாமி.

★ டாக்டர் பூவண்ணனின் ''இதோ ஓர் ஹீரோ'' கதையில், அந்த சிறுவன் டாக்டர் பூவண்ணனின் அடுத்த கதையின் ஹீரோ மட்டும் அல்ல! நம்மிடையே பண்பாளர்களாக விளங்கும் பல ''வைரங்களில்'' ஒன்று!! நன்கு பட்டை தீட்டப்பட வேண்டும்.
கூறைநாடு, எஸ். சௌந்தரராஜன்.

★ மு.வ. வின் ஆலும் தென்னையும் என்ற அருமையானதோர் கதையை எமக்குப் படிக்க வாய்ப்பளித்த தங்களுக்குப் பலநூறு நன்றிகள். கர்வம் கூடாது என்பதை எவ்வளவு அழகாக மரங்களைக் கொண்டே காட்டியிருக்கிறார்?
மகிழஞ்சேரி, கே. ரவிச்சந்திரன்.

★ சுதந்திர தேவி சிலை குறித்த சுவையான தகவலை அளித்தமைக்கும் பாராட்டுக்கள்.
விசலூர், க. கோகுலகிருஷ்ணன்.

★ சேர நம்பியின் பதில் சூப்பர்.
செஞ்சி - 2, ஜி.டி.எஸ். உசேன்.

★ 'இளம் சாதனையாளர் சசாங்கனின் அட்டைப்படமும், அவரைப்பற்றிய கட்டுரையும் அருமை.
காவேரிப்பட்டணம், கே. சோமசேகர்.

★ ''அம்மா கேட்ட உறுதிமொழி'' அருமையான கதை. ஒவ்வொரு வரியும் உள்ளத்தைத் தொட்டது. இது வரை வெளிவராத வித்தியாசமான கருவைக் கொண்ட கதையாகத் திகழ்ந்தது. ''பெயரை மாற்றிக் கறேன்'' சிறுகதை இன்றைய பள்ளிகளில் நடக்கும் உண்மை நிலைமைகளை அழகாகக் காட்டியது.
தக்கோலம், பி.அ. முஸ்தபா.

★ நீயாவா வரைஞ்சே! கதை படு சூப்பர். ஆசிரியர்களை ஏமாற்றும் மாணவிகளுக்கு அறிவு புகட்டும் நல்ல கதை.
பள்ளிகொண்டா, என். பரிமளா.

★ 'செல்வத்தின் பயன்' கதை பிரமாதம். செல்வம் பயன் படும் விதத்தை விளக்கமாக அளித்தீர்கள்.
ஆசனாம்பட்டு, என்.டி. வசந்தி.

★ ஒட்டகச் சிவிங்கிக்கு குரல் உண்டா. கட்டுரை அருமை. நேரிலே கண்ட உணர்வு. பாராட்டுக்கள்.
திருமுட்டம், வ. மீனவல்லபராஜா.

★ கருமியின் கஞ்சி கதைபோன்ற கருத்துள்ள கதைகளுக்கு அதிக பக்கங்கள் போடுங்கள்.
மகிழஞ்சேரி, கே. கணேசன்.

★ புரட்சிக் கனவில் ஓர் அன்புப்புனல்! கதை வேறு எதுக்கும் அழுவாத என்னை நிஜமாகவே அழச் செய்து விட்டது.
தாசனூர், எம். பெருமாள்.

★ 'காட்டில் மகிழ்ச்சி' படக்கதை சிந்திக்க வைத்தது. கதை + ஓவியம் வெகு ஜோர்...!
சங்கமங்கலம், எஸ்.ஜி. சிங்காரவேலு.

★ பத்ராசல ராமதாஸ் படக்கதை மிகவும் அருமையாக இருந்தது.
திருச்சி, வி. ஆனந்த்.


★ 'புத்தியா சொல்ல வந்தே' சிறுகதை ஒரு கருத்தை யார் சொன்னது என்று பார்க்காமல், என்ன சொல்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்' என்பதை உணர்த்துகிறது.
சங்கமங்கலம், எஸ். கவிதா.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 60/-; விமானத் தபால்: ரூ. 135/-.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 120/-; விமானத் தபால் ரூ. 270/-.



நீங்கள் கட்டிடக்கலை நிபுணராக விரும்பினால்
எல்லாவிஷயங்களும் கனகச்சிதமாக இருக்க வேண்டும்.

மிகச்சிறந்த கட்டிடக்கலை நிபுணராக வேண்டும் என்பதையே
மாபெரும் இலட்சியமாகக் கொண்டவள் இவள்.
தான் செய்யும் மாடல்களை அளப்பது, வரைவது, நிர்மா
ணிப்பது, உருவாக்குவது என அனைத்தையும் செய்பவள்.
செய்யும் அனைத்து வேலைகளையுமே வெற்றிகரமாக
முடிக்க நினைப்பவள்
ஆகையால் இவள் தேர்ந்தெடுப்பது, மிகச் சிறந்த ஜியாமெட்ரி செட்.
கோரஸ் சக்ஸஸ் : ப்ரோட்ராக்டர், டிவைடர், காம்பஸ், ஸ்கேல்—
அனைத்துமே ஆண்டுக் கணக்கில் தொல்லையின்றி நுட்பமான செயல்
திறனை அளிக்கவென்றே மிகவும் கச்சிதமாக உருவாக்கப்பட்டவை.
நீடித்துழைக்கும் சிவப்பு-வெளுப்பு மெட்டல் பாக்ஸில் வருகின்றன.
எந்தத் துறையிலும் சிறப்பாக செயலாற்ற உங்களுக்குத் தேவை உன்னதமானவை.
வெற்றிக்கு அடிகோலுபவை.



கோரஸ் சக்ஸஸ் ஜியாமெட்ரி செட்
வெற்றிக்கு கருவியாக திகழ்பவை

கோரஸ் (இந்தியா) லிட்., பம்பாய்-400 018 இந்தியாவெங்கும் கிளைகள் உள்ளன.

AKA/468/TM



MAGGI CLUBBERS FUN LOVERS
MAGGI CLUB
மேகி கிளப்
பரிசுகள், இலவசம்.
வனவிலங்குகளுடன்
பெறுவீர், உல்லாசம்!
குழந்தைகளே! மேகி கிளப்பில் சேருங்கள். வருடம் பூராவும் கொண்டாட்டம் பெறுங்கள். நியூஸ் லெட்டர்கள், பரிசுகள், விளையாட்டுகள் இன்னும் நீங்கள் செய்வதற்கு எத்தனை எத்தனையோ!
இந்த சின்னத்தை மேகி நூடுல்ஸ் 5 காலி உறைகளின் முன்பக்கத்திலிருந்து வெட்டி எடுத்து எங்களுக்கு அனுப்புங்கள். உங்கள் பெயர், விலாசத்துடன் உங்களுக்குப் பிடித்த பரிசையும் குறிப்பிட்டு எழுதுங்கள். நீங்கள் மேகி கிளப் உறுப்பினராக இருந்தால் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிட மறந்துவிடாதீர்கள். இதுவரை உறுப்பினர் ஆகவில்லை என்றால் இப்போது ஆகலாம்.
மேலே குறிப்பிட்ட விவரங்களை அனுப்பும்போது, உறுப்பினர் ஆக விரும்புவதாகவும் எழுதுங்கள். நாங்கள் உங்கள் பரிசுப் பொருளுடன் இலவச மேகி கிளப் உறுப்பினர் அட்டையையும் அனுப்புவோம்.
எங்கள் விலாசம் :
மேகி கிளப்
தபால்பெட்டி எண் : 5788,
புது டில்லி-110 055.
KING OF THE JUNGLE
TO LET
மேகி ''பர்ட்ஹவுஸ்'' உருவாக்குங்கள்!
Archie
ஆர்ச்சி காமிக்
MAGGI 2-minute noodles
EASY TO COOK GOOD TO EAT
Name:
Membership no.:
HTA 7105 TAM
மேலும் பெறுவீர்: இதுவரை ''லாஸ் ஆஃப் ஜங்கிள் கேம்'' நீங்கள் பெறவில்லையென்றால், இப்போது பெற்றுக்கொள்ளுங்கள்!